விலை ரூபா 25.00

திடீரென எரிந்தது இந்திய நிதி அமைச்சகம் பக்கம் 8



மீண்டும் படுகொலை பக்கம் 9



அதிர்ந்தது கந்தகார் பக்கம் 10



ஸ்பெயின் முதலிடம் பக்கம் 27



www.onlineuthayan.com

★

பக்கங்கள் : 28

# உதயன்

சுடர் 27
கதிர் 195

வள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 26 வெள்ளிக்கிழமை (08/06/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

### கிளி. முருகன் ஆலயத்தில் திருட்டு

கிளிநொச்சி, ஜூன் 8
கிளிநொச்சி விவேகானந்த நகர்ப் பகுதியில் உள்ள முருகன் ஆலயத்தின் கதவுகளை உடைத்து உள் நுழைந்த திருடர்கள் 10 லட்சம் ரூபா பெறுமதியான ஐம்பொன்னாலான விக்கிரகங்களை நேற்றுமுன்தினம் இரவு களவாடிச்சென்றுள்ளனர். (த-15-6)

## ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 20ஆவது தொடர் 18இல் ஆரம்பம்

ஜெனிவா,ஜூன் 8
ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைச் சபையின் 20 ஆவது கூட்டத் தொடர் இந்த மாதம் 18 ம் திகதி முதல் 26 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஜெனிவாவில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத் தொடரில் நாடுகளின் மனித உரிமை விவகாரங்கள் குறித்து ஆராயப்படவுள்ளதுடன் பல்வேறு விவாதங்களும் இடம்பெறவுள்ளன.

எனினும் இலங்கை தொடர்பில் எந்தவிதமான தீர்மானங்களோ பிரேரணையோ இம்முறை கூட்டத் தொடரில் கொண்டுவரப்படமாட்டாது என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்த வகையில் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரும் மனித உரிமைகள் விவகாரம் குறித்த ஜனாதிபதியின் விசேட பிரதிநிதியுமான மஹிந்த சமரசிங்க இந்த 20 ஆவது கூட்டத் தொடரில் கலந்து கொள்ளமாட்டார் 04↘

## வடக்கில் படைகளை விலக்கி தேர்தல் திகதியை அறிவிக்குக

### அமெரிக்காவின் புதிய தூதர் அழைப்பு

கொழும்பு, ஜூன் 8
வடக்கு, கிழக்கில் இராணுவத்தை விலக்கிக்கொண்டு, வடமாகாண சபைக்கான தேர்தல் திகதியை இலங்கை அறிவிக்க வேண்டும். இதையே இலங்கையிடம் இருந்து அமெரிக்கா எதிர்பார்க்கிறது - என்று இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள மிச்செலி சிசன் தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கை மீது குற்றஞ்சாட்டப்பட்ட சர்வதேச மனிதவுரிமைகளை மீறிய செயல்கள் குறித்து இலங்கை அரசு இதுவரை நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். 04↘



# மஹிந்த லண்டனில் இருந்தவேளை புதிய போர்க்குற்ற ஆதாரம் அம்பலம்

## பிரிட்டனின் 'இன்டிப்பென்டன்ட்' நாளேடு வெளியிட்டது





லண்டன், ஜூன் 8
இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ லண்டனில் தங்கியிருந்தவேளை - அவரது லண்டன் வருகைக்கு எதிராகப் புலம்பெயர்ந்த தமிழர்கள் பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த நேரத்தில்- போரின் இறுதிக்கட்டத்தில் இலங்கைப் படைகளால் தமிழ்ப் பெண்கள் மற்றும் இளைஞர்கள் மிக மோசமாக நடத்தப்பட்டமை குறித்த புதிய காணொலி மற்றும் ஒளிப்பட ஆதாரங்களை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியது லண்டனில் இருந்து வெளியாகும் 04↘

## பிரிட்டிஷ் பிரதமருடன் மஹிந்த சந்தித்து பேச்சு

லண்டன், ஜூன் 8
பிரிட்டன் மகாராணி எலிசபெத் பதவியேற்று 60 ஆண்டுகள் நிறைவையொட்டிய கொண்டாட்டத்தில் பங்கேற்பதற்காக லண்டன் சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

பொதுநலவாய நாடுகளின் செயலகத்தின் சார்பில் மகாராணிக்கு அளிக்கப்பட்ட மதிய போசன விருந்து லண்டன் மல்பரோ ஹவுஸில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த விருந்து ஆரம்பிப்பதற்கு சில நிமிடங்களுக்கு முன் பிரிட்டன் பிரதமரும் ஜனாதிபதி மஹிந்தவும் தனியாகச் சந்தித்துப் பேசியதாக ஜனாதி 04↘

## போர்க்குற்ற ஆதாரங்கள் மேலும் உள்ளன

லண்டன், ஜூன் 8
வன்னியில் இறுதி யுத்தத்தின்போது இலங்கைப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றம் தொடர்பான ஆதாரங்கள் புகைப்படங்களாகவும் காணொலிகளாகவும் மேலும் உள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த போர்க் குற்ற ஆதாரங்கள் 04↘

## அரசின் தெரிவுக்குழுவை தூக்கியெறிந்தது ஐ.தே.க.

கொழும்பு, ஜூன் 8
இலங்கையின் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு அரசால் முன்மொழியப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பிரதான எதிர்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி பங்கு பெறாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் கூட்டத்திலேயே இந்த விடயம் குறித்து முடிவெடுக்கப்பட்டதாக அந்தக்கட்சியைச் சேர்ந்த இரா. யோகராஜன் நேற்றிரவு பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது-

தெரிவுக் குழுவில் ஐ.தே.க. பங்குபெற வேண்டுமானால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதில் கலந்து கொள்ளக்கூடிய ஒரு சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று ஐ.தே.க. தலைவர், அண்மையில் நாடாளுமன்றத்தில் தெரிவித்தி 04↘

### சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 8
பருத்தித்துறை தனியார் மருத்துவமனை ஒன்றுக்கு முன்பாக அநாதரவாகக் கிடந்த சடலம் நேற்றுப் பிற்பகல் பருத்தித்துறைப் பொலிஸாரால் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சடலம் இதுவரை இனங்காணப்படவில்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (த-15)

## நில ஆக்கிரமிப்புக்கு எதிராக ஐ.நாவில் முறையிடப்படும்

### விநாயகமூர்த்தி எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 8
தமிழ் மக்களின் காணிகளை வகை தொகையின்றி இலங்கை இராணுவம் அபகரித்துவரும் விடயத்தை ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொள்ளவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி நேற்று வியாழக்கிழமை கொக்குவிலிலுள்ள அவரது இல்லத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பின்போது இதனைத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது அவர் 04↘

## அமெரிக்காவிடம் அறிக்கையா? கொழும்பு மீது டில்லி அதிருப்தி!

கொழும்பு, ஜூன் 8
கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை அமுல்படுத்துவது தொடர்பிலான உத்தேச அமுலாக்க யோசனைகளை இலங்கை அரசு நேரடியாக அமெரிக்காவிடம் கையளித்திருப்பது தொடர்பில் புதுடில்லி இராஜதந்திர ரீதியிலான எதிர்ப்பைக் கொழும்புக்குத் தெரியப்படுத்தியிருக்கிறது என உயர்மட்ட இராஜதந்திரியொருவர் நேற்றிரவு 'உதயனி'டம் தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபார்சுகளை ஜெனிவா மாநாட்டின் தீர்மானங்களுக்கேற்ப அமுல்படுத்துவது 04↘

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்றிக் காய்ச்சலைப் போன்ற வைரஸ் பாதிப்பால் இலங்கையில் ஒருவர் சாவு

**உலகெங்கும் ஆயிரக்கணக்கானோரைத் தாக்கிய பன்றிக்காய்ச்சலுக்கு காரணமான வைரஸை ஒத்த இன்னொரு வைரஸ் கிருமியே மேற்படி பிரச்சினைக்கு காரண மென தெரியவந்துள்ளது.**

கொழும்பு, ஜூன் 8

பன்றிக் காய்ச்சல் நோயை ஒத்த வைரஸ் பாதிப்புக் காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவருக்கு அங்கொடையில் அமைந்துள்ள உள ஆரோக்கிய நிறுவகத்தில் சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு குறித்த வைரஸ் தொற்றுக்கு இலக்கான நபர், மூச்சடைப்பின் காரணமாக உயிரிழந்துள்ளார் என்றும் சுகாதார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

உள ஆரோக்கிய நிறுவகத்தைச் சேர்ந்த ஊழியர்கள் மூவர், சுவாசப் பிரச்சினையால் அவதிப்பட்டதைத் தொடர்ந்து மருத்துவ ஆராய்ச்சி நிறுவகம் மற்றும் நோய்ப் பரம்பலியல் அலகு என்பன இது குறித்து சோதனைகளை நடத்தின.

இதனையடுத்து, அமெரிக்கா, கனடா, ஐரோப்பா மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளில் ஆயிரக்கணக்கானோரைத் தாக்கிய பன்றிக்காய்ச்சலுக்கு காரணமான எச்1 என்1 2009 வைரஸை ஒத்த இன்னொரு வைரஸ் கிருமியே மேற்படி பிரச்சினைக்கு காரணமென தெரியவந்தது.

மருத்துவ ஆராய்ச்சி நிறுவகம் மற்றும் அரசு நோய்ப் பரம்பலியல் அலகு என்பன இந்த வைரஸை பிரித்தெடுத்துள்ளன. இந்த வைரஸ் தாக்குதல் பற்றி, சுகாதார அமைச்சு ஏனைய வைத்திய சாலைகளுக்கும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இவ்வாறான நோய் பரவும் பட்சத்தில் தேவையான மருந்துகளை வைத்தியசாலைகளுக்கு வழங்கவும் சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது - என்றும் அமைச்சின் பேச்சாளரான வன்னி நாயக்க கூறினார். (ந)

## இலங்கை அமைச்சருக்கு கோவையில் எதிர்ப்பு

கோவை,ஜூன் 8

இந்தியாவின் கோவை பகுதிக்குச் சென்றுள்ள இலங்கை அமைச்சர் ஒருவருக்கு எதிர்ப்புத் தெரிவித்து இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற 100 பேர் வரை கைது செய்யப்பட்டனர்.

திருமண விழா ஒன்றில் பங்கேற்க இலங்கை அமைச்சர் கோவை சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் தங்கியுள்ள விடுதிக்கு முன் பல்வேறு அமைப்பினர் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களைப் பொலிஸார் கைது செய்து தடுத்து வைத்துள்ளதாக கோவை தகவல்கள் தெரிவிக்கின்றன. (த)

## பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் பீரிஸை சந்தித்துப் பேச்சு



லண்டன் சென்றிருந்த இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை, பிரிட்டன் அரசின் தரப்பில் எவரும் அதிகாரபூர்வமாகச் சந்தித்துப் பேசவில்லை. ஆனால் ஜனாதிபதியுடன் சென்றிருந்த ஜி.எல்.பீரிசுக்கு மட்டும் பிரிட்டன் வெளிவிவகார அமைச்சரைச் சந்திக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த)

லண்டன்,ஜூன் 8

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுடன் உறுதியாகவும் வெளிப்படையாகவும் பேச்சு நடத்தியுள்ளதாக பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக் தெரிவித்துள்ளார். இலங்கை வெளிவிவகார அமைச்சருக்கும், பிரிட்டன் வெளிவிவகார அமைச்சருக்கும் இடையிலான சந்திப்பு கடந்த செவ்வாய்க்கிழமை லண்டனில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக, பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக் தன்து அதிகாரபூர்வ 'டுவிற்றர்' பக்கத்தில், செவ்வாய்கிழமை இரவு தகவல் வெளியிட்டுள்ளார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சருடன் கரிசனைகுரிய எல்லா விவகாரங்கள் தொடர்பாகவும் உறுதியாகவும் வெளிப்படையாகவும் கலந்துரையாடியுள்ளேன் என்று அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

# பிரிட்டன் பிரதமருடன் ஒட்டிக் கொண்ட மஹிந்த

**கொமன்வெல்த் செயலர் கமலேஸ் சர்மாவின் மனைவி, நமீபிய அதிபர், அவரது மனைவி, நியுசிலாந்துப் பிரதமர் மற்றும் அவரது மனைவி ஆகியோருடன் ஜனாதிபதி மஹிந்தவுக்கு ஆசனம் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த விருந்தின் ஒரு கட்டமாக குழுப் படம் எடுக்கப்பட்டது. அப்போது பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனுக்கு அருகே சென்று நின்று கொண்டார் மஹிந்த ராஜபக்ஷ.**

லண்டன்,ஜூன் 8

பிரிட்டன் மகாராணிக்கு கொமன்வெல்த் செயலாளர் கமலேஸ் சர்மா வழங்கிய மதிய விருந்தின் போது, எடுக்கப்பட்ட குழுப்படத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனுடன் ஒட்டிக் கொண்டார்.

கொமன்வெல்த் தலைமையகமான மால்பரோ ஹவுசில் மகாராணிக்கு நேற்று முன்தினம் விருந்துபசாரம் அளிக்கப்பட்டது. இதில் 54 கொமன்வெல்த் நாடுகளின் தலைவர்கள் மற்றும் விருந்தினர்கள் பங்கேற்றனர்.

இதன்போது ஜனாதிபதி மஹிந்தவுக்கு எதிராக மால்பரோ ஹவுஸ் முன்பாக தமிழர்கள் முழக்கங்களை எழுப்பிக் கொண்டிருந்தனர்.

இந்த விருந்தில், பிரிட்டன் மகாராணிக்கு இடப்புறமாக - கொமன்வெல்த் செயலர் கமலேஸ் சர்மாவின் மனைவி, நமீபிய அதிபர், அவரது மனைவி, நியுசிலாந்துப் பிரதமர் மற்றும் அவரது மனைவி ஆகியோருடன் ஜனாதிபதி மஹிந்தவுக்கு ஆசனம் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த விருந்தின் ஒரு கட்டமாக குழுப்படம் எடுக்கப்பட்டது.

அப்போது பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனுக்கு அருகே சென்று நின்று கொண்டார் மஹிந்த ராஜபக்ஷ. அது முறைப்படி ஒழுங்குபடுத்தப்பட்டதாக இருக்கவில்லை என தெரிவிக்கப் பட்டது. (த)

## பொன்சேகா குறித்த பிரேரணையை சபையில் ஐ.தே.க. சமர்ப்பிக்காது

கொழும்பு,ஜூன் 8

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு இராணுவ நீதிமன்றம் வழங்கிய அனைத்துக் குற்றத் தீர்ப்புகளையும் நீக்கச் செய்வதற்கான தனிநபர் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்காதிருப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

இந்தப் பிரேரணையை வரைவதற்காக லக்ஸ்மன் கிரியெல்ல, விஜேதாஸ ராஜபக்ஷ, ரஞ்சித் பெரேரா ஆகியோர் தலைமையில் மூவர் கொண்ட குழுவொன்றை ஐ.தே.க. நியமித்திருந்தது.

எனினும் இந்தப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டாம் என சரத் பொன்சேகா கோரியுள்ளதாக ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல கூறினார். இது தனது சட்ட அந்தஸ்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் எனப் பொன்சேகா கருதுவதே இதற்கு காரணம். அவரின் கோரிக்கையை நாம் மதிக்கிறோம். எனவே இந்தப் பிரேரணையை சமர்ப்பிக்காதிருப்பதற்கு நாம் தீர்மானித்துள்ளோம்' என அவர் கூறினார். (த)

## பழிவாங்கும் படலம் தொடர்கிறது

### கூறுகிறார் பொன்சேகா

கொழும்பு, ஜூன் 8

என்னைப் பழிவாங்குவதற்கான முயற்சிகள் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. அதனாலேயே இவ்வாறான வழக்குகள் விலக்கிக் கொள்ளப்படாமல் உள்ளன.

பலரதும் தேவையின்நிமித்தம் சில காலங்களாக சிறைவாசம் அனுபவித்த போதிலும் என்னை விடுதலை செய்ய வேண்டிய சூழ்நிலை அரசுக்கு ஏற்பட்டு விட்டது. அதனால் என்னை விடுதலை செய்து விட்டார்கள்' என்று முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா தெரிவித்தார்.

சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்தை விரும்பும் இலங்கையர்களதும் உலகவாசிகளினதும் அழுத்தங்களின் நிமித்தமே எனக்கு இந்த விடுதலை கிடைக்கப்பெற்றுள்ளது' என்றும் சரத் பொன்சேகா மேலும் தெரிவித்தார்.

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்ற வீரர்களுக்கு அடைக்கலம் கொடுத்து அரசுக்கு எதிராக சதி செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா மற்றும் அவரது செயலாளர் சேனக டி சில்வா ஆகியோருக்கு எதிராகதொடரப்பட்டிருந்த வழக்கு நேற்று வியாழக்கிழமை, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சேனக டி சில்வா, சுகயீனம் காரணமாக நேற்று மன்றில் சமூகமளிக்கவில்லை. இதனால் இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் 21ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நீதிமன்றுக்குச் சமூகமளித்திருந்த சரத் பொன்சேகா, அங்கிருந்து வெளியேறும் போது ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு கூறினார். (த)

## சன் - சீ அகதிகள் கப்பல் தொடர்பில் மேலும் மூவர் மீது குற்றச்சாட்டு

மொன்றியல்,ஜூன் 8

2010 ஆம் ஆண்டு எம் வி சன்-சீ கப்பல் மூலம் இலங்கை அகதிகளை கனடாவுக்கு ஏற்றிச்சென்றமைக்காக மேலும் மூன்று பேர் மீது ஆள்கடத்தல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இதில் இரண்டு கனேடியப் பிரஜைகளும் உள்ளடங்குகின்றனர்.

கப்பலைத் தயார் செய்து நூற்றுக்கணக்கானவர்களைக் கனடாவுக்கு அழைத்து வர உதவினார்கள் என்ற குற்றச்சாட்டே இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது.

ஒன்ராறியோவில் வசிக்கும் நடராஜா மகேந்திரன் மற்றும் தம்பிநாயகம் ராஜரட்ணம் ஆகியோரே இந்தக் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ளனர் இவர்களை எதிர்வரும் வாரத்தில் பிரிட்டிஷ் கொலம்பியாவுக்கு அழைத்துச்செல்லப்பட்டு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குற்றம் சுமத்தப்பட்டுள்ள மூன்றாவது ஆள், சத்தியபவன் ஆசிர்வாதம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றம் நிரூபிக்கப்பட்டால், ஒரு மில்லியன் டொலர் அபராதம் அல்லது ஆயுள்கால சிறைத்தண்டனை வழங்கப்படலாம் என்று கனேடியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களால் கனடாவுக்கு அழைத்து வரப்பட்டதாக கூறப்படும் 492 இலங்கையர்கள் அகதி அந்தஸ்தைப் பெற்றுள்ளனர்.

19 பேருக்கு நாடு கடத்தல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஐந்து பேரைக் கொண்ட குடும்பம் ஒன்று அகதி அந்தஸ்து கோரலைக் கைவிட்டுள்ளது. (த)

## விஜயதாஸ ராஜபக்ஷ புலிகளிடம் நாட்டைக் காட்டிக் கொடுத்தவர்

### அமைச்சர் சம்பிக்க குற்றச்சாட்டு

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ, யுத்தம் நடந்தபோது விடுதலைப் புலிகளுக்கு நாட்டைக் காட்டிக் கொடுக்க முயன்றவர் என ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் இவரிடம் ஆலோசனைப் பெற்றுக் கொண்டதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய போதே சம்பிக்க ரணவக்க இவ்வாறு குறிப்பிட்டார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவு வழங்க மேற்கொள்ளப்படும் சூழ்ச்சிக்கும் இவரே ஆலோசனை வழங்குவதாக சந்தேகம் ஏற்பட்டுள்ளதென சம்பிக்க தெரிவித்துள்ளார். (த)

## இலங்கைத் தமிழ் அகதிகள் விசேட முகாமுக்கு மாற்றம்

சென்னை,ஜூன் 8

தமிழ்நாட்டின் கேரளா, கொல்லம் பகுதியின் சக்திகுளங்கரை கடற்கரை வழியாக ஆஸ்திரேலியாவுக்குத் தப்பிச்செல்ல முற்பட்ட போது பிடிபட்ட தமிழ்நாட்டின் பல்வேறு முகாம்களையும் சேர்ந்த சுமார் 123 இலங்கைத் தமிழ் அகதிகள், திருநெல்வேலியிலுள்ள புனர்வாழ்வுநிலையத்துக்கு அனுப்பி வைக்கும் முகமாக நேற்று [illegible] மண்டபம் விசேட பிரதி கலெக்டரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

தற்போதைய நிலைமை தங்களுக்குக் கவலையளிப்பதாக இருப்பதனால் இந்தியாவிலிருந்து தப்பிச்செல்ல தாங்கள் முயற்சித்ததாக இந்த அகதிகள் தெரிவித்துள்ளனர்.

ஆஸ்திரேலியாவுக்கு தப்பிச்சென்ற எங்களின் பெரும்பாலான ஆண்கள் ஒரு வருடத்திற்குள் ஆஸ்திரேலிய குடியுரிமையைப் பெற்றுள்ளனர். இதனால் நாங்களும் [illegible] அங்கு செல்ல விரும்புகின்றோம்' என பெண்ணொருவர் கூறினார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமையிலிருந்து சக்திகுளங்கரையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 151 அகதிகளில் 6 சிறுவர்கள் மற்றும் 2 பெண்கள் உட்பட 28 பேர் தமிழ்நாட்டு அகதி முகாமைச் சேர்ந்தவர்கள் என்பதை நிரூபிப்பதற்கான ஆதாரங்களைக் கொண்டிருக்காமையினால் அவர்களை நீதிமன்றக் காவலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேவேளை, 20 ஆண்கள் கொல்லம் உப சிறைச்சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். 2 பெண்கள் கொட்டரகர பெண்கள் சிறைச்சாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 4 சிறுவர்கள் கொல்லத்தில் உள்ள சிறுவர் இல்லத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகவும் பொலிஸார் கூறினர்.

தமிழ்நாட்டில் உள்ள 17 அகதி முகாம்களைச் சேர்ந்த அகதிகள் மண்டபம் இடைத்தங்கல் முகாமின் விசேடபிரதி கலெக்ரரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இவர்களில் 87 ஆண்களும் 17 பெண்களும் 19 சிறுவர்களும் அடங்குகின்றனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிலுநர் பதவிக்கும் அனுபவம் வேண்டுமாம்

## பட்டதாரிகளுக்கு நேர்முகத்தேர்வில் நேர்ந்த அவலம்

*யாழ்ப்பாணம், ஜூன் 8*

***பட்டதாரிப் பயிலுநர் பதவிக்கான நேர்முகத்தேர்வின் போது "உங்களுக்கு தொழில் முன்னனுபவம் உண்டா?" என்ற கேள்வியும் கேட்கப்பட்டது. பயிலுநர் பதவிக்கு முன்னனுபவத் தொழிற் சான்றிதழைக் கேட்பது எந்தவிதத்தில் நியாயம் என்று பட்டதாரிகள் இது குறித்து விசனம் தெரிவித்துள்ளனர்.***

பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று பல வருடங்களாகியும் வேலைவாய்ப்பின்றிக் காத்திருக்கும் பட்டதாரிகளை பயிலுநர் பதவிகளுக்கு இணைப்பதற்கான நேர்முகத்தேர்வு கடந்த 5ஆம் திகதி முதல் நேற்று வரை 3 தினங்கள் நடைபெற்றது.

இந்த நேர்முகத் தேர்வு குறித்து அனுப்பப்பட்ட அழைப்புக் கடிதத்தில் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களில் முன்னனுபவத் தொழிற் சான்றிதழும் ஒரு விடயமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இது பட்டதாரிகளிடையே பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தது.

அரச உத்தியோகம் கிடைக்கும் என்றெண்ணி பல வருடங்களாகக் காத்திருந்த பட்டதாரிகளிடம் எவ்வாறு முன்னனுபவத் தொழிற்சான்றிதழ் இருக்க முடியும் என்று அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அத்துடன் எந்தவித தொழில் முன்னனுபவமும் அற்றவர் என்பதைக் குறிக்கவே பயிலுநர் என்ற பதம் பயன்படுத்தப்படுகிறது. இந்த நிலையில் பட்டதாரிப் பயிலுநர் பதவிக்கு எதற்காக முன்னனுபவச் சான்றிதழ் என்ற விடயமும் பட்டதாரிகளுக்குப் புரியாத விடயமாகவே இருந்தது. எனினும் நேர்முகத் தேர்வின் போது குறித்த முன்னனுபவச் சான்றிதழ் குறித்து அதிகம் வினவமாட்டார்கள் என்றும் பட்டதாரிகள் எண்ணினர்.

ஆனாலும் முதற்கேள்வியாக முன்னனுபவம் உண்டா? என்பதே கேட்கப்பட்டது. இதனால் 2ஆம், 3ஆம் தினங்களில் நேர்முகத் தேர்வுக்குத் தோற்றிய பட்டதாரிகள் தொழிற்பயிற்சி முன்னனுபவச் சான்றிதழைப் பெறுவதற்காக தாம் தற்காலிகமாகப் பணி புரிந்த அலுவலகங்களுக்கு முன்னால் தவம் கிடந்ததையும் அவதானிக்க முடிந்தது. (ங)

கருணை இல்ல சிறுமி வழக்கு:

## சம்பவ இடத்தில் வைத்து விசாரணை செய்ய அனுமதி

யாழ்ப்பாணம்,ஜூன் 8

உரும்பிராய் கருணை இல்லத்தில் தங்கியிருந்த சிறுமி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமை தொடர்பான வழக்கில் பாதிக்கப்பட்ட சிறுமியை, இல்லத்தில் சம்பவம் நடந்த இடத்துக்கு அழைத்துச் சென்று விசாரணை செய்ய யாழ்.நீதிமன்றம் பொலிஸாருக்கு நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுமியின் நலனைக் கவனிப்பதற்காக சிறுமி சார்பில் ஆஜராகும் சட்டத்தரணியும் சம்பவ இடத்துக்குச் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

இந்த வழக்கு யாழ்.நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதன் போதே சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு உரும்பிராயில் உள்ள கருணை இல்லத்தில் சிறுமி துஷ்பிரயோகம் செய்யப்பட்ட இடத்துக்கு அவரை அழைத்துச் சென்று விசாரணை செய்ய அனுமதி வழங்குமாறு கோப்பாய் பொலிஸார் நீதிமன்றில் நேற்று அனுமதி கோரினர்.

அதனைப் பரிசீலித்த நீதிவான் அதற்கு அனுமதி வழங்கினார். அழைத்துச் செல்லப்படும் சிறுமியின் நலனைக் கவனிப்பதற்காக அவரது சட்டத்தரணியும் செல்ல வேண்டும் எனக் கோரியதை அடுத்து மன்று அதற்கும் அனுமதியளித்தது.

கடந்த மார்ச் மாதம் பிரஸ்தாப சிறுமி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமை தெரிய வந்ததை அடுத்து அந்த இல்லப் பொறுப்பாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. விளக்கமறியலில் வைக்கப்பட்ட அவர் பின்னர் பிணையில் விடப்பட்டு விசாரணை நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

## யாழ்.செயலகத்தில் செயற்படும் வேலைவாய்ப்பு வழிகாட்டல் பிரிவு

யாழ்ப்பாணம், ஜூன் 8

யாழ்.மாவட்டத்துக்கான வேலைவாய்ப்பு வழிகாட்டி நிலையம் கடந்த ஏப்ரல் மாதம் முதல் யாழ்.மாவட்ட செயலகத்தில் திட்டமிடல் பிரிவுடன் இணைந்ததாகச் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த வேலைவாய்ப்பு வழிகாட்டி நிலையத்தின் ஊடாக படித்த வேலையற்ற இளைஞர், யுவதிகள் தமது பதிவுகளை மேற்கொள்வதுடன் தொழில் வழங்குநர்களும் தமக்குத் தேவையான தொழில் தொடர்பாக ஆளணி விவரங்களைப் பதிவு செய்து கொள்ள முடியும்.

தற்போது நாடுமுழுவதும் செயற்படுத்தப்பட்டு வரும் மஹிந்த சிந்தனையின் தூரநோக்குக்கு அமைவாக படித்துவிட்டு வேலையற்றிருக்கும் இளைஞர் யுவதிகளுக்கு அவர்களின் தராதரத்துக்கு ஏற்ப வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் தொழில் வழங்குநர்கள் தமக்குத் தேவையான ஆளணியினரைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையிலும் மனிதவள வேலை வாய்ப்புத் திணைக்களத்தினால் மாவட்டங்கள் தோறும் வேலைவாய்ப்பு வழிகாட்டி நிலையம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனத்தின் பதிவு செய்து கொள்ள விரும்புவோர் அதற்கான விண்ணப்பப்படிவங்களை நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளமுடியும் என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார். (ம-14)

## அக்கறைப்பற்று பிரதேச உறுப்பினர் மீது 10 ஆவது நபரும் வழக்கு தாக்கல்

யாழ்ப்பாணம்,ஜூன் 8

வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி சுமார் 70 லட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட தொகைப் பணத்தை மோசடி செய்த அக்கரைப்பற்று பிரதேச சபை உறுப்பினருக்கு எதிராக நேற்றைய தினமும் யாழ்.நீதிமன்றில் மேலும் 2 பேர் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

ஏ.அப்துல் அஸ்மி கபூர் என்பவருக்கு எதிராகவே இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. இத்துடன் இவருக்கு எதிராக 10 வழக்குகள் தாக்கலாகியுள்ளன. ஏற்கனவே 8 பேர் மீது வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

யாழ்.நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது சந்தேக நபரை மன்றில் ஆஜராகுமாறு அறிவித்தல் அனுப்பப்பட்டது. எனினும் அவர் ஆஜராகாததால் பகிரங்கப் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நிலையில் அவர் சட்டத்தரணி மூலமாக மன்றில் சரணடைந்தார். விளக்கமறியலில் வைக்கப்பட்ட அவர் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஒரு லட்சத்து ஐயாயிரம் ரூபா ரொக்கப் பிணை மற்றும் 4 லட்சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியான 10 ஆள் பிணையில் இவர் விடுவிக்கப்பட்ட போதும் பிணை எடுக்க எவரும் முன்வராததனால் அவர் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்தநிலையில் அவருக்கு எதிராக மேலும் இருவர் சுமார் 11 லட்சம் ரூபா பண மோசடி செய்த குற்றச்சாட்டில் யாழ்.நீதிமன்றில் சட்டத்தரணி கே.சுகாஷ் மூலமாக வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

யாழ்.திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில் வெளிநாட்டு விசா நிலையம் ஒன்றை நடத்திவந்த அஸ்மிகபூர் என்ற குறித்த சந்தேகநபர் ஒரு மாதத்துக்கு முன்பாக சுமார் 70 லட்சத்துக்கும் மேற்பட்ட பணத்தை மோசடிசெய்துஅலுவலகத்தை மூடிவிட்டு அக்கரைப்பற்றுக்கு திரும்பியிருந்தார். அவரிடம் லட்சக் கணக்கில் பணத்தை இழந்தவர்கள் வழக்கைத் தொடர்ந்துள்ளனர்.

நேற்றைய தினம் மோசடிப் பேர்வழியான சந்தேக நபரைப் பிணையில் விடுவிக்கும்படி அவரது சட்டத்தரணி கடுமையாக வாதாடினார். எனினும் மனுதாரர் சார்பு சட்டத்தரணி அதனை ஆட்சேபித்ததனால் பிணை நிராகரிக்கப்பட்டது.

(ம-4)

## காலாவதியான பொருள் இருந்ததால் அபராதம்

தென்மராட்சி, ஜூன் 8

வர்த்தக நிலையத்தில் காலாவதியான உணவுப் பொருள்களை வைத்திருந்த மீசாலை வடக்கு வர்த்தகருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினரால் நடத்தப்பட்ட திடீர் பரிசோதனையின் போது கலாவதியான உணவுப் பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த வர்த்தகருக்கு எதிராக பொதுச் சுகாதார பரிசோதகரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது அபராதம் விதிக்கப்பட்டது.

(ம-9)

*நிகழ்வுகள்*

## இன்று

**பாராட்டு விழா**

வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் கடமையாற்றி இடமாற்றம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கு பிரியாவிடை நிகழ்வும், பாராட்டு விழாவும் முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

பிரதேச செயலக நலன் புரி சங்கத்தின் ஏற்பாட்டில் பிரதேச செயலர் க.முரளி தலைமையில் நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ம-100)

**கலந்துரையாடல்**

கோண்டாவில் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் விழுது நிறுவனம் நடத்தும் நூலக வாசகர் வட்டத்தில் அபிவிருத்தி மற்றும் செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் பிற்பகல் 3மணிக்கு கோண்டாவில் பொதுநூலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் நூலக வாசகர் வட்ட மாணவர்கள் மற்றும் கிராமத் தொண்டர்கள், ஆர்வலர்கள் கலந்துகொண்டு கருத்துக்களை முன்வைக்கலாம் என்று கோண்டாவில்பொது நூலகர்எம்.அனிதா தெரிவித்துள்ளார். (ம-14)

***

உழவனூர் கிராம மக்களுடனான கலந்துரையாடலும், சின்மயா அறநெறிப் பாடசாலை அங்குரார்ப்பண நிகழ்வும் இன்று நடைபெறவுள்ளன. "மாதர் சக்தி" எனும் தலைப்பில் இடம்பெறும் கலந்துரையாடல் நிகழ்வு பிற்பகல் 2.30 மணிக்கும், அறநெறிப்பாடசாலையின் அங்குரார்ப்பண நிகழ்வு பிற்பகல் 3.30 மணிக்கும் நடைபெறவுள்ளன. (ம-14)

***

பருத்தித்துறை பிரதேச சபை புலோலி பொதுநூல் நிலையத்தின் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் பிற்பகல் 2மணிக்கு புலோலி பொது நூல் நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. முன்பள்ளி மாணவர்களுக்கான கதை கூறும் நேரம் எனும் நிகழ்வு தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதால் பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களைக் கலந்துகொள்ளுமாறு பிரதேச சபைத் தலைவர் பூ. சஞ்சீபன் அறிவித்துள்ளார். (ம-8)

**பொதுக்கூட்டம்**

நவாலி கிழக்கு முதியோர் சங்கத்தின் பொதுக்கூட்டம் மாலை 4மணிக்கு நவாலி பொது நோக்கு மண்டபத்தில் தலைவர் க. பவுலின் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-100)

**கலை நிகழ்வு**

பருத்தித்துறை நகரசபை பொது நூலகத்தில் சிறுவர்களுக்கான கலை நிகழ்வு காலை 9 மணிக்கு சபைத் தலைவர் சபா. ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-8)

**நடமாடும் சேவை**

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் நுணாவில் பொது நூலகத்தின் நடமாடும் நூலக சேவை காலை 9.30 மணிக்கு நுணாவில் மேற்கு அம்பாள் முன்பள்ளி மண்டபத்தில் நடைபெறும். நுணாவில் பொதுநூலக அபிவிருத்திச் [illegible] சிகாமணி தலைமையில் நடைபெறும் நடமாடும் நூலக சேவையினை நகராட்சி மன்ற தவிசாளர் இ.தேவசகாயம் பிள்ளை ஆரம்பித்து வைப்பார்.

நடமாடும் நூலக சேவையில் அண்மையில் கொள்வனவு செய்யப்பட்ட நூல்கள், மாணவர்களுக்குரிய புத்தகங்கள் போன்றவை காட்சிக்கு வைக்கப்படவுள்ளதால் நுணாவில் பிரதேசத்தைச் சேர்ந்த பொதுமக்கள்மாணவர்களைபங்குபற்றுமாறு நூலகர் ந. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார். (ம-9)

**வாசிப்பு முகாம்**

வடமராட்சிக் கல்வி வலயம், வல்வெட்டித்துறை நகர சபை பொதுநூல் நிலையம் மற்றும் நகரப் பாடசாலைகள் இணைந்து நடத்தும் மொழி விருத்திக்கான வாசிப்பு முகாம் காலை 9 மணிக்கு வல்வெட்டித்துறை மகளிர் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.நகர சபைத் தலைவர் ந. அனந்தராஜ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் [illegible] நந்தகுமார் கலந்து கொள்வார். (ம-8)

## வழிகாலைத் திருத்துமாறு மாநகரசபையிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன் 8

பழைய பூங்கா வீதியில் உள்ள சிறுகால்வாய் மண்ணாலும், குப்பைகளாலும் முடப்பட்டுள்ளதால் மழை காலம் வெள்ளம் பாய முடியாமல் குடிமனைகளுக்குள் வெள்ளம் புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று சுண்டுக்குழி சனசமுக நிலையம் யாழ்.மாநகரசபை ஆணையாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

சுண்டுக்குழி சனசமுக நிலையத்துக்கு முன்பாக உள்ள பழைய பூங்கா வீதியில் உள்ள வெள்ளம் பாயும் சிறுவாய்க்கால் நீண்டகாலமாக மண்ணாலும், குப்பைகளாலும் அடைபட்டுள்ளது. அத்துடன் கால்வாய் சேதமடைந்தும் காணப்படுகிறது.

இதன் காரணமாக மழை காலங்களில் கால்வாய் ஊடாக வெள்ளம் பாய முடியாமல் குடிமனைகளுக்குள் வெள்ளம் தேங்கும் நிலை உள்ளது.

குடிமனைகளுக்குள் வெள்ளம் தேங்கி நிற்பதால் தொற்று நோய்கள் ஏற்படுவதுடன் நுளம்புகளின் பெருக்கமும் அதிகரிக்கும். எனவே வரப்போகும் மழை காலத்துக்கு முன்னதாக சிறுகால்வாயைச் சீர் செய்து தருமாறு யாழ்.மாநகர சபைக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 4 வருடங்களாக தொடர்ச்சியாக பல கடிதங்கள் அனுப்பி வைத்தும் இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்று சுண்டுக்குழி சனசமூக நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது. (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்காவிடம் அறிக்கையா?...

01↘ எவ்வாறு என்பது தொடர்பிலான திட்டவரைபை அண்மையில் அமெரிக்காவுக்குச் சென்ற வெளியுறவுத்துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் சமர்ப்பித்திருந்தார்.

ஐந்து அம்சங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள இந்த அமுலாக்க யோசனைகள் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்படும் எனவும் இலங்கை அரசு அமெரிக்காவிடம் உறுதியளித்திருந்தது. இந்த நிலையில், இந்தியாவைப் புறந்தள்ளிவிட்டு, இலங்கை நேரடியாக அமெரிக்காவுடன் தொடர்பு கொண்டு செயற்படுவது இந்தியாவுக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளதால், அந்த அதிருப்தியை புதுடில்லி, கொழும்புக்கு இராஜதந்திர ரீதியில் அறிவித்திருக்கிறது என மேற்கண்ட மூத்த இராஜதந்திரி 'உதயனி'டம் குறிப்பிட்டார்.

ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டின்போது இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் கொண்டுவரப்பட்ட வேளையில், அதனை நெகிழ்வுபடுத்த இந்தியா பெரிதும் உதவியது. ஆனால், இந்தியாவைப் புறந்தள்ளிவிட்டு இலங்கை நேரடியாக அமெரிக்காவுடன் செயற்படுகிறது. இலங்கையால் கையளிக்கப்பட்ட அறிக்கை தொடர்பில் அமெரிக்கா எம்மை அறிவுறுத்தியிருக்கிறது. இதனை கொழும்பு எம்மிடம் நேரடியாகவே கூறியிருக்கலாம். எம்மைப் புறந்தள்ளிச் செயற்படுவது ஆரோக்கியமானதல்லவென எமது இராஜதந்திர ரீதியிலான எதிர்ப்பை கொழும்பிடம் தெரிவித்திருக்கிறோம்'' என்றும் அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டார்.

## போர்க்குற்ற ஆதாரங்கள் மேலும் உள்ளன

01↘ நேற்று இரவு மேற்குலக தொலைக்காட்சிகளிலும் இணையத்தளங்களிலும் வெளியிடப்படும் என இணையத்தளங்கள் நேற்று இரவு செய்தி வெளியிட்டிருந்தன. இதுவரை வெளியான போர்க்குற்ற ஆதாரங்களை விட இவை புதியவை எனவும் மிக மோசமான மனித உரிமை மீறல்களை இவை தெளிவாக வெளிப்படுத்துவதாகவும் இணையத்தளங்கள் வெளியிட்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (த)

## அரசின் தெரிவு.....

01↘ ருந்த கருத்துக்களுக்கு இதுவரை அரச தரப்பிலிருந்து எந்தப் பதிலும் இல்லை என்பதாலேயே இந்த முடிவு எட்டப்பட்டது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையையும், அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தையும் அடிப்படையாகக் கொண்டு புரிந்துணர்வை ஏற்படுத்த பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று ரணில் விக்ரமசிங்க தெரிவித்திருந்தார். இந்தக் கருத்துக்களுக்கு அரசு இணங்கினால் தமது கட்சி இந்தக் குழுவில் இடம்பெறலாம் என்றும் ரணில் கூறியிருந்தார்.

ஆனால், அரச தரப்பு இதுவரை இது தொடர்பில் நேரடியான ஒரு பதிலை வழங்கவில்லை என்றும், அப்படியான ஒரு பதிலை அரசு வழங்கும் வரை, தெரிவிக்குழுவில் ஐக்கிய தேசியக் கட்சி பங்குபெறுவது குறித்த முடிவை எடுக்க முடியாது என்று கட்சி தீர்மானித்துள்ளது.

பல ஆண்டுகளாக நீடித்திருக்கும் இனப்பிரச்சினைக்கு முடிவு காண அரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முன்வைக்கும் எந்த ஒரு தீர்வுக்கும் ஐ.தே.க. தடையாக இருக்காது என்பதை எமது கட்சி பகிரங்கமாகவே அறிவித்துள்ளது - என்றார்.

## வடக்கில் படைகளை விலக்கி...

01↘ இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவர் நியமனத்துக்கான உறுதியை நேற்றுமுன்தினம் அமெரிக்க செனட் சிசனுக்கு வழங்கியது. நியமனத்தைப் பெற்ற பின் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு, இலங்கை அரசு மீது குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு -

இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக தமிழர் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இறுதிப் போரின் போது இடம்பெற்றவை எனக் கூறப்படும் சர்வதேச மனித உரிமைச் சட்டத்தை மீறிய செயல்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படவில்லை. அத்துடன் இலங்கையில் நல்லிணக்க முயற்சிகளும் மந்த கதியில் செல்கின்றது. இலங்கையின் வடக்கு, கிழக்கில் இராணுவத்தை விலக்கிக் கொள்ளல் மற்றும் வடக்கு மாகாண சபைக்கான தேர்தல்திகதியை அறிவித்தல் ஆகிய இரண்டு முன்னேற்ற பக்கங்களை இலங்கையிடம் இருந்து அமெரிக்கா எதிர்ப்பார்க்கிறது - என்றார் அவர்.

எனவே, இலங்கைக்கான தூதுவரான சிசனின் முக்கியப் பணி இலங்கையின் மனித உரிமைகள்விவகாரமாகவேஅமையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரிட்டிஷ் பிரதமருடன்...

01↘ பதியின் ஊடகச் செயலாளர் பந்துல ஜயசேகர நேற்று ஊடகங்களுக்குத் தகவல் வெளியிட்டார்.

ஒரு சில நிமிடங்கள் மட்டுமே இந்தச் சந்திப்பு நடைபெற்றதாக லண்டன் செய்திகள் தெரிவிக்கின்றன.

சந்திப்பு நடைபெற்றதாக கூறிய பந்துல ஜயசேகர இந்தச் சந்திப்பின்போது பிரிட்டன் பிரதமருடன் என்ன விடயங்கள் பற்றி ஜனாதிபதி பேசினார் என்பதைத் தெரிவிக்கவில்லை. சந்திப்பு சுமுகமாக நடைபெற்றது என்று மட்டுமே அவர் கூறினார். இதேவேளை ஜனாதிபதி மஹிந்த நேற்று முன்தினம் மாலை லண்டனில் இருந்து புறப்பட்டு றோமுக்குச் சென்றுள்ளார். அங்கு அவர் பாப்பரசர் 16ஆம் பெனடிக்ற்றை சந்திக்கிறார். (த)

## நில ஆக்கிரமிப்புக்கு எதிராக...

01↘ மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உள்ள தமிழ் மக்களின் காணிகளை வகை தொகையின்றி இலங்கை இராணுவம் அபகரித்து வருகிறது.

குறிப்பாக வடக்கில் இராணுவத்துக்கான நில ஆக்கிரமிப்பில் வடக்கு மாகாண ஆளுநர் மிகவும் தீவிரமாக ஈடுபட்டுள்ளார் எனத் தெரியவருகிறது.

இவ்வாறு தமிழ் மக்களின் வாழ்விடங்களை இராணுவம் ஆக்கிரமித்துப் பின்னர் அந்தப் பகுதியில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதுதான் அராஜகமாக ஆட்சி நடத்தும் மஹிந்த அரசின் திட்டம்.

ஏற்கனவே ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் மக்களிடமிருந்து பறிக்கப்பட்டு விட்டன. தமிழ் மக்களின் வாழ்விடங்களை இராணுவம் ஆக்கிரமிப்புச் செய்துவருவது தொடர்பாக ஐ.நா. சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டு செல்வோம். அதுமட்டுமன்றி புலம்பெயர் நாடுகளிலுள்ள அனுதாபிகளுக்கும் இந்த விடயத்தை கூட்டமைப்பு தெரியப்படுத்தவுள்ளது.

கைப்பற்றப்பட்ட நாடு போல இராணுவ ஆட்சியை வடக்கில் நடத்திவருகிறது மஹிந்த அரசு. இராணுவக் குறைப்பு எதுவுமின்றி அடக்குமுறைக்குள் வடபகுதி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். ஒரு நாடு இரண்டு தேசம் போல தெற்கை ஒரு தேசமாகவும் வடக்கு - கிழக்கை இன்னொரு தேசமாகவும் நடத்தி வருகிறது. தெற்கில் சிவில் நிர்வாகமும், தமிழர் பகுதிகளில் இராணுவ நிர்வாகமும் இடம்பெற்று வருகின்றன.

இராணுவம் நினைத்ததைத் தமிழர் பகுதிகளில் செய்து வருகிறது. சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெற்று வருகின்றன. தமிழ் மக்களுக்கு அநீதிகள் இழைக்கப்படுகின்றன. இவற்றை யாரிடம் முறையிடுவது?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்தி தமிழ் மக்களின் தலைமைகள் ஓரணியில் திரண்டு தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும் - என்றார். (த-3)

## ஐ.நா. மனித உரிமைகள் சபையின்...

01↘ என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அவருக்குப் பதிலாக உயர்மட்ட அதிகாரிகள் குழுவொன்று இந்த அமர்வுகளில் கலந்துகொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக அமைச்சர் மஹிந்த சமரசிங்கவின் ஆலோசகர் நிஷான் முத்துக்கிருஷ்ணன் மற்றும் ஷவேந்திர பெர்னாண்டோ ஆகியோர் இலங்கையிலிருந்து ஜெனிவா செல்லவுள்ளனர். இவர்களுடன் ஜெனிவாவில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகத்தின் உயர் அதிகாரிகளும் இணைந்து மனித உரிமைகள் சபையின் 20 ஆவது கூட்டத் தொடரின் அமர்வுகளில் கலந்துகொள்ளவுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 20 ஆவது கூட்டத் தொடர் குறித்து பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க கருத்து வெளியிடுகையில்;

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 20 ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக எந்தவிதமான நகர்வுகளும் முன்னெடுக்கப்படமாட்டாது என்று நம்புகின்றோம்.

இதன் காரணமாக நான் இந்தக் கூட்டத் தொடரில் கலந்து கொள்ளவதில்லை என்று தீர்மானித்துள்ளேன். 21 ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத் தொடரில் நான் முக்கியமாக கலந்து கொள்ளவுள்ளேன் என்றார். (த)

## மஹிந்த லண்டனில்...

01↘ தி இண்டிபென்டன்ட் நாளேடு. பிரிட்டன் மகாராணி எலிஸபெத் பதவியேற்று 60 ஆண்டுகள் நிறைவையொட்டி லண்டனில் நடைபெற்ற கொண்டாட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த கலந்துகொண்டிருந்த நேரம் பார்த்து இந்தப் போர்க்குற்ற ஆதாரம் அம்பலப்படுத்தப்பட்டமை பெரும் பரபரப்பாக அமைந்தது.

தனக்குக் கிடைத்துள்ள காணொலி ஒன்று, வேண்டுமென்றே மார்பகங்கள் மற்றும் பாலுறுப்புகள் வெளித்தெரியத்தக்கதாக - ஆடைகள் களைப்பட்ட நிலையில் டசின் கணக்கான பெண்கள் உள்ளிட்ட 100இக்கும் அதிகமான தமிழர்களின் பிணக்குவியலின் முன்பாக இலங்கைப் படையினர் களிப்புடன் நின்பதைக் காட்டுகின்றது என இண்டிபென்டன்ட் நாளேடு தனது செய்தியில் தெரிவித்துள்ளது.

இது தமிழர்கள் எந்தளவுக்கு சித்திரவதை செய்யப்பட்டு- நீதிக்குப் புறம்பாக படுகொலை செய்யப்பட்டனர் என்பதை வெளிப்படுத்துகிறது எனவும் இந்தக் காணொலி இலங்கைப் படையினர் வழக்கமாகப் பயன்படுத்தும் இணைய நிலையம் ஒன்றில் பணியாற்றும் ஒருவரால் தமக்கு வழங்கப்பட்டதாகவும் அந்த நாளேடு தெரிவித்துள்ளது.

இண்டிபெண்டண்ட் நாளேடு வெளியிட்டுள்ள இந்தப் போர்க்குற்றம் தொடர்பான செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்தக் காணொலி தமிழர்கள் இறந்த பின்னரும் எவ்வாறு இலங்கைப் படையினரால் நடத்தப்பட்டனர் என்பதை வெளிப்படுத்துகிறது.

கறுப்பு - வெள்ளையிலான கைத்தொலைபேசிப் படங்கள் தார்பாய்களின் மீது 100இக்கும் அதிகமான சடலங்கள் போடப்பட்டுள்ளதைக் காட்டுகின்றன.

இவற்றில் சில ஆண்களின் சடலங்கள் விடுதலைப் புலிகளின் சீருடையில் காணப்படுகின்றன. பெரும்பாலான சடலங்கள் சாதாரண உடையுடன் இருக்கின்றன.

இவை போராளிகளா அல்லது பொதுமக்களா அல்லது இருதரப்பினருடையதுமா என்று சொல்வது சாத்தியமில்லை.

விடுதலைப் புலிகள் பொதுமக்களை மனிதக்கேடயங்களாகப் பயன்படுத்தியதாகவும் குற்றச்சாட்டுகள் உள்ளன.

அதேவேளை இலங்கைப் படையினர் பொதுமக்கள் மீது எறிகணைத் தாக்குதல்களை நடத்தியிருந்தனர்.

தமிழ்ப் பெண்களின் சடலங்கள் தனியாகக் கையாளப்பட்டுள்ளன என்பது மட்டும் தெளிவாகிறது.

பெரும்பாலான ஆண்களின் சடலங்கள் முழுமையான ஆடைகள் அல்லது மேலாடை இல்லாமல் இருக்கின்றன.

ஆனால் பெரும்பாலான பெண்களின் சடலங்கள் ஆடைகள் வேண்டுமென்றே முற்றிலும் களையப்பட்டு- அவர்களின் மார்பகங்களும், பாலுறுப்புகளும் வெளியே தெரியத்தக்கதாகக் காணப்படுகின்றன.

முன்னர் வெளியான காணொலிப் பதிவுகளில் தமிழ்ப்பெண்கள் கொல்லப்படுவதற்கு முன்னரோ பின்னரோ ஆடைகள் களைப்பட்ட நிலையில் இருந்ததை வெளிப்படுத்தியிருந்தன. இதன் அடிப்படையில் இலங்கைப் படையினர் பாலியல் வன்புணர்வு அல்லது பாலியல் துன்புறுத்தல்களில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டுகளை மனித உரிமை அமைப்புகள் முன்னெடுத்து வருகின்றன.

இசைப்பிரியா என்ற தமிழ்ப் பெண் ஊடகவியலாளர் கைகள் கட்டப்பட்ட நிலையில் சுட்டுக்கொல்லப்பட்டுக் கிடந்த காட்சியை சனல் -4 தொலைக்காட்சி வெளியிட்டிருந்தது. அவர் கொல்லப்படுவதற்கு முன்னர் பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இந்தப் புதிய காணொலி குறித்து ஜனாதிபதியின் பேச்சாளர் பந்துல ஜெயசேகரவிடம் தி இன்டிபென்டன்ட் நாளேடு கூறியபோது, இது இலங்கை அரசுக்கும் படைகளுக்கும் அவமானத்தை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சி என்று கூறியுள்ளார்.

அதேவேளை லண்டனைச் சேர்ந்த சட்டவாளர் வாசுகி முருகதாஸ், இந்தக் காணொலி உண்மை என்றே தாம் நம்புவதாக தெரிவித்துள்ளார். இந்தக் காணொலி இலங்கைப் படையினர் வழக்கமாகப் பயன்படுத்தும் இணைய நிலையம் ஒன்றில் பணியாற்றும்- பெயர் வெளிப்படுத்தப்படாத - தமது தரப்பாளர் ஒருவர் மூலமே இலங்கையில் இருந்து பெறப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கைப் படையினர் தமது கைப்பேசிகளில் இருந்து படங்களையும் காணொலிகளையும் மின்னஞ்சல் செய்வதற்காக தரவிறக்கம் செய்து தருமாறு அந்த இணைய நிலைய உரிமையாளரிடம் கேட்பது வழக்கம். ஒரே கைபேசியில் எடுக்கப்பட்டுள்ள 32 காணொலிகளையும் 26 ஒளிப்படங்களையும் இன்டிபென்டன்ட் பார்வையிட்டுள்ளது.

இவற்றில் பெரும்பாலான படங்கள் அடையாளம் தெரியாத இடமொன்றில் கிடக்கும் பிணக்குவியல்களை காட்சிப்படுத்துகின்றன. கைது செய்யப்பட்ட புலிகள் கைவிலங்கிடப்பட்ட நிலையில் பஸ் ஒன்றில் ஏற்றப்பட்டிருப்பதை ஏழு படங்கள் காட்டுகின்றன. அவர்களில் பலர் சிறுவர்கள்.

இந்தப் படங்கள் இலங்கைப் படையின் பெண் சிப்பாய் ஒருவராலேயே எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

அவரது குரலும், அவர் பிற படையினருடன் சிங்களத்தில் உரையாடுவதும் இதில் பதிவாகியுள்ளது.

மேலும் இரண்டு படங்கள் அவர், இராணுவ வாகனம் ஒன்றைச் செலுத்துவதையும், இறுதிக் காணொலி அந்தச் சிப்பாய் வீட்டில் தனது குடும்பத்தினருடன் இருப்பதையும் காட்டுகின்றன.

இவையெல்லாம் போலி என்று கூறுவது மிகவும் கடினமானது. இது இலங்கைப் பெண் சிப்பாயின் கதையை தெளிவாக கூறுகிறது என்று கூறியுள்ளார் வாசுகி முருகதாஸ். இலங்கைப் படையினர் பெண்களின் சடலங்களை நிர்வாணப்படுத்தியிருப்பதற்கு இரண்டு சாத்தியங்கள் இருக்கலாம். அவர்கள் கொல்லப்படுவதற்கு முன்னர் பாலியல் வன்புணர்வுக்கு அல்லது பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டிருக்க வேண்டும்.அல்லது இறந்த பின்னர் நிர்வாணப்படுத்தியிருக்க வேண்டும். மிருகங்கள் மட்டும் தான் இவற்றை விரும்பும் என்று அவர் மேலும் கூறியுள்ளார்- என்று இன்டிபென்டன்ட் நாளேடு வெளியிட்டுள்ள செய்தியில் கூறப்பட்டுள்ளது.

போர்க்குற்றம் தொடர்பான புதிய ஆதாரங்கள் இப்போது வெளியாகியுள்ளமை இலங்கை அரசுக்கு சர்வதேச அரங்கில் மேலும் சிக்கல்களையும் நெருக்கடிகளையும் உண்டுபண்ணும் என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.அத்துடன் போர்க்குற்றம் தொடர்பான விசாரணையை மேலும் வற்புறுத்துவதற்கான அழுத்தமாகவும் இது அமையும் என்று கூறப்படுகிறது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தமிழ்க் கைதிகள் பிரச்சினை தீர்வதற்கு அறிகுறி?

கொழும்பு மகஸின் சிறையில் உண்ணாவிரதம் இருந்து வந்த சுமார் 90 தமிழ்க் கைதிகளும் தமது பேராட்டத்தைக் கைவிட்டுள்ளதாக வந்துள்ள செய்தி அந்தக் கைதிகளின் உறவினர்களுக்கு மட்டுமல்ல அவர்களின் நலன்களில் அக்கறையுள்ள அனைவருக்குமே மகிழ்ச்சியளித்திருக்கக்கூடிய செய்தியாகும்.

தங்களது சிறைக்கூடங்களுக்குள் கொண்டு வந்து விடப்பட்டுள்ள மிகமோசமான குற்றச் செயல்களுடன் தொடர்புடைய மிக நீண்டகால சிங்களக் கைதிகளை வேறு இடங்களுக்கு இடமாற்றம் செய்யும்படியும் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும்படியும் கோரி தமிழ்க் கைதிகள் உண்ணவிரதப் போராட்டத்தில் இறங்கியிருந்தார்கள். அத்துடன் இந்தப் பிரச்சினைகளை சிறைச்சாலை உயர் அதிகாரிகளிடம் சுட்டிக்காட்டியதற்காக காலி சிறைச்சாலைக்கு இடம்மாற்றம் செய்யப்பட்ட தமிழ்க்கைதியொருவரை மீண்டும் மகஸின் சிறைக்கு இடமாற்றும் படியும் இவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இவர்கள் எந்தவிதக் குற்றங்களும் செய்திருப்பதாக குற்றஞ்சாட்டப்படவோ, நீதி விசாரணைக்கு உட்படுத்தப்படவோ இல்லாத அப்பாவிக் கைதிகள். எம்மை முறைப்படி விசாரியுங்கள், குற்றமிருந்தால் தண்டியுங்கள் இல்லையெனில் விடுதலை செய்யுங்கள் என்பதே இவர்களின் கோரிக்கையாக இருந்து வந்தது.

நீதி விசாரணைக்குட்படுத்தப்பட்டு குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்படாதவரை எந்த ஒரு மனிதனும் தண்டிக்கபட முடியாது. தண்டிக்கும் அதிகாரம் நீதி மன்றத்தைத் தவிர வேறு எவருக்கும் கிடையாது. அதனால் மனிதாபிமானத்துடன் கவனிக்கப்படுவதற்கு அவர்கள் உரித்துடையவர்கள். அது அவர்களின் அடிப்படை மனித உரிமையும் கூட. ஆனால் தமிழ்க் கைதிகள் - தீவிரவாதிகளாய் இருந்தவர்கள் அல்லது தீவிரவாதத்துக்குத் துணைபோனவர்கள் என்றவாறு கைது செய்யப்பட்டவர்களானால் அவர்கள் வெறும் சந்தேகத்துக்குட்பட்டவர்களே தவிர தண்டனைக்குரியவர்கள் அல்லர். அவர்களை மனிதநேயத்துடன் கவனிப்பதும் பராமரிப்பதும் அவர்களுக்குப் பொறுப்பாக இருக்கும் அதிகாரிகளின் கடமை. படுமோசமான குற்றச் செயல்களுடன் தொடர்புடைய கைதிகளுடன் வெறும் சந்தேகத்தில் காவலில் உள்ள அரசியல் கைதிகளை ஒன்றாக இருக்க விடுவதென்பது மிகமோசமான மனிதாபிமானமற்ற செயல் என்பதை எவரும் ஒப்புக் கொள்வர். இவை பற்றி முறைப்பாடு செய்தவர்களை அதற்காகவே அவர்கள் விரும்பாத சிறைக் கூடத்துக்கு அனுப்ப முயல்வது அதைவிட மோசமான மனிதாபிமானமற்ற செயல்மட்டுமல்ல, கைதிகளுக்கு உள ரீதியான தண்டனையை வழங்க எத்தனிக்கும் இன்னுமொரு கருணையற்ற செயல் என்றே கருதவேண்டும்.

இந்தப் பின்னணியில் மகஸின் சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் மேல் அதிகாரிகள் தொடர்ந்தும் அசமந்தமாக இருக்காமல் சில காரியங்களை செய்ய முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கது. தமிழ்க்கைதிகளின் உடனடிக் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு நடவடிக்கை எடுத்திருப்பதுடன் அடிப்படைப் பிரச்சினைகளையும் மிகவிரைவில் தீர்த்து வைக்க இணங்கியிருக்கிறார்கள் என்று தகவல் வந்தள்ளது. சிறைச்சாலை உயர் அதிகாரிகளின் இந்த நடவடிக்கைகளையும் வாக்குறுதிகளையும் ஏற்று கைதிகள் உண்ணாவிரதத்தை கைவிட்டிருக்கிறார்கள்.

கடந்த மாதமும் இதேவிதத்தில் தமிழ்அரசியல் கைதிகள் தாம் அடைத்துவைக்கப்பட்டுள்ள சிறைச்சாலைகளில் சில முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்தார்கள். எட்டுநாள்கள் வரையான உண்ணாவிரதம் அரசு சார்பில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளையடுத்து கைவிடப்பட்டது. ஒரு மாத காலத்துக்குள் தங்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற அடிப்படையில் அந்த உண்ணாவிரதம் கைவிடப்பட்டிருந்தது. எல்லாம் சுமுகமாக நடந்தேறும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த நிலையில் உயர் அதிகாரி ஒருவர் தமிழ்க்கைதிகளை ஈவிரக்கமில்லாமல் நடத்தவும் நியாயம் கேட்பவர்களை அவர்கள் விரும்பாத இடங்களுக்கு இடம்மாற்றவும் நடவடிக்கை எடுத்துள்ளார். இதன் காரணமாகவே மகஸின் சிறையில் மீண்டும் உண்ணாவிரதம் ஆரம்பமாகியது.

இந்தநிலையில் சிறைச்சாலை உயர் அதிகாரிகள் நிலைமை மோசமடையாமல் கைதிகளின் கோரிக்கைகளை நிறைவேற்ற முன்வந்தமை பாராட்டப்பட வேண்டும். அவர்கள் வாக்களித்திருப்பது போல் தமிழ்க்கைதிகளின் கோரிக்கைகள் யாவும் முழுமையாக நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்ப்போம். அந்த வகையில் நல்லிணக்கம் தொடர்பாக நாடு இன்னும் ஒருபடி முன்னோக்கி நகர்வதாகவும் கருத இடமேற்படலாம்.

# பாதிக்கப்பட்ட வன்னி ஆசிரியர்கள் ஆணைக்குழுவில் முறையிட முடிவு

யாழ்ப்பாணம், ஜூன் 8

வன்னிப் பகுதியிலுள்ள பாடசாலைகளில் சேவைக்காலத்தை நிறைவு செய்துள்ள ஆசிரியர்கள் தமக்கு இடமாற்றம் வழங்காது அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்யவுள்ளனர்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஆதரவுடன் எதிர்வரும் 18 ஆம் திகதி இந்த முறைப்பாடு பதிவு செய்யப்படவுள்ளது. இடமாற்றம் வழங்கப்படாது பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 96 ஆசிரியர்களும் மனித உரிமை ஆணைக் குழுவின் அலுவலகத்துக்கு நேரில் சென்று இந்த முறைப்பாட்டைப் பதிவு செய்யவுள்ளனர்.

கல்வி அமைச்சின் வடக்கு மாகாணச் செயலாளர், வடமாகாண கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட கல்வி அதிகாரிகளுக்கு எதிராகவே இந்த முறைப்பாடு செய்யவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

**வன்னிப் பகுதிக்கான பதிலீட்டு ஆசிரியர் பட்டியலைத் தயாரிப்பது கல்வி அதிகாரிகளின் கடமை. அதை உரிய காலத்தில் செய்யாமல் தமது பொறுப்புகளில் தவறு செய்கின்றனர்.**

வன்னிப் பகுதியில் 6 கல்வி வலயங்களிலும் உள்ள பாடசாலைகளில் சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்குவதற்குக் கல்வி அதிகாரிகள் தயார் இல்லை என்று பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தரப்பில் கூறப்படுகிறது.

இடமாற்றம் வழங்குமாறு பலமுறை கேட்டும் இதுவரை பயன் ஏதும் இல்லை. இந்த நிலையிலேயே மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்வது என்று முடிவு எடுக்கப்பட்டதாக ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

வன்னிப் பகுதிக்கான பதிலீட்டு ஆசிரியர் பட்டியலைத் தயாரிப்பது கல்வி அதிகாரிகளின் கடமை. அதை உரிய காலத்தில் செய்யாமல் தமது பொறுப்புகளில் தவறு செய்கின்றனர் என்று பொதுச் செயலாளர் இந்த விடயம் தொடர்பாகக் கூறுகையில் மேலும் சுட்டிக்காட்டினார். (ம-3)

## கடற்றொழில் கூட்டமைப்பு மாகாண ரீதியாக விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 8

வடமாகாண கடற்றொழிலாளர்களின் கூட்டமைப்பு மாகாண ரீதியாக விஸ்தரிக்கப்படவுள்ளதாக அதன் தலைவர் எஸ்.தவரட்ணம் தெரிவித்துள்ளார்.

கடற்றொழிலாளர்கள் கூட்டமைப்பை விஸ்தரிப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் அதன் அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதன் போதே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

அதன் முடிவின் பிரகாரம் 45 பிரதிநிதிகளை உள்ளடக்கியதாகக் கூட்டமைப்பின் மாகாண மட்ட பொதுச் சபை தெரிவு செய்யப்படவுள்ளது. யாழ்.மாவட்டத்திலிருந்து 15 பிரதிநிதிகளும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களிலிருந்து தலா 10 பிரதிநிதிகளும் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

வடமாகாணக் கடற்றொழிலாளர்களின் கூட்டமைப்பின் மாகாண மட்ட பொதுச் சபைத் தெரிவு எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை வவுனியாவில் இடம்பெறவுள்ளது. அத்துடன் இதன்போது கூட்டமைப்புக்கான யாப்பு விதிகளும் ஏற்படுத்தப்படவுள்ளது.

மாகாண மட்ட பொதுச் சபை தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் மாவட்ட ரீதியாக அதன் கிளைகளும் செயற்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

## இந்து மதத்தின் பெருமையை உணர்வோம் என்னும் தொனிப்பொருளில் பாத யாத்திரை

வலி வடக்கு, ஜூன் 8

இந்து மதத்தின் பெருமையை உணர்வோம் என்னும் தொனிப் பொருளிலான பாத யாத்திரை நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

திருஞானசம்பந்தர் குரு பூசையை முன்னிட்டு இந்து மகா சபை எமது பிரதேச மக்களிடையே இந்து மத விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.

அந்த வகையில், நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கண்டி வீதி, கிளிநொச்சியில் அமைந்துள்ள சித்திவிநாயகர் ஆலயத்திலிருந்து இந்த யாத்திரை ஆரம்பமாகவுள்ளது. இது இங்கிருந்து மலையாளபுரம், கிளிநொச்சியை சென்றடையவுள்ளது.

கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரம வணக்கத்துக்குரிய கணேசானந்த சுவாமிகளின் அருளாசியுடன், வட பிராந்திய சின்மய மிசன் குரு முதல்வர் சுவாமி ஜாக்கிரத் சைதன்யா முன்னிலை வகிக்க, நடைபெறவுள்ள இப் பாத யாத்திரையில் குருமார்கள், இந்து சமய அமைப்புகள், அறநெறி ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இதில், இந்து சார் அமைப்புகளின் பிரதிநிதிகளையும், சைவப் பெருமக்களையும் கலந்துகொண்டு தமது தாய் மதத்தின் பெருமையை நிலைநிறுத்த முன்வருமாறு இந்து மகா சபையினர் தெரிவித்துள்ளனர். (ம-86)

## சந்தேகத்துக்கு இடமான பொருள்களால் இழப்புகள்

### விழிப்புணர்வு அவசியம் என்கிறார் பொலிஸ் அத்தியட்சகர்

அண்மைக்காலமாக வடகிழக்கில் போர் நடைபெற்ற பிரதேசங்களில் கண்டெடுக்கப்படும் சந்தேகத்துக்கு இடமான பொருள்களைக் கையாள்வதன் மூலம் ஏற்படும் விபத்துக்கள் அதிகரித்துள்ள என்று கொழும்பு பொலிஸ் தலைமைய பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான கே.அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இந்த விபத்துக்களில் அதிகமாக சிறுவர்களின் உயிர்கள் பறிக்கப்படுவதுடன் காயங்களுக்கும் ஆளாகின்றனர். இது தொடர்பாக விழிப்புணர்வூட்டல்களைப்பெற்றோர், பாடசாலைச் சமூகம் என்பன பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும்.

சந்தேகத்துக்கு இடமான ஏதாவது பொருள்களைக் கண்டுபிடித்து அதனைக் கையில் எடுத்துச் சோதனை செய்யாது உடனடியாகப் பெற்றோர்களிடமோ, பெரியவர்களிடமோ சிறுவர்கள் தெரியப்படுத்த வேண்டும்.

இது தொடர்பான தகவலை உடனடியாக படையினரிடமோ, பொலிஸ் நிலையத்திலோ தெரியப்படுத்த வேண்டும். எதிர்பாராமல் ஏற்படும் இவ்வாறான விபத்துக்கள் தொடர்பாக பொதுமக்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

## கண்ணிவெடிகளை அகற்றுவதற்கான யு.என்.டி.பி.யின் உதவி 2015 இல் முடிவு

யாழ்ப்பாணம், ஜூன் 8

மிதிவெடி அகற்றும் நடவடிக்கைகளை நிர்வகித்து மேற்பார்வை செய்துவரும் யு.என்.டி.பி. நிறுவனம் 2015 ஆம் ஆண்டுடன் இந்தப் பணிகளை இலங்கை அரசிடம் கையளிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.மாவட்டச் செயலகம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள மிதிவெடி செயற்பாட்டு அலுவலகங்கள் மூலம் மிதிவெடி அகற்றும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான நிதி உதவி, தொழில்நுட்ப உதவிகள் என்பன யு.என்.டி.பி. நிறுவனத்தால் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் மக்கள் மீளக்குடியமர்வதற்கு முக்கியமான இடங்கள் என்று முன்னுரிமைப்படுத்தப்பட்ட இடங்களும் மிதிவெடி அகற்றி மக்களிடம் கையளிக்கப்பட்டு வருகின்றன.

இந்த வகையில் யு.என்.டி.பியின் திட்ட இலக்கின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டுடன் மிதிவெடி அகற்றும்நடவடிக்கைகளை இலங்கை அரசே மேற்கொள்ள வேண்டும். தேவைப்படும் தொழில்நுட்ப உதவிகளை மாத்திரம் யு.என்.டி.பியால் வழங்கப்படும்.

அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் யாழ்.மாவட்ட செயலகத்திலுள்ள மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம் மூடப்பட்டு கிளிநொச்சி மாவட்டத்திலிருந்தே செயற்படும்.

இதேவேளை, முகமாலை, கிளாலி, நாகர்கோவில் முன்னரங்க நிலைகளில் மிதிவெடி அகற்றி முடிப்பதற்கு இன்னும் 10 ஆண்டுகளுக்கு மேல் செல்லும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருத்துவ வசதியைக் காணாத அம்பலப்பெருமாள் குளம் கிராமம்

அக்கராயன், ஜூன் 8

துணுக்காய் அம்பலப் பெருமாள் குளம் கிராம மக்கள் மருத்துவ வசதியைப் பெறுவதில் நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர். 1968 ஆம் ஆண்டு உருவாக்கப் பட்ட இக்குடியேற்றத் திட் டக் கிராமத்தில் 98 குடும்பங் கள் மீளக்குடியமர்ந்துள்ளன. ஆனால் இந்தக் கிராமத்தில் மருத்துவ வசதிகள் எதுவும் இல்லை. இந்த மக்கள் மருத் துவ வசதியைப் பெற வேண் டுமானால் அக்கராயன் மருத் துவமனை, மல்லாவி மருத் துவமனை ஆகியவற்றை நாடவேண்டியுள்ளது. அத் துடன் ஒரு நாள் பொழு தினைக் கழிக்க வேண்டியும் உள்ளனர்.

அம்பலப் பெருமாள் குளம் கிராமத்தில் நடமாடும் மருத்துவ சேவையினை வாரத்தில் ஒருமுறையாவது தொடர்ந்து நடத்த ஏற்பாடு செய்யுமாறு மக்கள் நீண்ட காலமாகவே கோரிக்கை விடுத்து வருகின்றார்.

அண்மையில் இலங்கை மெதடிஸ்த திருச்சபையி னால் இந்தக் கிராமத்தில் நடமாடும் மருத்துவ சேவை யொன்று நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# மீள்குடியமர்ந்த மக்களின் அவசிய தேவை வீடு, மின்சாரம், வாழ்வாதாரமே

### துணுக்காய்ப் பிரதேச செயலர் தெரிவிப்பு

அக்கராயன்,ஜூன் 8

துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடிய மர்ந்த மக்களின் அவசிய தேவைகளாக வீடு, மின் சாரம், வாழ்வாதாரம் என்பன காணப்படுகின்றன.

இவ்வாறு தெரிவித் திருக்கிறார் துணுக்காய்ப் பிரதேச செயலர் சி.குண பாலன்.

மீளக்குடியமர்ந்த இந்தப் பிரதேச மக்களின் தேவை களைப் படிப்படியாக நிறை வேற்றி வருகின்றோம். மக்களின் விவசாய முயற் சிகளை விரிவுபடுத்தும் நோக்குடன் குளங்கள் புனர மைக்கப்பட்டு வருகின்றன. வவுனிக்குளம் உட்பட சிறிய குளங்களும் புனர மைக்கப்பட்டு வருகின்றன.

**குளங்களின் புனரமைப்புப் பணிகள் துரிதமாக நிறைவேறுமாயின் நெற்செய்கையில் பெரும் முன்னேற்றத்தைக் காணமுடியுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.**

மேலும் மாந்தை கிழக் கிலுள்ள மூப்பன்குளம், அம்மி மிதித்த குளம் ஆகியவற் றையும் புனரமைக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுத் துள்ளனர். இந்த இரண்டு குளங்களும் புனரமைக்கப் படுமாயின் சுமார் 200 ஏக்கர் நிலப் பரப்பில் நெற்செய் கையை மேற்கொள்ள முடி யும்.

மேலும் துணுக்காயிலுள்ள அம்பலவிக் குளத்தையும் புனரமைப்பதன் மூலம் மேலும் 200 ஏக்கரில் நெற் செய்கையை மேற்கொள்ள முடியும்.

குளங்களின் புனரமைப் புப் பணிகளை துரிதமாக நிறைவேறுமாயின் நெற் செய்கையில் பெரும் முன் னேற்றத்தைக் காணமுடியு மென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-18)

## நலன்புரி நிலையங்களில் நிதி சேகரிப்பு உடன் நிறுத்தம்

வவுனியா,ஜூன் 8

வவுனியா நலன்புரி நிலை யங்களிலுள்ள மக்களிடம் 'வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கான வாழ் வாதார நிதி' என்ற பெயரில் இடம்பெற்ற நிதி சேகரிப்பு நலன்புரி நிலைய வலயப் பணிப்பாளரின் தலையீட்டை அடுத்து உடன் நிறுத்தப் பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

வவுனியா மெனிக்பாம் நலன்புரி நிலையத்திலுள்ள மக்களுக்கு மருத்துவ சேவை வழங்கி வரும் நடமாடும் வைத்தியக்குழுவினரே நிதி சேகரிப்பில் ஈடுபட்டனர்.

**இந்த நிதி சேகரிப்பு நடவடிக்கையானது கடந்த இரண்டு மாதங்களாக இடம் பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது**


வவுனியாவில் இருந்து வந்து திங்கள், புதன் ஆகிய கிழமைகளில் கதிர்காமர் நலன்புரி நிலையத்தில் நட மாடும் வைத்திய சேவை யினை இவர்கள் வழங்கி வரு கின்றனர்.

இக்குழுவினர் வைத்திய சேவையைப் பெற்றுக் கொள்ள வரும் இடம்பெயர்ந்து நலன்புரி முகாமில் உள்ள மக்களிடம் வறுமைக் கோட் டின் கீழ் வாழும் மக்களுக் கான நிதி உதவி என்ற அடிப் படையில் ஒவ்வொருவரிட மும் 20 ரூபாவைப் பெற்றுக் கொண்டு வந்தனர்.

இது தொடர்பாக கதிர்காமர் நலன்புரி நிலைய வலயப்ப ணிப்பாளர் அபயக்கோனின் கவனத்துக்கு கொண்வரப் பட்டதையடுத்து அவரின் தலையீட்டால் உடனடியாக இந்த நிதி சேகரிப்பு கைவிடப்பட்டது.

இந்த நிதி சேகரிப்பு நடவடிக்கையானது கடந்த இரண்டு மாதங்களாக இடம் பெற்று வந்தமை குறிப்பிடத் தக்கது. (க-400)

### கல்விக்கு உந்துதல்...



பூநகரி மகாவித்தியாலயத்தில் யுனிசெப் நிதியுதவியுடன் புதிய வகுப்பறைக் கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. (18)

## சிறாட்டிக்குளம் பாலத்தை புனரமைக்குமாறு கோரிக்கை

அக்கராயன்,ஜூன் 8

மாந்தை கிழக்கிலுள்ள சிறாட்டிக் குளத்தின் பாலத்தை புனரமைத்துத் தருமாறு மக் கள் வேண்டுகோள் விடுத் துள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த மாந்தை கிழக்கிலுள்ள மக் கள் மன்னாரின் மாந்தை மேற்கிலுள்ள பகுதிகளுக் குச் செல்வதற்குச் சிறாட்டிக் குளம் பாலம் முக்கியமானதாகக் காணப்படுகின்றது. இந்தப் பாலத்தின் புனரமைப்புப் பணிகள் நீண்டகாலமாக இடம்பெறவில்லை. இதனால் போக்குவரத்தில் சிரமங்கள் தோன்றுகின்றன. பாலத்தின் பணிகளைத் துரிதப்படுத்து மாறு மக்கள் தெரிவிக்கின்றனர்.

மழை காலங்களில் மக் கள் போக்குவரத்துச் செய் வதில் பல்வேறு இடர்களை எதிர்கொண்டு வருவதோடு மாந்தை கிழக்கு மக்கள் மன் னாருக்குச் செல்வதில் பெரும் சிரமங்களையும் எதிர்கொண் டுள்ளனர். (க-18)

## துண்டுப் பிரசுரங்கள் மன்னாரில் தாராளம்

மன்னாரில் ஆயர் மற்றும் தமிழ்த்தேசியக் கூட்டமைப் பின் வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர்களுக்கு எதி ராகத் துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ஒருவரின் ஆத ரவாளர்களே இந்த துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டு வருவதாகவும் தெரிய வரு கின்றது. இதில் அமைச் சரைப் போற்றும் வாசகங் களும் காணப்படுகின்றன.

இந்த நிலையில் தமிழர் ஒருவரின் பெயரால் ஆய ருக்கு எதிரான புதிய துண்டுப் பிரசுரம் ஒன்று தற்போது மன்னாரில் விநியோகிக்கப் பட்டு வருகின்றது. இந்தத் துண்டுப் பிரசுரத்தை வெளி யிட்டவர் விலாசம் மூதூர், திருகோணமலை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழர் ஒருவரின் பெயரில் அமைச்சரின் ஆதரவாளர்களே இதனையும் வெளியிட்டுள் ளதாகப் பெரும்பாலான மன் னார் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மன்னார் ஆயரை அமைச்சர் ரிஷாத் அவதூறாகப் பேசிய விடயமும், மூத்த ஊடகவிய லாளர் மக்கள் காதர் தாக்கப் பட்ட சம்பவமும் வெளிநாடு கள் வரை சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-12)

# பூநகரியில் தொடர்கின்றது மணல் அகழ்வும், காடழிவும்

அக்கராயன்,ஜூன் 8

கிளிநொச்சி பூநகரிப் பிர தேசத்தின் பல்வேறு பகு திகளிலும் களவாக மணல் அள்ளும் செயற்பாடுகள் பெருமளவில் இடம்பெறு கின்றன.

பூநகரியில் மணல் அள் ளுதல், மரம் வெட்டுதல் என்பன தடைசெய்யப்பட் டுள்ள போதிலும் குடமு ருட்டி ஆற்றில் மணல் அள்ளும் செயற்பாடுகள் பெருமளவில் நடைபெறு கின்றன.

இதேவேளை பூநகரி யின் காடுகளை அழிக்கும் செயற்பாடும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

பூநகரிப் பிரதேசம் துரித மாக உவர்ப் பிரதேசமாக மாறி வருவதனால் காடுகள் அழிக்கப்படுவதைப் பாதுகாப் பதன் மூலம் உவராபத்தி லிருந்து பூநகரியின் எஞ்சிய பகுதிகளையாவது பாது காக்க முடியும்.

இதேவேளை கௌதாரி முனையில் சட்டவிரோத மாக மணல் அள்ளும் செயற் பாடுகள் இடம்பெற்று வரு வதாகவும் மக்கள் தெரிவிக் கின்றனர்.

ஜெயபுரம் கரியாலை, நாக படுவான் ஆகிய பகுதிகளில் காடுகளை அழிக்கும் செயற் பாடுகள் தொடர்ந்தும் இடம் பெற்று வருகின்றன. (க-18)

## கோரைப் புற்களால் நெற்பயிர்களுக்குப் பாதிப்பு

துணுக்காய்,ஜூன் 8

துணுக்காய்ப் பிரதேசத் தில் உள்ள வயல்களில் ஒரு வகைக் கோரைப் புற்கள் காணப்படுவதால் நெற் பயிர்களுக்குப் பாதிப்பு ஏற் பட்டுள்ளது.

துணுக்காய்ப் பிரதேசத் தில் சிறுபோக நெற்செய்கை யில் விவசாயிகள் முழு மூச் சுடன் ஈடுபட்டுள்ளனர். ஆனால் வயல் நிலங்களில் ஒருவகைக் கோரைப் புற்கள் காணப்படுவதால் அவற்றைக் கட்டுப்படுத்துவதற் குத் தெளித்த களை நாசினியால் 500க்கும் அதிகமான ஏக்கர் வயல் நிலங்களில் உள்ள பயிர்கள் கருகி வருவதாக விவ சாயிகள் கவலை தெரிவித் துள்ளனர்.

கடந்த ஆண்டு உபயோ கித்த களை நாசினியால் கோரைப் புற்கள் அழிந்தன. ஆனால் தற்போது இந்தக் களை நாசினிகளைப் பாவித்த போது நெற்பயிர்கள் கருகி வரு வதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு 500க்கும் அதிக மான ஏக்கர் வயல் நிலங்கள் பாதிக்கப்பட்டதாக நெற்செய் கையாளர்கள் தெரிவித்தனர். (க-415)

# பொசன் தினத்தை முன்னிட்டு இராணுவத்தினர் சிரமதானம்

துணுக்காய்,ஜூன் 8

பொசன் தினத்தை முன் னிட்டு இராணுவத்தினர் மல் லாவி ஆதார வைத்தியசாலை யில் சிரமதானப் பணிகளை மேற்கொண்டனர். மல்லாவி 10 ஆவது காலாட் படைப் பிரிவின் உயரதிகாரியான மேஜர் விஜேநாயக்க தலைமை யில் கடந்த 4 ஆம் திகதி காலை 8 மணியளவில் சிரம தானப் பணிகள் ஆரம்பமா கின. இதன்போது வைத் தியசாலையின் சுற்றாடல் களைத் துப்புரவு செய்யும் பணிகள் இடம்பெற்றன.


சுமார் 50க்கும் அதிகமான இராணுவத்தினர் இந்த சிரம தானப் பணிகளில் ஈடுபட்ட னர். அத்துடன் பொசன் பௌர் ணமி தினத்தில் பிரயாணங் களை மேற்கொண்ட பொது மக்களுக்கு இராணுவத்தினர் குளிர்பானங்களையும் வழங் கினர். இராணுவ முகாமை அண்டிய பகுதிகளை அவர் கள் வர்ணக் கொடிகளால் அலங் கரித்து பொசன் தினத்தை மிகச் சிறப்புடன் அனுஷ்டித் தனர். (க-415)

## பெரும் சுகாதாரச் சீர்கேட்டுடன் ஓமந்தை மலசலகூடங்கள்

ஓமந்தை இராணுவச் சோத னைச் சாவடியில் பொதுமக் களுக்கென ஒதுக்கப்பட் டுள்ள மலசல கூடங்கள் பாவிக்க முடியாத நிலையில் சுகாதாரச் சீர்கேட்டுடன் காணப்படுவதாக அங்கு சென்று வந்தவர்கள் கூறு கின்றனர். வடபகுதியின் முக்கிய இராணுவச் சோத னைச் சாவடி ஓமந்தையில் அமைந்துள்ளது.

ஏ9 வீதியில் அமைந் துள்ள இச்சோதனை சாவடி யூடாக தென்பகுதியிலிருந்து வடபகுதிக்கும் வடபகுதி யிலிருந்து தென்பகுதிக்கும் தினமும் பலர் பயணிக்கின் றனர். இவர்கள் சோதனைக் கென இங்கு நிறுத்தப்படு கின்ற போது தங்களின் அத்தியாவசியமான தேவை களை நிவர்த்தி செய்ய முடிய மால் பெரும் சிரமத்தை எதிர் நோக்க வேண்டியுள்ளது. (க-421)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் வீரமாகாளி அம்பாள் ஆலயத்தின் வைரவர் கோயிலுக்குச் சமீபமாகவுள்ள 80 வருடங்களுக்கு முற்பட்ட பழைமை வாய்ந்த அரசமரம் வீதி அகலிப்புக்காக தறிக்கப்படுகின்றது. ஆலய சுற்றுமதிலும் உடைக்கப்பட்டுள்ளது. (ம-7)

# வடமராட்சி கிழக்குக்கு மின்சாரம்

## 63 ஆண்டுகளுக்குப் பின் கிடைத்துள்ளது

வடமராட்சி, ஜூன் 8

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்துக்கு இலங்கை சுதந்திரம் அடைந்து 63 ஆண்டுகளுக்குப் பின்னர் மின்சாரம் கிடைத்துள்ளது.

இதனைத் தொடர்ந்து இந்தப் பிரதேசத்தில் உள்ள மருதங்கேணி - தாளையடி பிரதான வீதி, தாளையடி மீளக்குடியேற்றக் கிராமத்துக்கும் வீதி ஆகியவற்றில் மின் விளக்குகள் நேற்று முன்தினம் முதல் ஒளிரத் தொடங்கியுள்ளன.

பருத்தித்துறை பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து 30 வீதி விளக்குகள் கொள்வனவு செய்யப்பட்டு அவை மருதங்கேணி தாளையடி பிரதான வீதியிலும் தாளையடி மீள்குடியேற்றக் கிராமத்திலும் பொருத்தப்பட்டு ஒளிர்கின்றன.

சுமார் இரண்டு மைல்கள் நீளமான மருதங்கேணி தாளையடி வீதி, தாளையடி மீள்குடியேற்றக் கிராமம் ஆகியவற்றுக்கான வீதி மின் விளக்குகளை பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

மிகவும் பின்தங்கிய பிரதேசமாக இருந்துவந்த வடமராட்சி கிழக்குப் பிரதேசத்துக்கு மின்சாரம் கிடைத்ததைத் தொடர்ந்து அந்தப் பிரதேசம் ஒளிபெற்றுள்ளது. (ம-8)

### மட்பாண்டக் கைத்தொழிலை மேம்படுத்த திட்டம்

யாழ். மாவட்டத்தில் மட்பாண்ட கைத்தொழிலை மேம்படுத்தும் நோக்குடன் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு பொருத்தமான பயிற்சி மற்றும் உதவிச் சேவைகள் போன்றவற்றை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் ஆர்வமுடைய மட்பாண்ட தொழில் ஈடுபடுவோர் மற்றும் துறையில் தொடர்புடையவர்கள் தேசிய வீடமைப்புகட்டடத்தில் உள்ள கைத்தொழில் அபிவிருத்தி சபையின் மாவட்ட அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப் பட்டுள்ளது. (ம-14)

### கொடிவாரம்

யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனத்தின் 25 வருடகால சேவையை முன்னிட்டு எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் ஒருவார காலத்துக்குக் கொடிவாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

போர் மற்றும் நோய் காரணமாக அவயங்களை இழந்தவர்களுக்கு செயற்கை அவயங்களைப் பொருத்தும் பணியை மேற்கொள்ளும் ஜெய்ப்பூர் நிறுவனத்தின் கொடிவாரத்தில் நிதிப் பங்களிப்பை வழங்கி வலுவிழந்தோர்களுக்கான சேவைக்கு ஊக்கம் கொடுக்குமாறு யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனம் கேட்டுள்ளது. (ம-14)

## கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் மரக்கறி விற்பனையும் அவசியம்

### நுகர்வோர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 8

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை விற்பனை நிலையங்களில் மரக்கறி வகைகளைக் கொள்வனவு செய்து விற்பனை செய்ய வேண்டும் என்று நுகர்வோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சங்கக் கிளைகளில் இவ்வாறு மரக்கறி வகைகளை விற்பனை செய்வதன் மூலம் தமது அத்தியாவசிய தேவையை நிறைவு செய்ய முடியும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கூடுதலான சங்க விற்பனைக் கிளை நிலையங்களில் இவ்வாறு மரக்கறி வகைகள், வாழைப்பழங்கள், தேங்காய் போன்ற பொருள்கள் விற்பனை செய்யப்படுவதில்லை.

இந்தப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு தாம் தனியார் கடைகளுக்குச் செல்ல வேண்டியுள்ளது என்று நுகர்வோர் விசனம் தெரிவித்தனர்.

இதேசமயம் சங்கக் கிளைகளில் இந்த மரக்கறி விற்பனை குறித்து கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,

கிளை விற்பனை நிலையங்களில் இந்த மரக்கறி வகைகளைக் கொள்வனவு செய்து நுகர்வோருக்கு நியாய விலையில் வழங்க வேண்டும்.

இதன் மூலம் இலாபம் கிடைக்கும் பட்சத்தில் இந்தத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்த முடியும்.

அச்சுவேலி, நீர்வேலி போன்ற பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த மரக்கறி விற்பனையிலும் வெற்றி கண்டுள்ளன.

இந்த மரக்கறி வகைகளைக் கொள்வனவு செய்து விலையில் நியாயத்தை பயன்படுத்தி நுகர்வோருக்கு விநியோகிப்பதன் மூலம் கிளைகளில் வியாபார நடவடிக்கையை சம நிலைக்கு கொண்டு வர முடியும்.- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-17)

### வீதி, கிணறு புனரமைப்பு

சமுர்த்தி அதிகார சபையின் நிதிப் பங்களிப்புடன் யாழ். பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட ஜே/81 கிராம சேவகர் பிரிவில் முத்தமிழ் வீதியில் 6 ஆம் ஒழுங்கை, 7ஆம், ஒழுங்கை மீனாட்சி அம்மன் கோயில் பகுதியில் உள்ள 3 பொதுக் கிணறு என்பன புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

ஜே/81 கிராம சமுர்த்தி செயலணியால் இவை புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-23)

## அராலி மத்தி மக்கள் குடிதண்ணீரின்றி சிரமம்

வலி.வடக்கு, ஜூன் 8

அராலி மத்தி அல்லையம்பதி மக்கள் குடிதண்ணீர் பெறுவதில் பெரும் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

கடந்த பல வருடங்களாக சுமார் நூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இத்தகைய நிலைமைக்கு ஆளாகியுள்ள போதிலும் இந்தக் குடிதண்ணீர் பிரச்சினைக்கு ஒரு தீர்வை உரிய அதிகாரிகள் எவரும் முன்வைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 680 மீற்றர் பிரதேசத்தில் வாழும் இந்த மக்களின் குடிதண்ணீர் பிரச்சினை சம்பந்தமாக வலி.மேற்குப் பிரதேச சபையின் உறுப்பினர் த.நடனேந்திரன் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் யாழ். மாவட்ட பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்ட நிலையில் 200 மீற்றர் தூரத்துக்கு இரண்டு குடிதண்ணீர் பெறும் குழாய்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப் படுகிறது. (ம-86)

## ஆட்டு இறைச்சிக்கு பெரும் தட்டுப்பாடு

### தெற்குக்கு ஆடுகள் கொண்டு செல்லப்படுகின்றமையும் காரணம்

வடமராட்சி, ஜூன் 8

யாழ். குடாநாட்டில் ஆட்டிறைச்சிக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் அதன் விலையும் வெகுவாக உயர்ந்துள்ளது.

குடாநாட்டில் இருந்து வந்த ஆடுகளை இறைச்சிக்காக வியாபாரிகள் தென் பகுதிகளுக்கு எடுத்துச் செல்வதாலும், வன்னியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு கால் நடை வளர்ப்புக்காக பெருந்தொகையான ஆடுகளை தொண்டு நிறுவனங்கள் கொள்வனவு செய்து அவர்களுக்கு விநியோகிப்பததாலும் ஆடுகளுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு அரச கால் நடை சுகாதார அபிவிருத்தித் திணைக்களம் போதியளவு நல்லின ஆடுகளை இறக்குமதி செய்து கால் நடை வளர்ப்போருக்கு வழங்கவில்லை. இதன் காரணமாக ஆடு வளர்ப்பும், ஆடுகளின் எண்ணிக்கையும் அருகி வருகின்றன.

இந்த நிலையில் உள்ளூர் ஆட்டிறைச்சி வியாபாரிகளுக்கு போதியளவு ஆடு கிடைக்காயால் ஆட்டிறைச்சியின் விலை வெகுவாக அதிகரித்துள்ளது.

தற்போது ஒருகிலோ ஆட்டிறைச்சி ஆயிரம் ரூபா தொடக்கம் ஆயிரத்து 300 ரூபாவரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

குடாநாட்டு உள்ளூராட்சி மன்றங்களிலிருந்து ஆட்டிறைச்சிக் கடைகளை குத்தகைக்கு எடுத்த இறைச்சி வியாபாரிகள் ஆடுகளின் பற்றாக்குறையால் குத்தகைப் பணத்தைக் கொடுக்க முடியாது திண்டாடுகின்றனர்.

சிலர் எடுத்த குத்தகையை ரத்துச் செய்துள்ளனர். ஒரு சில இறைச்சி வியாபாரிகள் வாரத்தில் இரண்டொரு தினங்களே கடைகளைத் திறந்து வியாபாரம் செய்ய வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

குடாநாட்டில் மாட்டிறைச்சிப் பாவனை குறைந்து கோழி மற்றும் ஆட்டிறைச்சி பாவனை மக்களிடையே அதிகரித்துக் காணப்படும் நிலையில் ஆட்டிறைச்சித் தட்டுப்பாட்டால் கோழி இறைச்சியின்பாவனைமேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-8)

## வீசப்படும் வெற்றுப் போத்தல்களால் டெங்கு பரவும் நிலைமை ஏற்படும்

வடமராட்சி, ஜூன் 8

வடமராட்சிப் பிரதேசத்தில் மதுபான சாலைகள் அமைந்துள்ள இடங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் வெற்று மதுபானப் போத்தல்கள், வெற்று பியர் ரின்கள் பரவலாகக் காணப்படுவதாக பொதுமக்கள் தரப்பில் புகார் தெரிவிக்கப் படுகின்றது.

இந்த வெற்றுப் போத்தல்களை மதுபான சாலைகள் மீளப் பெறாமையினாலேயே வீதிக்கு வீதி இவை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வெற்றுப் போத்தல்கள், பியர் ரின்களால் நுளம்பு பெருகி டெங்கு நோய்கூட பரவும் அபாயம் ஏற்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வீடு, வளவுகளில் குப்பை கூளங்களைக் கண்டு பிடித்து நீதிமன்றில் நிறுத்தும் சுகாதார, பொலிஸ் திணைக்களத்தினர் இவை தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளையும் எடுப்பதில்லை என்று விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்என்றும்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.(ம-8)

## வேலணை பிரதேச சபைக்கு புறநெகும வேலைத் திட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன் 8

புறநெகும மூன்றாம் கட்ட வேலைத்திட்டத்தின் கீழ் வேலணை பிரதேச சபைக்கு நான்கு பெரிய அபிவிருத்தி திட்டங்கள் மாவட்ட மட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

புறநெகும உதவித் திட்டப் பணிப்பாளர் செ.பிரணவநாதன் வேலணை பிரதேச சபை தலைவருக்கு இந்[illegible] படு[illegible]

வேலணை பிரதேச சபைக்கு 2012 இல் தெரிவு செய்யப்பட்ட வேலைத் திட்டங்கள் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் அனுமதி பெறப்பட்டு திட்ட [illegible] குழுவின் [illegible] அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நவீன சந்தை கட்டட தொகுதி, துறையூர்-சந்தை, மடத்துவெளி-சந்தை, மண்டைதீவு-சுடலை வீதி ஆகியனவே இவ்வாறு தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இந்த வேலைகளுக்கான வடிவமைப்பு, வரைபடம், மதிப்பீடு தொடர்பாக மாவட்ட திட்ட நெல்சிப் பொறியியலாளர் எந்திரி. எஸ். ஸ்ரெயிலிதரன் நடவடிக்கை எடுத்துள்ளார் என்று பிரதேசசபை தலைவர் சி.சிவராசா தெரிவித்தார். (ம-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீடீரென பற்றி எரிந்தது இந்திய நிதி அமைச்சகம்

## முக்கிய ஆவணங்கள் எரிந்து நாசம்



டில்லி, ஜூன் 8
நாடாளுமன்ற வளாகத்தில் அமைந்துள்ள நிதி அமைச்சக அலுவலகத்தில் நேற்று தீ விபத்து ஏற்பட்டது. இதனால் முக்கிய ஆவணங்கள் எரிந்து நாசமாயின.

இந்த அமைச்சக கட்டடம் செயற்படும் வடக்குப் பகுதிக்கட்டடத்தில் அனைவரும் உறங்கிக்கொண்டிருந்த அதிகாலையில் ( 3.45 மணி அளவில்) தீ பற்றி எரிந்துள்ளது. 2 அறைகளில் எரிந்த இந்தத் தீயினால் அயல் முழுவதும் கரும்புகை சூழ்ந்திருந்தது.

தகவல் அறிந்த தீயணைப்புப் படையினர் விரைந்து வந்து தீயைக் கட்டுப்படுத்தினர். 6 தீயணைப்பு வாகனங்களின் கடும் போராட்டத்திற்கு பின்னர் தீ அணைக்கப்பட்டது. இது குறித்து தகவல் அறிந்த பொலிஸார் காலை 5.45 மணிக்குத்தான் அங்கு சென்றுள்ளனர்.

இந்த தீ எப்படி ஏற்பட்டது ? காவல் பணியில் இருந்தவர்கள் யார் ? எரிந்த ஆவணங்கள் எது, எதுவாக இருக்கும் என்ற கேள்விக்கு பொலிஸ் தரப்பில் பதில் எதுவும் சொல்ல முடியவில்லை. இதுகுறித்து விசாரித்து வருகிறோம். முழு விசாரணைக்குப் பின்னர் தெரிவிப்போம் என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நிதி அமைச்சகத்தைப் பொறுத்தவரை இங்கு நாடு முழுவதும் கையாளக்கூடிய வரவு- செலவு, மற்றும் நிதி ஒதுக்கீடு தொடர்பான ஆவணங்கள்தான் இருக்கும். இவை அனைத்தும் மிக முக்கியமானவை. அரசு தொடர்பான ஏலம் உள்பட விலை நிர்ணயம், மற்றும் தனியார் நிறுவனங்களுடனான பணப் பரிமாற்றம் உள்ளிட்ட ஆவணங்கள் தீயில் எரிந்து சாம்பலாயிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. இந்தச் சம்பவம் சதியா என்று சந்தேகிக்கப்படுகிறது. இதுகுறித்து விசாரணை நடைபெற்று வருகின்றது. (வ)

# பீகாரில் சட்டம்—ஒழுங்கு முற்றிலும் சீர்குலைவு

## பிரதமரிடம் காங்கிரஸ் முறைப்பாடு

டில்லி, ஜூன் 8
பீகாரில் சட்டம் - ஒழுங்கு முற்றிலும் சீர்குலைந்து விட்டது. எனவே, இந்த விடயத்தில் உடனடியாக தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பீகார் மாநில காங்கிரஸ், தலைவர்கள், பிரதமர் மன்மோகன் சிங்கிடம் நேற்று முன்தினம் முறையிட்டனர்.

பீகார் மாநில காங்கிரஸ், தலைவர்கள், அந்தக்கட்சியின் ஊடகப்பிரிவு பொறுப்பாளர் ரஞ்சிதா ரஞ்சன் தலைமையில் நேற்றுமுன்தினம் டில்லியில் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்தனர். இதன்போது அவர்கள் தெரிவித்ததாவது:-

பீகாரில் சட்டம் - ஒழுங்கு முற்றிலும் சீர்குலைந்து விட்டது. கடத்தல், கற்பழிப்பு, கொலை போன்ற சம்பவங்கள் தொடர்ச்சியாக அரங்கேறுகின்றன. இதுகுறித்து, பீகார் மாநில காங்கிரஸ், தலைவர்கள் பொலிஸில் முறைப்பாடு தெரிவித்தால், அதுகுறித்து நடவடிக்கை எடுக்காமல், முறைப்பாடு கொடுப்பவர்கள் மீதே, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்கின்றனர். எனவே, இந்த விடயத்தில் உடனடியாக தலையிட்டு, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முறையிட்டனர். இது தொடர்பாக பிரதமரிடம் அறிக்கையையும், அவர்கள் அளித்தனர். (வ)

# உயிரோடிருந்தால் மீண்டும் தலைவராகப் போட்டியிடுவேன்

## கருணாநிதி கருத்து



ஒரு வருடத்துக்கு இன்னும் உயிரோடிருந்தால் தலைவர் பதவிக்கு போட்டியிடுவேன் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்தார்.

தி.மு.க. உள்கட்சி தேர்தல் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும். அதன்படி அடுத்தவருடம் 2013 ஆம் ஆண்டில் தி.மு.கவிற்கு உள்கட்சி தேர்தல் நடைபெறும்.

இந்த நிலையில் தி.மு.க. தலைவர் கருணாநிதி செய்தியாளர்கள் சந்திப்பில் இன்னும் ஓராண்டு காலத்துக்கு உயிரோடு இருந்தால் தலைவர் பதவிக்குப் போட்டியிடுவேன் என்று கூறியிருப்பது அந்தக்கட்சி வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கிடையே தி.மு.க. இளைஞர் அணி நிர்வாகிகள் மு.க.ஸ்டாலினே அடுத்த தலைவராக வரவேண்டும் என்று ஆசைப்படுவதாகவும் ஒரு தகவல் உள்ளது.

கடந்த 3ஆம் திகதி தலைவர் கருணாநிதி தனது 89 ஆவது பிறந்த நாளை கொண்டாடினார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

# தேர்தல் ஆணையாளராக சம்பத் நியமனம்



டில்லி, ஜூன் 8
நாட்டின் புதிய தலைமைத் தேர்தல் ஆணையாளராக வி.எஸ்.சம்பத் நியமிக்கப்பட்டுள்ளார். தற்போதைய தலைமைத் தேர்தல் ஆணையரான எஸ்.வை. குரேஷி, எதிர்வரும் 10ஆம் திகதியுடன் ஓய்வு பெறுகிறார். இதனையடுத்து, தேர்தல் ஆணையாளராகப் பணியாற்றி வந்த வீரவள்ளி சுந்தரம் சம்பத்தை, தலைமைத் தேர்தல் ஆணையாளராக இந் திய ஜனாதிபதி பிரதீபா பாட்டீல் நேற்றுமுன்தினம் நியமித்தார்.

இந்தநிலையில், வி.எஸ். சம்பத், எதிர்வரும் 2015ஆம் ஆண்டு ஜனவரி வரை தலைமைத் தேர்தல் ஆணையாளராகப் பணியாற்றுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தலைமைத் தேர்தல் ஆணையாளரைத் தெரிவு செய்வதற்கு தனிக் குழுவை அமைக்க வேண்டும் என்று பாரதிய ஜனதா மூத்த தலைவர் எல்.கே. அத்வானி கருத்துத் தெரிவித்திருந்தார். எனினும், அதனைப் பரிசீலிக்காமல், புதிய தலைமைத் தேர்தல் ஆணையாளரை மத்திய அரசு அறிவித்துள்ளதாக தெரிகிறது. (வ)

## விதிமுறைகளை மீறிய பிரசாரச் செலவு

# அ.தி.மு.க., தே.மு.தி.க. வேட்பாளர்களுக்கு தேர்தல் ஆணையத்தால் அழைப்பாணை

புதுக்கோட்டை இடைத் தேர்தலில் சட்டவிதிமுறைகளை மீறி பிரசாரத்துக்காகச் செலவு செய்தது தொடர்பில் விளக்கமளிக்குமாறு, அ.தி.மு.க. மற்றும் தே.மு.தி.க. வேட்பாளர்களுக்கு தேர்தல் ஆணையம் அழைப்பாணை அனுப்பியுள்ளது.

ஒரு வேட்பாளர் அதிக பட்சமாக 16 இலட்சம் ரூபா வரை செலவு செய்யலாம் என்று தேர்தல் ஆணையம் அறிவித்திருந்தது. ஒரு இலட்சத்து 25 ஆயிரத்து 435 ரூபா மாத்திரமே செலவு செய்ததாக அ.தி.மு.க. வேட்பாளரும், ஒரு லட்சத்து 2 ஆயிரத்து 370 ரூபா மாத்திரமே செலவு செய்ததாக தே.மு.தி.க. வேட்பாளரும் கணக்குக் காட்டினர்.

ஒரு வேட்பாளர் அதிக பட்சமாக 16 இலட்சம் ரூபா வரை செலவு செய்யலாம் என்று தேர்தல் ஆணையம் அறிவித்திருந்தது.

எனினும் தேர்தல் கண்காணிப்பு அதிகாரிகளின் மதிப்பீட்டின்படி, அ.தி.மு.க. வேட்பாளர் 7 இலட்சத்து 21 ஆயிரத்து 922 ரூபாயும், தே.மு.தி.க. உறுப்பினர் 90 ஆயிரத்து 33 ரூபாயும் செலவு செய்திருப்பதாக தகவல் கிடைத்ததை அடுத்து, மேலதிகமாகச் செலவழித்த தொகை குறித்து 48 மணி நேரத்தில் விளக்கம் அளிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் அழைப்பாணை அனுப்பியுள்ளது. இதே போன்று சமத்துவ மக்கள் கட்சி தலைவர் மற்றும் தே.மு.தி.க. வேட்பாளர் ஜாஹிர் உசேன் மீது, விதி முறைகளை மீறி வாகனத் தொடரணியாக கட்சிக்கொடிகளுடன் சென்றது தொடர்பிலும் பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

# லோக்பால் பிரேரணையை வலியுறுத்தி அன்னா குழு ஜூலை 25 உண்ணாவிரதம்

பாட்னா, ஜூன் 8
லோக்பால் பிரேரணை நிறைவேற்ற வலியுறுத்தி அடுத்த மாதம் 25 ஆம் திகதி தொடக்கம் டில்லியில் காலவரையற்ற உண்ணாவிரதம் இருக்கப்போவதாக அன்னா குழுவினர் அறிவித்துள்ளனர்.

இதுகுறித்து அன்னா குழுவின் மத்திய குழு உறுப்பினர் கோபால் ராய் பாட்னாவில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது:-

வலிமையான லோக் பால் பிரேரணையை நிறைவேற்ற மத்திய அரசை வலியுறுத்தி காலவரையற்ற உண்ணாவிரத போராட்டம் நடத்த அன்னா குழு முடிவு செய்துள்ளது. டில்லி ஜந்தர் மந்தரில் அடுத்த மாதம் 25 ஆம் திகதி தொடக்கம் இந்த போராட்டம் ஆரம்பிக்கப்படும்- என்றார் அவர். (வ)

# ஜூலை 25 இல் பா.ஜ.க. சிறை நிரப்புப் போராட்டம்

பெற்றோல் விலை உயர்வை முழுமையாக ரத்து செய்ய வலியுறுத்தி எதிர்வரும் 22 ஆம் திகதி சிறை நிரப்பும் போராட்டம் நடைபெறும் என்று தமிழக பாரதீய ஜனதாக்கட்சித் தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் நேற்று முன்தினம் புதன்கிழமை செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

பெற்றோல் விலையை வரலாறு காணாத அளவுக்கு ரூ. 7.50 உயர்த்திய மத்திய அரசு ரூ. 2 மட்டுமே குறைத்துள்ளது. இது மக்களை ஏமாற்றும் செயலாகும். பெற்றோல் விலை உயர்வை முழுமையாக ரத்து செய்ய வலியுறுத்தியும், தொடர்ந்து அதிகரிக்கும் விலைவாசி உயர்வைக் கண்டித்தும் எதிர்வரும் 22 ஆம் திகதி தமிழகம் முழுவதும் பா.ஜ.க. சார்பில் சிறை நிரப்பும் போராட்டம் நடைபெறும்.

மதுரையில் நடைபெற்ற பா.ஜ.க. மாநாடு மிகப் பெரிய வெற்றி அடைந்துள்ளது. இத [illegible] துள்ளனர்.- என்றார். (வ)



டில்லியில் உட்கட்டமைப்புத் துறையின் வளர்ச்சி குறித்து நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் திட்டக் குழு துணைத் தலைவர் மான்டேக் சிங் அலுவாலியா ஆகியோர் உரையாடுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் படுகொலை

## சிரியாவில் அரச இராணுவத்தினர் அட்டூழியம்

ஹோம்ஸ்,ஜூன் 8
சிரியாவின் மத்திய பகுதியான ஹாமா மாகாணத்தில் மீண்டும் படுகொலைகள் இடம்பெற்றுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பெண்கள் மற்றும் சிறுவர்கள் உள்ளடங்கலாக 86 பேர் அரச இராணுவத்தினரால் கொல்லப்பட்டுள்ளனர் என்று எதிர்தரப்பு செயற்பாட்டாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

20 க்கும் மேற்பட்ட சிறுவர்களும், 20 பெண்களும் இதில் அடங்கியுள்ளனர் என அந்த நாட்டுத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

எனினும் தீவிரவாத தாக்குதலொன்றின் பின்னர் சிலரின் சடலங்களை இராணுவத்தினர் மீட்டுள்ளனர் என சிரிய அரச தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

ஹூலா நகரில் 108 பேர் படுகொலை செய்யப்பட்டு



இரண்டு வாரங்கள் கடந்துள்ள நிலையில், இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வெளிநாட்டு இராணுவ தலையீடுகளைப் பெறுவதற்கு கிளர்ச்சியாளர்கள் முயற்சி செய்வதாக சிரிய ஜனாதிபதி ஆசாத் குற்றஞ் சாட்டியுள்ளார்.

இதேவேளை சிரிய ஜனாதிபதி ஆசாத் அனைத்து அதிகாரங்களையும் கைமாற்ற வேண்டுமென அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார்.


துருக்கியின் இஸ்தான்புல் நகரில் நடைபெற்ற சிரிய நண்பர்கள் என்ற அமைப்பின் சந்திப்பின் பின்னர் ஹிலாரி கிளின்டன் இதனைத் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இடைக்கால அரசு தலைமையில் சுயாதீனமானதும் நியாயமானதுமான தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதனிடையே சிரியாவின் நண்பர்கள் அமைப்பின் அடுத்த சந்திப்பை எதிர்வரும் ஜூலை ஆறாம் திகதி பாரிஸில் நடத்தவுள்ளதாக பிரான்ஸ் அறிவித்துள்ளது.

பெண்கள் மற்றும் சிறுவர்கள் உள்ளடங்கலாக 86 பேர் அரச ஆதரவு இராணுவத்தினரால் கொல்லப் பட்டுள்ளனர் என்று எதிர்தரப்பு செயற்பாட்டாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## ஈரான் அணுஆயுதங்கள் பெறுவதை சீனா எதிர்க்கும்



மத்திய கிழக்கு நர்டுகள் அணு ஆயுதங்களைப் பெறுவதைத் தமது நாடு எதிர்க்கும் என சீனப் பிரதமர் வென் ஜியாபோ தெரிவித்துள்ளார்.


சீனாவிற்கு பயணம் செய்துள்ள ஈரான் ஜனாதிபதி முகம்மது அஹமதி நிஜாத்திடம், வென் ஜியாபோ இதனைத் தெரிவித்துள்ளார் என ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

மத்திய கிழக்கில் ஈரானின் அணுத்திட்டம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளதுடன், அணு ஆயுதங்களை அந்த நாடு விருத்தி செய்வதாக மேற்குலக நாடுகள் சந்தேகம் வெளியிட்டுள்ளன.

எனினும் ஈரான் விவகாரத்தைப் பாரபட்சமற்ற முறையில் இராஜதந்திர ரீதியில் அணுக வேண்டும் எனவும் செய்தியாளர்கள் மத்தியில் சீனப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யா - சீனா தலைமையிலான ஷங்ஹாய் ஒத்துழைப்பு நிறுவனத்தின் பாதுகாப்பு மாநாட்டில் ஈரான் ஜனாதிபதியும் கலந்து கொண்டுள்ளார்.

## தனயனுக்குத் தீர்ப்பெழுதிய தந்தை



பாகிஸ்தானின் பிரபல வணிகர் ஒருவரிடம், தன் மகன் பல ஆயிரம் கோடி ரூபாய் பெற்றார் எனக் கூறப்படுவது குறித்த வழக்கை, பாகிஸ்தான் தலைமை நீதிபதி இப்திகார் சவுத்ரி, நேற்று முன்தினம் விசாரித்தார்.

பாகிஸ்தான் தலைமை நீதிபதியின் மகன் அர்சலான் இப்திகார். பாகிஸ்தானின் பிரபல வணிக நிலைய உரிமையாளர் மாலிக் ரியாஸ் ஹூசைன். இவர் மீது பாகிஸ்தான் உயர்நீதிமன்றில் அதிக வழக்குகள் உள்ளன. தன் மீதான வழக்குகளில் சலுகை பெறுவதற்காக, அர்சலானுக்கு ரியாஸ், 3 லட்சத்து 400 மில்லியன் ரூபாய் கொடுத்தார் என, பாகிஸ்தானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்தச் செய்தியைத் தொடர்ந்து, உயர்நீதிமன்றம் தன்னிச்சையாக இந்த வழக்கை எடுத்துக் கொண்டது.

இதுகுறித்து, தலைமை நீதிபதி இப்திகார் சவுத்ரி குறிப்பிடுகையில், இந்த வழக்கில் என் மகன் சம்பந்தப்பட்டிருந்தாலும் கூட உயர்நீதிமன்றத்தின் கௌரவத்தை விட்டுக்கொடுக்க முடியாது, என்றார். அர்சலானுக்கு, ரியாஸ் கணிசமான பணம் கொடுத்ததார் எனக் கூறப்படுவதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படி, இப்திகார் தலைமையிலான நீதிமன்றக் குழு உத்தரவிட்டுள்ளது.

## பாகிஸ்தானின் உறவு முக்கியம்: அமெரிக்கா

இந்தியாவுடனான உறவு மிகவலுவாக உள்ளது, அதே நேரத்தில் பாகிஸ்தானுடனான உறவு முக்கியமானது என்று அமெரிக்கா கருத்துத் தெரிவித்துள்ளது.

இந்தியா - அமெரிக்கா இடையிலான உறவை வலுப்படுத்தும் 3ஆவது கட்ட பேச்சு ஜூலை 13இல் வொஷிங்டனில் நடைபெறவுள்ளது. இதில் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா தலைமையில் பல்வேறு அமைச்சர்கள் அடங்கிய உயர்நிலைக் குழு பங்கேற்க இருக்கிறது.

இந்த நிலையில அமெரிக்க அரசு செய்தித் தொடர்பாளர் மார்க்டோனர், வொஷிங்டனில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது இந்தியா- அமெரிக்கா பேச்சுக் குறித்து அவர் கூறியதாவது

இந்தியாவுடனான அமெரிக்க உறவு மிகவும் வலுவாக உள்ளது. தொடர்ந்து நல்ல முறையில் மேம்பட்டு வருகிறது. அடுத்த வாரம் இருநாடுகளிடையே மிகமுக்கியமான பேச்சுகள் நடைபெறவுள்ளன. இது இந்தியாவுடனான உறவை மேலும் வலுப்படுத்தும்- என்றார்.

இதனிடையே பாகிஸ்தானுடனான உறவு குறித்து அமெரிக்க ஜனாதிபதி இல்லமான வெள்ளை மாளிகையின் ஊடகப் பிரிவு செயலாளர் கார்னி கருத்துத் தெரிவிக்கையில், அமெரிக்காவின் பாதுகாப்பு தொடர்பான விடயத்துக்காக பாகிஸ்தானுடன் இணைத்து செயல்பட்டு வருகிறோம்.

எனவே அந்த நாட்டுடனான உறவு மிகவும் முக்கியமானது. ஒருசில விவகாரங்களால் பாகிஸ்தானுடன் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

எனினும் பேச்சு நடத்தி அதனை அமெரிக்கா தீர்த்துக் கொண்டுள்ளது. அல்குவைதா உள்ளிட்ட தீவிரவாத அமைப்புகளை முற்றிலுமாக ஒழிக்க அமெரிக்கா உறுதி பூண்டுள்ளது.

எனவே ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் எல்லைப் பகுதிகளில் தாக்குதல் நடத்தப்படுகிறது. இதில் ஏராளமான தீவிரவாதிகள் அழிக்கப்பட்டுள்ளனர் -என்றார்.

## ஒபாமாவை ஆதரிக்கும் கஸ்ரோவின் வாரிசு

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஒபாமா மீண்டும் வெற்றி பெற விரும்புகிறேன் என்று கியூபா ஜனாதிபதி ரோல் கஸ்ரோவின் மகள் தெரிவித்துள்ளார். கியூபா ஜனாதிபதி ரோல் கஸ்ரோவின் மகள் மேரிலா கஸ்ரோ எஸ்பின், சி.என்.என் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது உலகின் குடிமகள் என்ற அளவில், அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஒபாமா மீண்டும் வெற்றி பெற விரும்புகிறேன். நிறைய மாற்றங்களைக் கொண்டு வர ஒபாமா முயற்சிக்கிறார்.

அவர் 2ஆவது முறை ஜனாதிபதியானால், மாற்றங்களை கொண்டு வருவார். அதனால்தான் அவர் வெற்றி பெற வேண்டும் என்று கூறுகிறேன். இது என் சொந்தக் கருத்து. அவருடைய பேச்சுகள் அடிமனதில் இருந்து வருவதாக நினைக்கிறேன். அவரிடம் நிறைய திட்டங்கள் இருக்கின்றன. அவர் பல திட்டங்களை ஆரம்பித்துள்ளார். அதைத் தொடர்ந்து செயல்படுத்த ஆதரவு அளிக்க வேண்டும். ஒபாமா நேர்மையானவர் என்று நினைக்கிறேன். அவருக்கு அமெரிக்காவில் அரசியல் ஆதரவு கிடைத்தால், கியூபா மீதான பொருளாதாரத் தடையை நீக்க முடிவெடுக்க முடியும் என்று நம்புகிறேன்- என்றார்.

## பயப்பீதியில் சீவன் போகிறது

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட எகிப்து முன்னாள் ஜனாதிபதி முபாரக் உடல் நிலை மோசம் அடைந்ததால், சிறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். எகிப்தில் கடந்த 30 ஆண்டுகளாக ஜனாதிபதியாக இருந்தவர் ஹோஸ்னி முபாரக்.

ஏராளமான ஊழல் புரிந்த இவர் உடனடியாகப் பதவி விலகக் கோரி, மக்கள் கிளர்ந்தெழுந்தனர். ஓராண்டாகத் தொடர் போராட்டம் நடத்தினர். போராட்டத்தை ஒடுக்க இராணுவத்தை ஏவினார் முபாரக். குண்டு வீச்சு, துப்பாக்கிச் சூட்டில் அப்பாவி மக்கள் 800 பேர் கொல்லப்பட்டனர். கடைசியில் பதவி விலகிய முபாரக் குடும்பத்துடன் தப்பி, அருகில் உள்ள தீவில் தஞ்சம் அடைந்தார். பின்னர் கெய்ரோ திரும்பினார். இவர் மீதும், இவரது மகன்மார் மீதும் ஊழல் மற்றும் கொலை வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

கொலை வழக்கில் முபாரக்குக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. மகன்மார் விடுதலை செய்யப்பட்டனர். இந்த நிலையில், கெய்ரோவில் சிறையில் அடைக்கப்பட்டிருந்த முபாரக் அதை ஜீரணிக்க முடியாமல் அதிர்ச்சியில் அடிக்கடி மயங்கி விழுந்தார். அவரை சிறை மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்த்துள்ளனர்.

அவருக்கு சுவாசத்துக்காக வென்டிலேட்டர் பொருத்தப்பட்டது. அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் கூறுகையில், பெரிய பதவியில் இருந்து விட்டு ஆயுள் சிறை என்பதை அவரால் ஜீரணிக்க முடியவில்லை. அதனால், அவர் மனரீதியாக பாதிக்கப்பட்டு உடல்நிலை மோசமடைந்துள்ளது என்றனர்.



உக்ரைனில் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களைத் தடுக்க இராணுவத்தினர் தயாராகி விட்டனர்.

## ஆபிரிக்காவில் அல்ல; ஆசியாவிலேயே முதல் மனிதன்

நஷனல் அக்கடமி ஒப் சயன்ஸ், நாளிதழில், ஆதிமனி தன் ஆசியாவில்தான் தோன்றி னான் என்ற புதிய கண்டுபிடிப்பு வெளியிடப் பட்டுள்ளது.

லிபியாவின் சகாராப் பாலைவனத்தில் கண்டெடுக்கப்பட்ட மனிதனின் உடல் அமைப்பை போன்ற எலும்பு கூட்டை மியான்மரில் புதைபொருள் ஆராய்ச்சி நிபுணர்கள் கண்டெடுத்தனர்.

அது சுமார் 3 கோடியே 80 லட்சம் ஆண்டுகளுக்கு முந்தையது என கணித்த அவர்கள் ஆதிமனிதன் ஆபிரிக்கா கண்டத்தில் தோன்றியது என அறிவித்தனர். இந்த நிலையில் தற்போது மியான்மரில் புதிதாக 4 மனித பற்கள் கண்டெடுக்கப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அது ஆதிகால மனிதனின் பல் என உறுதி செய்யப்பட்டது. இது குறித்து 6 வருடங்கள் நடத்திய ஆய்வுக்குப் பின்னர் மனிதன் ஆசியா கண்டத்தில்தான் முதன்முதலில் தோன்றினான் என கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

'அப்ரோசியா டிஜிடே' எனப் பெயரிடப்பட்ட புதைபடி மம் ஆபிரிக்கா மற்றும் ஆசியா கண்டத்தின் மனித உடல் உறுப்புகளுடன் தொடர்புடையதாக உள்ளது. எனவே, ஆசியாவில் தோன்றிய மனிதன் இடம் பெயர்ந்து ஆபிரிக்கா வில் குடியேறி இருக்கலாம் என நிபுணர்கள் கருதுகின்றனர் என்று வெளியிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ந்தது கந்தகார்

## அதிக பொதுமக்கள் உயிரிழப்பு



காபூல், ஜூன்8

ஆப்கானிஸ்தானின் தெற்கு கந்தகார் மாகாணத்தில் தற்கொலைப் படை தீவிரவாதி ஒருவர் நடத்திய வெடிகுண்டுத் தாக்குதலில் பொதுமக்கள் 41 பேர் கொல்லப்பட்டனர். 22 பேர் காயம் அடைந்துள்ளனர்.

நேட்டோ படையின் விமான தளம் அருகேயுள்ள வாகன நிறுத்தத்தில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் உயிரிழந்தோரில் பெரும்பாலானோர் வாகனச் சாரதிகள்.

இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த இயக்கத்தினரும் பொறுப்பேற்கவில்லை. ஆனால் ஜனாதிபதி ஹமீட் ஹர்சாய் தலைமையிலான அரசின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிப்பதற்காக தலிபான்கள்தான் இதுபோன்ற தாக்குதல்களை நடத்துவதாக அரசு குற்றம் சாட்டியுள்ளது.

தெற்கு ஆப்கனில் கந்தகார் விமான தளம்தான் நேட்டோ படையினரின் மிகப் பெரிய விமான தளம் ஆகும். கடந்த காலங்களிலும் கந்தகார் விமான தளத்தைக் குறி வைத்து, தலிபான்கள் பலமுறை தாக்குதல்கள் நடத்தியுள்ளனர். இதற்கு முன்பும் இராணுவத்தைக் குறிவைத்து, சாலையோர வாகன நிறுத்தங்களில் தலிபான்கள் நடத்திய பல தாக்குதல்களில் பொதுமக்கள்தான் அதிகமாக கொல்லப்பட்டுள்ளனர்.

மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள இந்தப் பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதால் அதிக உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதென தெரிய வருகின்றது. இதன்போது நேட்டோ படையினருக்கு எந்தவித இழப்புக்களும் ஏற்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# வெறுமையாகியது கிரீஸின் திறைசேரி

கிரீஸில் அரச திறைசேரி வெறுமையாகி விட்டதால், ஊழியர்களுக்குச் சம்பளம், ஓய்வூதியம் உள்ளிட்டவை வழங்கப்படுமா என்பது கேள்விக்குறியாக உள்ளது. யூரோ நாணயத்தைப் பயன்படுத்தும் 17 நாடுகளில், கிரீஸ் நாடு தற்போது பெரும் கடன் சுமையில் மூழ்கியுள்ளது.

நிதி நெருக்கடியில் தத்தளிக்கும் கிரீஸைக் காப்பாற்ற ஐரோப்பிய ஒன்றியம், சர்வதேச நாணய நிதியம், ஐரோப்பிய மத்திய வங்கி ஆகியவை முதல் தவணையாக 110 பில்லியன் யூரோவும் இரண்டாவது தவணையாக 109 பில்லியன் யூரோவையும் வழங்கின. மூன்றாவது கட்டமாக 8 பில்லியன் யூரோ வழங்கத் திட்டமிடப்பட்டது. ஆனால், ஏற்கனவே வழங்கப்பட்ட நிதிக்கு கைமாறாக ஐ.எம்.எப்., உள்ளிட்ட மூன்று அமைப்புகளும் நிர்ணயித்திருந்த பொருளாதார சீர்திருத்தங்களை, கிரீஸ் மேற்கொள்ளவில்லை. இதன் காரணமாக, மூன்றாவது கட்ட நிதியுதவி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் வரை தான் அரச திறைசேரியில் பணம் இருக்கும். மூன்றாவது தவணை நிதி கிடைக்கா விட்டால், ஊழியர்களுக்கு சம்பளம், ஓய்வூதியம் போன்றவை அளிக்க முடியாது என, கிரீஸ் அரசு தெரிவித்துள்ளது. கிரீஸ் திவாலாகப் போவதாக செய்தி பரவியதால், கடந்த வாரம் ஐரோப்பிய பங்குச் சந்தைகளில் சரிவு காணப்பட்டது. மூன்றாவது கட்ட தவணை அளிக்கப்பட வேண்டுமானால், ஒரு லட்சம் ஊழியர்களை வீட்டுக்கு அனுப்ப வேண்டும்; சம்பளம், ஓய்வூதியங்களைக் குறைக்க வேண்டும்; நஷ்டத்தில் இயங்கும் பொதுத் துறை நிறுவனங்களை மூட வேண்டும்; தனியார் மயமாக்கலை விரைந்து செயல்படுத்த வேண்டும் உள்ளிட்ட 15 நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என, மேற்கண்ட மூன்று அமைப்புகளும் தெரிவித்துள்ளன.

# பேஸ்புக்: இன்னும் 5 ஆண்டுகளுக்கே




சமூக இணையதளமான பேஸ்புக் இல்லாத ஒரு உலகத்தைத் தற்போது நினைத்துக் கூட பார்க்க முடியாது. அந்த அளவுக்கு நவீன இளைஞர்களின் இதயத் துடிப்பாகவே பேஸ்புக் ஆகிவிட்டது. இளைஞர்கள் மட்டுமல்லாமல் பெரியவர்களும் பேஸ்புக்கில் மிகவும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இத்தகைய பேஸ்புக் அடுத்த 5 அல்லது 8 ஆண்டுகளில் காணாமல் போய்விடும் என அயன் பயர் கப்பிடல் நிறுவனர் எரிக் ஜோக்சன் கூறியுள்ளார்.

இதுபற்றி பேசிய ஜோக்சன், யாகூ இணையத்தளத்தைப் போல் பேஸ்புக்கும் அடுத்த 5 அல்லது 8 ஆண்டுகளில் மறைந்துவிடும். கடந்த 2000ஆம் ஆண்டில் கிடைத்து வந்த வருமானத்தில் 10 சதவீதம் மட்டுமே யாகூ நிறுவனத்திற்குத் தற்போது கிடைத்து வருகிறது.

எல்லா விதத்திலும் யாகூ மறைந்துவிட்டது. தகவல் பரிமாற்றத்தின் முதல் தலைமுறையாக யாகூ விளங்கியது. இரண்டாவது தலைமுறையாகப் பேஸ்புக் தற்போது விளங்கி வருகிறது.

ஆனால் அடுத்ததாக வரும் மூன்றாவது தலைமுறையில் அனைத்திற்கும் மாற்றாக செல்போன் மட்டுமே இருக்கும். பெப்ரவரி மாத அறிக்கையின்படி 50 சதவீத உபயோகிப்பாளர்கள், பேஸ்புக் சேவையை செல்போன் மூலமாகவே பெற்று வருகிறார்கள். எனவே 850 மில்லியன் மக்கள் பேஸ்புக்கை உபயோகித்து வந்தாலும், அந்தநிறுவனம் பெரிய அளவில் லாபம் ஈட்ட முடியாது என எச்சரித்துள்ளார்.

மேலும், உலகிலிருந்து பேஸ்புக் மறையப் போவதை தடுப்பதற்காக, அதன் நிறுவனர்கள் நிறைய செல்போன் நிறுவனங்களை நடத்தி அதன் மூலம் பேஸ்புக் சேவையை தொடர நினைக்கலாம்.

ஆனால் செல்போன் நிறுவனத்தை நடத்துவதற்கும், இணையத்தள நிறுவனத்தை நடத்துவதற்கும் நிறைய வித்தியாசங்கள் உள்ளன.

எவ்வாறு கூகுள் நிறுவனம், சமூக இணையத்தளமாக மாற மிகவும் போராடியதோ, அதேபோல சமூக இணையத்தளமான பேஸ்புக், தன்னை செல்போன் நிறுவனமாக மாற்றிக்கொள்ள மிகவும் போராட வேண்டி இருக்கும் என ஜோக்சன் கூறியுள்ளார்.


விற்பனையில்..

யார் வந்தேறு குடிகள்...?

யாழ்ப்பாண மண்ணை தமிழ் மன்னன் சங்கிலியனும்,
வன்னி மண்ணை தமிழ் மன்னன் பண்டார வன்னியனும்,
திருகோணமலை மண்ணை தமிழ் மன்னன்
குளக்கோட்டனும் ஆட்சி செய்ததாகவே பழந்தமிழர்
வரலாறுகள் சான்று பகர்கின்றன. தற்போது சிங்கள
மாவட்டமாகவுள்ள அநுராதபுரம் மாவட்டத்தையும்
எல்லாளன் என்ற தமிழ் மன்னன் ஆண்டதாகவே
வரலாறுகள் உள்ளன. கிழக்கு மாகாணத்திலுள்ள
அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில்
கால்நூற்றாண்டுக்கு முற்பட்ட காலங்களிலேயே திட்டமிட்ட
சிங்களக் குடியேற்றங்களை.....

முடிக்கப்பட்ட ஆயுதப்போரும்
தொடங்கப்பட்ட இன்னொரு போரும்



......... அவ்வகையில் முல்லை மாவட்டம் மூன்று
முனைகளில் சிங்களக் குடியேறிகள் மூலம்
ஆக்கிரமிக்கப்பட்டு வருகிறது. ஒரு புறத்தில்
திருமுறிகண்டி தொடக்கம் கொக்காவில் வரையும்
மறுபுறத்தில் கொக்குத்தொடுவாயிலும் இன்னொருபுறம்
நெடுங்கேணியை அண்டிய மணலாற்றுப் பிரதேசத்திலும்
குடியேற்றங்கள் நிறுவப்படுவதும், சிங்களவர்கள்
படையினரின் உதவியுடன் தாங்களாகவே
வந்து குடியேறுவதும்.........

தொழில் வாய்ப்பை
வெற்றிகொள்ள...






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னம்பிக்கை

தன்னம்பிக்கை இல்லாத மனிதர்கள் வெற்றிக்கனியை சுவைப்பதென்பது இயலாத ஒன்றாகும். ஒரு மனிதனின் தன்னம்பிக்கை அளவைப் பொறுத்து வெற்றிச் சிகரத்தின் உயரம் தீர்மானமாகிறது. இந்த உலகத்தில் பிறந்த எல்லா மனிதர்களிடமும் அவர் அவர்களுக்கென்று ஒரு தனித் திறமை இருக்கிறது. அந்தத் திறமையை அடையாளங்கண்டு அதை மேலும் வளர்க்கப் பாடுபட்டு அந்த ஆற்றலைப் பயன்படுத்தி நம்மால் வெற்றிபெற இயலும் என்று தன்னாற்றலின், திறமையின் மீது நம்பிக்கை வைத்திருப்பவர்களைத் தான் தன்னம்பிக்கையாளர்கள் என்று கூறலாம்.

பிறப்பிலேயோ அல்லது வளர்ப்புச் சூழலினாலேயோ ஒருவர் கூச்ச சுபாவமும் வெட்க உணர்வும் கொண்டவராக இருந்



தாலும் வாழ்க்கையின் எந்தவொரு கட்டத்திலும் அதை உணர்ந்து கூச்சத்தையும் வெட்கத்தையும் வீசி எறிந்தவர்கள் தான் வெற்றியாளர்களாக மாற முடியும்.

கூச்சமும் குற்ற உணர்வும் முன்னேற்றத்தின் முதல் எதிரிகள் என்று கூட நாம் வரையறுக்கலாம். ஆம் குற்ற உணர்வும் கூட ஒரு மனிதனின் பிடரியைப் பற்றி இழுத்து பின்னுக்குத் தள்ளும். கண்ணுக்குத் தெரியா எதிரி நம்மோடு கூடவே நட்பாயிருப்பதை நாம் அடையாளங் காண வேண்டும். சமுதாயம் விதித்த தர்மங்களையும் நியாயங்களையும் பின்னுக்குத் தள்ளி, கெட்ட நட்புகளின் சகவாசத்தாலும் தன்னையும் தன் மனதையும் அடக்க இயலா ஆளுமைக் குறைபாட்டினாலும் மற்றவர்களுக்கு மறைத்துச் செய்த குற்றங்களும், பழிகளும், பாவங்களும் மனச்சாட்சியில் குற்ற உணர்வாகப் பதிவு செய்யப்படுவதால் ஆற்றல் குறைபாடும் அச்சமும் உருவாகி தன்னம்பிக்கையை தகர்த்துவிடுகின்றன.

எதன்ஸ் மாநகரத்து எழில்மிக்க இளைஞர்களே! ஓடிவாருங்கள்! கூடி நில்லுங்கள்! உங்களுக்கெல்லாம் உன்னதமானதொரு வெற்றி இரகசியத்தை போதிக்கிறேன்! என்று வீதிமுனைகளில் விளக்கம் தந்த சாக்கிரடீஸ் சொன்னது கூட '' உன்னையே நீ அறிவாய்'' (**Know Thyself**) என்பதுதான். வெற்றியின் விளிம்பைத் தொடவேண்டும் என்று விருப்பப்படுகிறவர்களெல்லாம் ''அகத்தாய்வு'' செய்ய வேண்டும்.

ஒருவேளை ''தன்னையறிதல்'' என்பதைத் தவறாக புரிந்து கொண்டவர்கள் தன் பெயரையும், குடும்பத்தையும், உறவையும் நண்பர்களையும் அறிந்திருக்குபோது வேறென்ன அறிவதற்கு இருக்கிறது என்று எண்ணாமல் தன் பலம் என்ன? தன் பலவீனம் என்ன? தன் விருப்பங்கள் என்ன? ஆசைகள் என்ன? அபிலாஷைகள் என்ன? எதன் மீது வெறுப்பு? ஏன் அந்த வெறுப்பு? என் இலட்சியம் என்ன? இலக்கு என்ன? எதை நோக்கி நான் பயணம் செய்ய வேண்டும்? இப்படி அடுக்கடுக்காக ஆராயும் போது தன் ஆற்றலை அறிந்து கொள்ளலாம். அளந்தும் கொள்ளலாம். வெற்றியின் முதல் படி தன்னையறிதல்.

''இறை நம்பிக்கை இல்லாதவனை நாத்திகன் என்று பழைய மதங்கள் சொல்லுகின்றன. ஆனால் தன்னம்பிக்கை இல்லாதவனைத் தான் நாத்திகன் என்று புதிய மதம் சொல்லுகிறது'' என விவேகானந்தர் விளம்புகிறார்.

வரலாற்றின் ஏடுகளைப் புரட்டிப் பார்த்தால் அழியாப் புகழ் படைத்து ஆழி சூழ் உலகை ஆண்டவர் அனைவரும் தனி மனிதர்கள் தான்.

ஆனால் அவர்களெல்லோரும் தன்னம்பிக்கை மிக்கவர்களாக இருக்கிறார்கள், என்னால் முடியுமா? என்று சந்தேகத்தோடு கேட்பவர்கள் பிரஞ்சு பேரரசன் நெப்போலியன் போனாபார்ட் வாழ்க்கையைப் படித்துப் பாருங்கள். '' முடியாது'' என்கின்ற வார்த்தை பிரெஞ்சு வார்த்தை அல்ல, அது முட்டாள்களின் அகராதியில் மட்டுமே உள்ளது என்று முழங்கிய நெப்போலியன், மத்தியதரைக் கடலில் உள்ள காசிகா என்னும் தீவில் பிறந்து பிரெஞ்சுப் படையில் ஒரு சாதாரண போர் வீரனாக வாழ்க்கையைத் தொடங்கியவன் தான். பிரஞ்சு ஏகாதிபத்தியத்தின் சக்கரவர்த்தியாகத் தன்னை உயர்த்திக்கொள்ள முடிந்ததென்றால் அது அவன் கொண்டிருந்த ''தன்னம்பிக்கை'' என்னும் தன்மையினால் தான்

-மனோசக்தி மாசிலாமணி

# தமிழரின் தொன்மையைப் பாதுகாக்க பொது அமைப்புகள் முன்வர வேண்டும்

## ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர்

தொன்மை மொழிகளான இலத்தீன்,சமஸ்கிருதம் ஆகியன வழக்கொழிந்து போகும் போதும் தமிழ் மொழி தன்னை நிலை நிறுத்தி நிற்கிறதென்றால் எம்முன்னோர் இட்ட அடித்தளமே அதற்குக் காரணமாகும்.

தமிழின் தொன்மையைப் பேணிப் பாதுகாக்க தமிழறிஞர்களும், ஆலயங்கள்,கலை,கலாசார அமைப்புக்கள் முன்வர வேண்டும் என சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.

வலிகாமம் கல்வி வலய தமிழ் மொழித்தின விழாவும் பரிசளிப்பு விழாவும் கடந்த சனிக்கிழமை 2.6.2012 முற்பகல் 9 மணிக்கு இராமநாதன் கல்லூரி பிரதான மண்டபத்தில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முத்தமிழ் என்ற தலைப்பில் சிறப்புரை நிகழ்த்தும் போதே ஆறுதிருமுருகன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:-

பல ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த தமிழ் மொழிக்குச் சொந்தக்காரராக இருப்பதில் நாம் பெருமைப்பட வேண்டும்.தொன்மை மொழிகளான இலத்தீன்,சமஸ்கிருதம் ஆகியன வழக்கொழிந்து போகும் போதும் தமிழ் மொழி தன்னை நிலை நிறுத்தி நிற்கிறதென்றால் எம்முன்னோர் இட்ட அடித்தளமே அதற்குக் காரணமாகும்.

பல நாடுகளில் தமிழர்கள் இருக்கும் போதும் அவர்களால் தமிழைப் பேச முடியாதுள்ளது. மொறீஸியஸ்,தென்னாபிரிக்காவில் உள்ளவர்களே இவ்வாறு தமிழ் தெரியாத தமிழர்களாக உள்ளனர்.

மலேசியா,சிங்கப்பூரில் உள்ளவர்களின் தலைமுறைகளும் தமிழைப் பேச முடியாத நிலையில் உள்ளனர்.இங்கிருந்து புலம் பெயர்ந்து வாழும் 5 இலட்சம் தமிழர்களும் தமது பிள்ளைகள் தமிழைப் பேச வேண்டும் என்பதில் அக்கறையுடன் செயற்படுகின்றனர்.

ஆனால் அவர்களது அடுத்த சந்ததிகள் தமிழ் மொழியைப் பேசக்கூடிய நிலையில்,எழுதக் கூடிய நிலையில் இருப்பர் என்பது சந்தேகத்துக்கு உரியதாகும்.

எனவேதான் தமிழ் அறிஞர்களும், தமிழர் அமைப்புக்களும் தமிழை அழியாது பேணிக் காக்கப் பாடுபட வேண்டும் என்றார்.

(எ-38)

## நிர்வாக உறுப்பினர் தெரிவு

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளத்திற்கு புதிய நிர்வாக சபைத் தெரிவு இடம்பெற்றுள்ளது.

சம்மேளனத்தின் யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.அருந்தவநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சம்மேளனத்தின் புதிய தலைவராக அந்தோனிப்பிள்ளை எமிலியாம்பிள்ளை ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 11 சமாசங்களின் பிரதிநிதிகளை உள்ளிட்ட புதிய நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. சம்மேளனத்தின் உபதலைவராக வேலணை சமாசத்தைச் சேர்ந்த ச.இரங்கநாயகம், செயலாளராக காரைநகர் சமாசத்தைச் சேர்ந்த கே.இராஜச்சந்திரன் பொருளாளராக யாழ்ப்பாணம் சமாசத்தைச் சேர்ந்த யு.சகாயராஜா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

புதிய தலைவரான அந்தோனிப்பிள்ளை எமிலியாம்பிள்ளை முன்பு சம்மேளனத்தின் உபதலைவராக சேவையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-8)

## வடமாகாண எழுத்தாக்க போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 8

வடமாகாணநிலைத் தமிழ் மொழித் தினப்போட்டிகள் -2012 இன் எழுத் தாக்கப் போட்டி முடிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. விவரம் வருமாறு:-

**திறனாய்வுப் போட்டி பிரிவு 5**

முதலாமிடம் லோ.தேனுஷா யா/விக்னேஸ்வராக் கல்லூரி, இரண்டாமிடம் சி.துளசி யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி. மூன்றாமிடம் சி.பிராசாந், யா/புங்குடுதீவு ம.வித்தி, இ.ஜெய்நதன் யா/வரணி ம.வி.

**குறுநாடக ஆக்கம் பிரிவு-4**

முதலாமிடம் தே.உமையாழினி, யா/அருணோதய ம.விஇரண்டாமிடம் ம.மதனாஹரன் யா/நெல்லியடி மத்திய ம.வி, மூன்றாமிடம் அ.றொகான் டியோனி யா/ சென் பற்றிக்ஸ் கல்லூரி.

**குறுநாடக ஆக்கம் பிரிவு-5**

முதலாமிடம் ஜி.அபர்ணா யா/வைத்தீஸ்வராக் கல்லூரி, இரண்டாமிடம் ச.ஜெயபாரதி யா/வல்வை மகளிர் கல்லூரி, மூன்றாமிடம் ஹ.விதுசனா யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி

**கவிதை ஆக்கம் பிரிவு-4**

முதலாமிடம் வ.விதுசா யா/மகாஜனா கல்லூரி, இரண்டாமிடம் மு.வினோராஜ் யா/உசன் இராமநாதன் ம.வி.மூன்றாமிடம் பா.அனற்டல்சிகா யா/சென்.தோமஸ் றோ.க.பெ.பா.

**கவிதை ஆக்கம் பிரிவு-5**

முதலாமிடம் பு.ஆரத்தியா யா/வட.மத்திய மகளிர் கல்லூரி, இரண்டாமிடம் பொ.கஜவதனி யா/மகாஜனா கல்லூரி, மூன்றாமிடம் பு.நிவேகா யா/மீசாலை வீரசிங்கம் ம.வி.

**சிறுகதை ஆக்கம் பிரிவு-4**

முதலாமிடம் ம.லூட்ஸ் பூரணி யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, இரண்டாமிடம் நே.சிந்துஜா யா/பண்டத்தரிப்பு பெ.உ.பாடசாலை, மூன்றாமிடம் பி.லக்ஷியா யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**சிறுகதை ஆக்கம் பிரிவு-5**

முதலாமிடம் சு.சோபிகா யா/மகாஜனா கல்லூரி,இரண்டாமிடம் கி.பகிரதி யா/புங்குடுதீவு ம.வித்தி., மூன்றாமிடம் செ.பிரமிளா யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி. (எ)

(முற்றும்)



சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் மாணவ தலைவர்கள், மாணவ உதவியாளர்கள் ஆகியோருக்குச் சின்னம் சூட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் கல்லூரி நாகேந்திராஜா மண்டபத்தில் இடம்பெற்றது.
கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விருந்தினர்களாக கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும் சாவகச்சேரி நகராட்சி மன்ற உறுப்பினருமான க.மயில்வாகனம், கல்லூரியின் முன்னாள் [illegible] சி.சிவஞானம் ஆகியோர் கலந்து கொண்டு மாணவ தலைவர்களுக்கும் மாணவ உதவியாளர்களுக்கும் சின்னங்களைச் சூட்டினர். (எ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## நின்றறுக்கும் புலத் தமிழர்கள்

'அரசன் அன்றறுப்பான்; தெய்வம் நின்றறுக்கும்' என்பது முதுமொழி. அதுவே ஈழத் தமிழரை அன்றறுத்தால் புலத் தமிழர்கள் நின்றறுப்பர் என்கிற முதுமொழியாகிவிட்டது.

லண்டன் வீதிகளில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திணறுவதைப் பார்க்கையில் இந்தப் புதுமொழிதான் மனதில் தோன்றுகின்றது.

கடந்த முறையைப் போன்றே மஹிந்தவின் லண்டன் பயணம் இந்தமுறையும் சுமூகமானதாக, சிறப்பானதாக அமையவில்லை. அவர் ஹீத்ரூ விமான நிலையத்தில் வந்திறங்குவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நேரம் முதல் புலிக் கொடிகளுடன் அவருக்கு எதிரான ஆர்பாட்டக்காரர்கள் குவிந்திருந்தனர்.

பிரிட்டிஷ் மகாராணி பதவியேற்று 60 ஆண்டுகள் பூர்த்தியாவதையொட்டிய வைர விழாக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதற்காகத்தான் மஹிந்த லண்டன் சென்றார். எனினும் அவர் இந்த விழாவில் கலந்து கொண்டதனால் தேடிய தேட்டத்தை விட சர்வதேச ஊடகங்களில் அவருக்கு எதிரான போராட்டங்கள் முதன்மைப்படுத்தப்பட்டதால் அடைந்த நட்டங்கள், இழுக்குகளே அதிகமானவை.

இந்த நிலைமை ஏற்படுவதற்குக் காரணமானவரும் மஹிந்தவே. புலம் பெயர் நாடுகளில் உள்ள தமிழர்கள் அனைவரும் புலிகள் – பயங்கரவாதிகள் – என்றே அவரும் அவரது அரசில் அங்கம் வகிப்பவர்களும் திரும்பத் திரும்பச் சொல்லி வந்தனர். இதனால் கடந்த தடவையைவிடவும் இந்தத் தடவை அவருக்கான எதிர்ப்பு லண்டனில் வலுவடைந்துள்ளது.

ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் வாழும் தமிழர்கள் இந்தப் போராட்டத்துக்காக லண்டனில் கூடியிருந்தனர். இதனால் ஏற்பட்ட பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் காரணமாக, பொதுநலவாய நாடுகள் அமைப்பின் பொருளாதாரக் கூட்டத்தில் மஹிந்த ஆற்ற இருந்த உரையும் ரத்துச் செய்யப்பட்டிருந்தது.

மஹிந்தவுக்குப் போதிய பாதுகாப்பைத் தாம் வழங்க முடியும் என்று கூறியபோதும் **நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் மஹிந்தவின் உரையை நடத்த விரும்பவில்லை என்று லண்டன் பொலிஸார் கூறுகின்றனர்.**


**இதற்கான முதன்மைக் காரணம் மஹிந்தவின் மீது தமிழர்களால் சுமத்தப்படும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களே! பொதுநலவாய நாடுகள் அமைப்பு, மனித உரிமைகள் விடயத்தில் அண்மைக் காலமாக அதிக அக்கறை எடுத்துவரும் நிலையில், கடுமையான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகும் மஹிந்தவை ஆதரிக்கும் வகையில் மாநாடுகளில் அவருக்கு இடமளிக்கப்படுவதில் உள்ள தார்மீகச் சிக்கலை அந்த அமைப்பு உணர்ந்துள்ளதன் வெளிப்பாடே மஹிந்தவின் உரை ரத்தானதன் பின்னணி என்பதையும் உணர்ந்து கொள்ளலாம்.**

அந்த நிலையை ஏற்படுத்தியவர்கள் முற்று முழுதாக புலத் தமிழர்களே. தனது காரில் இருந்த இலங்கையின் சிங்கக் கொடிகளை அகற்றிவிட்டு மறைந்து பயணிக்க வேண்டிய அளவுக்கு மஹிந்தவுக்கு எதிரான எதிர்ப்பு லண்டன் தெருக்களை ஆக்கிரமித்திருந்தது.

இந்த நிலை இத்துடன் முடிந்துவிடப் போவதில்லை. ஐரோப்பிய நாட்டில் எங்கு போனாலும் இனிவரும் காலங்களில் மஹிந்த இத்தகைய அவலத்தை எதிர்கொண்டே ஆகவேண்டும். ஈழத் தமிழர்களுடன் சமரசம் செய்து கொள்வது மட்டுமே, இவற்றிலிருந்து தப்ப அவருக்குள்ள ஒரே வழி. இனியாவது விரைந்து அதைச் செய்ய மஹிந்த முன்வரவேண்டும்.

# லண்டனில் விடுதலைக் கலவரம்

■ ஜெரா



இந்த வாரத்தின் தொடக்கப் பகுதியில் லண்டன் மாநகர் இரண்டு கோலாகலங்களைச் சந்தித்தது. ஒன்று லண்டன் மக்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய மகாராணி எலிசபெத் முடிசூடிய 60ஆவது ஆண்டு விழா பூர்த்தி. மற்றையது அதே லண்டன் வாசிகளுக்கு கலவரத்தை தரக்கூடிய புலம்பெயர் தமிழர்களின் விடுதலைப் பேரெழுச்சி.

### சாத்திரமும் பயணமும்

தென்னாசியத் தலைவர்களிடையே காணப்படும் மிக முக்கியமான பண்புகளில் ஒன்று சோதிடர்களின் நிகழ்ச்சி நிரல்களுக்கு ஏற்ப பணியாற்றுவதாகும். இந்தியாவில் இருக்கும் மிகப் பிரபலமான சோதிட ஜாம்பவான்களின் ஆருடம் கூறல்களுக்கு அமைவாகவே, இந்த நாடுகளின் நாடாளுமன்றம் தொடக்கம் அதனை ஆளுகின்றவர்களின் வீடாளுமன்றம் வரைக்குமான வேலைத்திட்டங்கள் திட்டமிடப்படுகின்றன.

இலங்கை ஜனாதிபதி ஆட்சிக்கு வந்த காலம் தொட்டு பேணி வருகின்ற இந்த சோதிட நிகழ்ச்சி நிரல் லண்டன் பயணத்துக்கும் ஒரு காரணமாக அமைந்திருக்கின்றது. ஜெனிவா தீர்மானத்தோடு இலங்கை அரசைத் தொட்டிருக்கும் மேற்கின் நெருக்கீடுகளுக்கு மத்தியில் ஜனாதிபதி நாட்டில் இருந்தால் அவருக்குக் கெட்டகாலம் என யாரோ ஒரு சோதிடர் ஆருடம் கூறினாராம். அதனை ஏற்றுக்கொண்டே ஜனாதிபதி குறிப்பிட்ட காலத்துக்கு நாட்டில் இருந்து விலகியிருக்க இந்தப் பயணத்தை மேற்கொண்டிருக்கிறார் என்ற தகவலும் உண்டு.

### திருப்பம் தந்த மே 18

மே 18, இலங்கையில் சில அதிர்ச்சிகளைத் தந்தாலும், புலம்பெயர் தமிழர்களின் அரசியல் பயணத்தில் நல்ல மாற்றங்களைத் தந்தது. பல்வேறு கையாளுகைகளாலும் கையாளப்பட்ட புலம்பெயர் தமிழர் அரசியல் அமைப்புக்கள் கடந்த காலங்களில் துண்டுதுண்டாக உடைந்து கிடந்தன. மே 18இல் தமிழர் வாழும் நாடுகள் எங்கும் மேற்கொள்ளப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவு தினம், அவர்கள் அனைவரையும் ஒரு மையத்துக்குக் கொண்டுவந்தது.

**லண்டனில் ஏற்பாடாகிக் கொண்டிருந்த மகாராணியின் கொண்டாட்டத்துக்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த வரவுள்ளார்; அவரை லண்டனுக்கு வரவிடாமல் தடுப்பதற்காகவாவது நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்ற மைய எண்ணத்தில், அனைத்து** புலம்பெயர் தமிழர் அரசியல் அமைப்புக்களும் கரம் கோர்த்தன.

### லண்டனை அதிர வைத்த ஆர்ப்பாட்டம்

இந்தத் தயார்ப் படுத்தல்களை ஏற்கனவே அறிந்துகொண்ட மஹிந்த தலைமையிலான அணி, பயணம் தொடர்பில் பல்வேறு தந்திரங்களை கையாண்டது. கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து எந்தத் தகவலும் புலம்பெயர் தமிழர்களுக்குச் செல்லக் கூடாது என்பதற்காக இந்த விமான நிலையத்தில் பணியாற்றிய பெரும்பாலான ஊழியர்கள் குறித்த தினத்தில் ஓய்வுகொடுக்கப்பட்டார்கள். புதிய விமான நிலைய அதிகாரிகள் கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னரே இலங்கை ஜனாதிபதி மஹிந்த லண்டனுக்கான பயணத்தை ஆரம்பித்தார். ஆனாலும் லண்டன் விமான நிலைய வெள்ளைக்கார அதிகாரிகள் புலம்பெயர் தமிழர்களுக்கு சகல நிகழ்ச்சி நிரலையும் வழங்கிவிட்டனர்.

### தரை தொட்டதும் வெடித்தது போராட்டம்

லண்டன் விமான நிலையத்தில் மஹிந்த இறங்கியதும் இணையத்தளங்கள், சமூக வலைத்தளங்கள் அவசர அழைப்பு விடுத்தமையை ஏற்றுக் கொண்டு, பெருமளவிலான புலம்பெயர் தமிழர்கள் தமது பணியைச் செவ்வனே முன்னெடுத்தார்கள். வேலைவாய்ப்புகளுக்குப் பெரும் திண்டாட்டம் இருக்கின்ற போதிலும் அது எதனையும் கருத்தில் எடுக்காது களத்தில் குதித்தனர். ''வெளிநாட்டு ஆக்கள் ஞாயிற்றுக்கிழமை மட்டும்தான் தமிழீழம் கேட்பினம்'' என்ற புலம்பெயர் தமிழரின் போராட்டம் குறித்த விமர்சகர்களின் கருத்தை இந்த ஆர்ப்பாட்டங்கள் பொய்யாக்கின.

இரவு பகலாக மஹிந்த தங்கியிருந்த விடுதி தொடக்கம், அவர் கறுப்புக் கண்ணாடி வாகனங்களில் சுற்றித் திரியும் கள்ளப் பாதை வரையும் புலம்பெயர் ஆர்ப்பாட்டக்காரர்கள் பெருக்கெடுத்து நின்றனர். இலங்கையில் ஒரு இடத்தில் இறக்கப்பட்ட புலிக்கொடி லண்டனில் பல ஆயிரக்கணக்கான கைகளில் பறந்ததை மஹிந்த நேரடியாகவே பார்த்தார்.

இந்தப் போராட்டத்தின் உண்மையை உணர்ந்ததாலோ என்னவோ, லண்டன் பொலிஸார் தமிழ் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது எந்தச் சட்டங்களையும் இதுவரை பிரயோகிக்கவில்லை. பொதுப் போக்குவரத்துக்குத் தீங்கு விளைவிக்காமல் இருக்க பொலிஸார் வைத்த வீதித் தடைகளையும் மீறி தமிழர்களின் ஆர்ப்பாட்டம் நடக்கையில் பொலிஸார் எந்தக் கலவரமும் அடையாமல் கைகட்டிப் பார்த்திருக்கின்றனர். **ஆர்ப்பாட்டக்காரர்கள் விநியோகிக்கும் துண்டுப்பிரசுரங்களை படித்து தாமும் ஆதரவு வழங்குவதாக சில ஆர்ப்பாட்டக்காரர்களிடம் வெள்ளைக்காரர்கள் உறுதி வழங்கியிருக்கின்றனர்.**

### குழம்பியது நிகழ்ச்சி நிரல்

லண்டனில் நடைபெறும் பொருளாதாரம் குறித்த மாநாடொன்றில் உரையாற்றும் திட்டத்துடனேயே மஹிந்த அங்கு சென்றிருந்தார். ஆர்ப்பாட்டக்காரர்களின் கோஷங்கள் வலுவானதாக மாறியதை அடுத்து, அந்த மாநாட்டின் ஏற்பாட்டாளர்களே கதிகலங்கிப் போய்விட்டனர். இலங்கை ஜனாதிபதி மஹிந்தவை உரையாற்ற அனுமதித்தால் நிலைமை இன்னும் மோசமாகலாம் என்ற லண்டன் பொலிஸாரின் எதிர்பார்ப்புக்கிணங்க மஹிந்தவின் உரையாற்றும் நிகழ்வைத் திருப்பிப் பெற்றுக்கொண்டனர் அந்த மாநாட்டின் ஒழுங்கமைப்பாளர்கள்.

ஆனாலும் தம் நாட்டுக்கு வந்த ஒரு தலைவரை வெறும் கையோடு அனுப்பக்கூடாது என்ற நற்பண்பின் அடிப்படையில், லண்டன் மகாராணி இலங்கை ஜனாதிபதி மஹிந்தவுக்கு விருந்தில் கலந்துகொள்ளும் அனுமதியை வழங்கினார். சிங்கக் கொடியை கழற்றி எறிந்து விட்டு, புலிக்கொடியை பார்த்துக்கொண்டே போய் சாப்பாட்டு மேசையில் அமரும் சங்கட நிலைக்கு மஹிந்த உள்ளானார்.

### புலம்பெயர் தமிழர்கள் இனி எச்சரிக்கையாக இருக்க வேண்டும்

இவ்வாறு சீரழிந்து சின்னாபின்னப்பட்ட ஒரு பயணத்தை எதிர்பார்த்திருக்காத ஜனாதிபதியும் அவரது பரிவாரங்களும் இந்த அவமானத்துடனேயே புலம்பெயர் தமிழர்களுக்கு எதிராகப் பெரும் திட்டங்களை தீட்டத் தொடங்கியிருப்பர்.

ஏற்கனவே இலங்கை வரும் புலம்பெயர் இலங்கைத் தமிழர்கள் இந்த நாட்டு இராணுவத்தினரால் பல்வேறு அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றனர். கடந்த மாதத்திலும் ஒரு கனேடிய புலம்பெயர் தமிழர் இலங்கையில் படுகொலை செய்யப்பட்டார். இந்த ஆர்ப்பாட்டத்தின் பிறகு புலம்பெயர் தமிழர்கள் கட்டுநாயக்காவில் கால் வைக்கவே அதிக அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள நேரிடலாம்.

### லண்டனில் திட்டமா?

அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு மேற்கு நாடுகளுக்கும் 'தண்ணிகாட்டிக்' கொண்டிருக்கும் இலங்கை ஜனாதிபதியைப் பழி வாங்குவதற்கான ஒரு திட்டமாக இதனை பிரிட்டன் பயன்படுத்தி இருக்கலாம் என்ற சிந்திப்புக்களும் இப்போது எழுகின்றன. கடந்த வருடமும் லண்டனில் இதேபோன்ற ஒரு அவமானத்தை இலங்கை ஜனாதிபதி மஹிந்த எதிர்கொண்டார். இப்போது மறுபடியும் அவரை மேடைக்கு அழைத்துப் பரிசு கொடுக்காமல் திருப்பி அனுப்பியமையானது சர்வதேச மட்டத்தில் அவர் மீது இருக்கும் கறையைப் படம்பிடித்துக் காட்டும் ஒரு சந்தர்ப்பமாகக்கூட இருக்கலாம்.

### வேதனை தரும் ஒரு விடயம்

**ஈழத்தில் இழந்துவிட்ட இறைமைக்காகவும், மௌனித்துவிட்ட ஆயுதப் போராட்டத்துக்காகவும் புலம்பெயர் தமிழர்கள் பல்வேறு வகையான போராட்டங்களை முன்னெடுத்துக்கொண்டிருக்கையில் அதற்கு ஆதரவாக ஈழத்தில் இருந்து ஒரு குரல்கூட மேலெழாதது** வேதனைக்குரியது. தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுக்கப் பல கட்சிகள் போட்டியிடுகின்ற போதிலும், புலம்பெயர் நாடுகளில் இருந்து சர்வதேசத்துக்கு தமிழரின் விடுதலைப் போராட்டத்தை நியாயப்படுத்திக் கொண்டிருக்கும் ஒரு தொகுதி தமிழர்களுக்கு எந்த ஆதரவையும் வழங்காது இந்தக் கட்சிகள் மௌனித்திருப்பது இலங்கை அரசுக்கு ஆதரவு வழங்கும் நோக்கிலேயோ என எண்ணத் தோன்றுகின்றது. புத்திஜீவிகளும் "புலிக்கொடியைக் காட்டாமல் விட்டிருக்கலாம்" என்ற விமர்சனத்தோடு இந்தப் போராட்டத்தில் இருந்து தம்மை விலக்கிக்கொள்கின்றனர். அடையாளமற்ற போராட்டங்கள் அர்த்தமற்றுப்போகும் என்ற புரட்சியின் பொது விதி தெரியாத விமர்சகர்களின் விமர்சனம் இதுவென நினைத்து அந்தக் கவலையை மறந்து விடலாம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ நக்கீரன்

# விரும்பியபடியே படகுகள் பயணிக்கின்றன

## நெடுந்தீவுப் பயணத்தின் அவலத் தொடர்கதை



படகு ஊழியர்கள் இது போன்ற சமயங்களில் துறைமுகத்திற்கு வருவதில்லை எனவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றார்கள். சங்கப் படகுகளும் தாங்கள் பயணிகளை ஏற்றிச் செல்ல வேண்டிய நாள்களில் மட்டுமே அந்தச் சேவையை நடத்துவதாகவும், அரச படகுகளும் இல்லை மிக மோசமான நிலையை அடைந்துள்ளது. இதனால் நாங்கள் மக்களுக்கான போக்குவரத்துச் சேவையைச் செய்யவேண்டும் என முன்வருவதில்லை என்பதும் இன்னொரு புகாராக இருக்கிறது.

நெடுந்தீவுக்கான கடல் போக்குவரத்துச் சேவை படுமோசமடைந்துள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றார்கள். அரச மோட்டார் படகான குமுதினி, காற்று, கடல் கொந்தளிப்புக் காலங்களில் கட்டாயமாக பழுதடைந்தே ஆக வேண்டும் என்ற எழுதாத சட்ட வரம்புக்கு உட்பட்டு வழமை போன்று இப்போது இரண்டு வாரங்களுக்கு மேலாக ஆறுதலாக நிற்கிறது. வடதாரகை கடல் காற்று காரணத்தால் கரைசேர முடியாதுள்ளது. அங்குள்ள ஏனைய படகுகள் தாங்கள் விரும்பிய படியே சேவைசெய்யலாம் அல்லது விடலாம் என்ற கோட்பாட்டை முன்னிறுத்திச் செயற்படுகின்றன. கடந்த 2 ஆம் திகதி சனிக்கிழமை பயணிகள் காலை முதல் காத்திருந்தபோது நெடுந்தீவு துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த நூற்று ஐம்பதுக்கு மேற்பட்ட படகுகளில் ஒன்றாவது மக்களுக்கு உதவ முன்வரவில்லை.

படகு ஊழியர்கள் இது போன்ற சமயங்களில் துறைமுகத்திற்கு வருவதில்லை எனவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றார்கள். சங்கப் படகுகளும் தாங்கள் பயணிகளை ஏற்றிச் செல்ல வேண்டிய நாள்களில் மட்டுமே அந்தச் சேவையை நடத்துவதாகவும், அரச படகுகளும் இல்லை மிக மோசமான நிலையை அடைந்துள்ளது. இதனால் நாங்கள் மக்களுக்கான போக்குவரத்துச் சேவையைச் செய்ய வேண்டும் என முன்வருவதில்லை என்பதும் இன்னொரு புகாராக இருக்கிறது.

சங்கங்களைப் பொறுத்தவரை மக்களின் பயணச்சேவைக்கு கைகொடுக்க வேண்டியது தவிர்க்க முடியாததாகும். அரசு இவர்களது படகுகளுக்காக உதவிகளை வழங்கியது மக்களுக்கான சேவைகள் சீராக இடம் பெறவேண்டும் என்பதற்காகவே வெறுமனே பொருள்களை ஏற்றி இறக்க மட்டுமே என்றல்ல. கடந்த காலங்களில் படகுச் சேவை ஸ்தம்பிதமடைந்ததால் சங்கப் படகுகளும் ஏனைய படகுக ளும் சேவையை வழங்கி வந்துள் ளன. இப்போது அரச படகு இல்லை என்றும் சங்கப்பணியில் உள்ளவர்கள் எங்காவது ஓடி ஒழிவதும், அவர்களைத் தேடி கடற் படையினர் அலைவதும் சகசமாகி விட்டது.'' நாங்கள் எண்ணை ஏற்ற வேண்டும், தண்ணி ஏற்றப் போக வேண்டும் புங்குடுதீவு லொறி காத்து நிற்கு '' என்று சாக்குப் போக் குச் சொல்லிப் பயணிகளை ஏற்றிச் செல்லப் பின்வாங்குகிறார்கள். இருந்துமென்ன? அதை, இதை ஏற்றப் போகிறோம் என்று சொல்லும் இந்த நிறுவனங்கள் இலாபத்தில் இயங்குகிறதா என்றால் அதுவுமில்லை.

நெடுந்தீவு மக்களின் பயணக் கஷ்டம் இன்றுடன் விலகிக் கொண்டதாக வடதாரகை திறப்பு விழாவின் போது கூறப்பட்டது. உண்மையிலேயே கூடுதலான படகுகள் நெடுந்தீவு துறைமுகத்தை அலங்கரித்த பின்னர் தான் நெடுந்தீவு போக்குவரத்துச்சேவை மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் அரச படகுகளின் சேவைத் தடங்கல்கள் நீண்ட நாள்கள் தொடந்ததாக இல்லை. இப்போது அரச படகுகளின் ஸ்தம்பிதம் மூன்று நான்கு மாதங்கள் என்று தொடர்கிறது. வடதாரகை என்பது கோடி ரூபாய்கள் செலவில் கட்டப்பட்டது. இந்தச் சேவைக்கென எட்டு வள்ளங்கள் நெடுந்தீவுக் கடலுக்கு உகந்ததாகக் கட்டியிருக்கலாம் என்கிறார்கள் நெடுந்தீவு மக்கள். இதில் உண்மை இல்லாமலும் இல்லை. இப்போது சேவையில் உள்ள சங்கப் படகு சமுத்திராதேவி நெடுந்தீவில் கட்டப்பட்டதே.

குமுதினிக்கு இப்போது நரம்புத்தளர்ச்சி உண்டு. நீண்ட வருடங்களாக நெடுந்தீவு மக்களை கடும் காற்றும் கொந்தளிப்பும் நிறைந்திருந்த காலங்களில் கூட அச்சமின்றித் துச்சமாக கடலைக் கிழித்துச் சுமந்து கரை சேர்த்தது மட்டுமல்ல பறிகொடுத்த உறவுகளையும் கரை சேர்த்தது. உயிருள்ள மனிதர்களை விட மேலானவைகளாக நெடுந்தீவின் வரலாற்றுடன் நெருக்கமான தொடர்புடைய படகும் அது. அதற்குரிய இடம்கொடுத்து பாதுகாக்க வேண்டிய கடமையுள்ள நெடுந்தீவு மக்கள் அதற்கான ஏற்பாடுகளைக் கைவிட்டு நொந்து நூலாகி உடைந்து வெறும் கட்டையாகும் வரை ஓடிப் பழுதடைந்து திருத்த வேலை என்று கூறி அதிகாரிகள் தங்கள் வீடுகளைத் திருத்துவதற்கு உதவட்டும் என்று மௌனம் காக்கப் போகிறார்களா?

நெடுந்தீவு மக்களுக்கு இலவச படகுப் பயணம் என்று அறிவித்தால் மட்டும் போதாது வெறும் அறிவிப்புக்களால் மக்களைக் குஷிப்படுத்த முனைவதனால் அறிவிக்கும் போது மட்டும் குஷிப்படுத்தலாம். அது நிறைவேற்றா விட்டால்? கடந்த காலங்களில் நெடுந்தீவு கடல் போக்குவரத்தில் கிராமசபை முக்கிய கவனிப்பைக் கொண்டிருந்தது.

படகுச் சேவை பாதிக்கப்படும் சமயங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊடாக சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் தொடர்பு கொண்டு சேவையை விரைந்து வழங்க நடவடிக்கை எடுத்து வந்தன. இப்போது அந்த நிலை இல்லை. அபிவிருத்தி அதிகாரசபை அனுப்பும்படகுச் சேவை குறித்த துண்டுப் பிரசுரங் களை ஒட்டிவிட்டால் மட்டும் சரி என்ற நிலையில் அலுவலகங்கள் உள்ளன.

நெடுந்தீவுக்கான இந்தச் சேவையின் முக்கியத்துவம் நெடுந் தீவு மக்களுக்கு மட்டும் தெரிந்த ஒன்றல்ல. அதிகாரிகள் உத்தியோகத்தர்கள் அனைவருமே புரிந்துகொண்ட ஒன்றுதான். சம்பந்தப்பட்ட திணைக்களம் ''நெடுந்தீவு சனந்தானே'' என்று அசட்டையாக இருக்கலாம். ஆனால் நெடுந்தீவு மக்கள் துறைமுகத்தில் நின்று சிறிது நேரம் திட்டித் தீர்த்துவிட்டுத் திரும்பி விட்டால் அது உங்கள் பலவீனமே. இது அதிகாரிகளுக்குப் பலமாகிறது.

எனவே இந்தக் குறைபாட்டை சீர்படுத்துவதற்காக நெடுந்தீவு மக்களும், சம்பந்தபட்ட தரப்பினரும் இந்த விடயத்தில் அக்கறை செலுத்த வேண்டும். நெடுந் தீவுக்கான பயணங்கள் நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் அதிகரித்திருக்கின்ற இந்த வேளையில் அந்தத் தீவுக்கான பயணங்கள் தடைப்படுவது வருந்தத்தக்க ஒன்றே. ✱

# ஏமாற்றத்துடனான நேர்முகத் தேர்வுகள்?

■ சங்கர்



நாடு முழுவதும் வேலையற்ற பட்டதாரிகளுக்கான நேர்முகத் தேர்வுகள் பரவலாக நடைபெற்று வருகின்றன. அதில் பல ஆயிரக் கணக்கானோர்களுக்கு கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. யாழ். மாவட்டத்தில் மட்டும் 3 ஆயிரம் பட்டதாரிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது என யாழ்.மாவட்ட அரச அதிபர் ஊடகங்கள் ஊடாக ஏற்கனவே அறிவித்திருந்தார். மூன்று தினங்களிலும் 3 ஆயிரம் பட்டதாரிகள் யாழ். மாவட்டத்திலிருந்து நேர்முகத் தேர்வுக்காக தோற்றியிருந்தனர்.

இதில் கலந்து கொண்ட பல பட்டதாரிகள் மீண்டும் நாம் ஏமாற்றப்படுவோம் என்ற அவநம்பிக்கையுடனேயே கலந்து கொண்டிருந்தனர்.

அரசியல் வாதிகள் வழங்கும் பெயர்ப் பட்டியல்களால் அரசியல் செல்வாக்கு அற்றவர்கள், திறமையானவர்கள் நேர்முகத் தேர்வின் போது நிராகரிக்கப்படும் நிலைமை தொடர்வதன் காரணமாகவே, பட்டதாரிகள் உள்ளத்திலும் மீண்டும் ஏமாற்றப்படப் போகிறோமோ என்ற அச்சம் நிலவுகிறது.

குறிப்பாக கிழக்கு மாகாண பட்டதாரிகள் இந்த விடயத்தில் மிகவும் விழிப்பாக இருக்கிறார்கள். அவர்கள் சுவரொட்டி மூலமும் மனுக்கள் மூலமும் அரசியல் வாதிகளுக்கும் அரச அதிகாரிகளுக்கும் அறிவித்தல் ஒன்றை ஏற்கனவே விடுத்திருந்தனர். அதாவது நேர்முகத் தேர்வின் போது அரசியல் செல்வாக்கு பயன்படுத்தப்பட்டு அநீதி இழைக்கப்படுமானால் பாதிக்கப்படும் பட்டதாரிகள் அனைவரும் ஒன்றிணைந்து அரசுக்கு எதிரான போராட்டங்களை தொடர்ச்சியாக மேற்கொள்வோம் என்பதே அந்த எச்சரிக்கை ஆகும்.

அரசியல் செல்வாக்குப் பயன்படுத்தப்படுமானால் குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள சுமார் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேலையற்ற பட்டதாரிகள் பாதிக்கப்படுவது திண்ணம்.

மக்கள் சபைச் செயலாளர் என்ற புதிய பதவி நிலையை உருவாக்கி நாடு முழுவதுமுள்ள சுமார் 15 ஆயிரம் பட்டதாரிகளுக்கு உடன் வேலை வாய்ப்பு வழங்குவதாக அரசு ஏற்கனவே அறிவித்துவிட்டுப் பின்னர் ஏமாற்றியதை வேலையற்ற பட்டதாரிகள் எளிதில் மறந்து விடமாட்டார்கள்.

இந்த நிலையில் தான் மீளவும் விண்ணப்பித்த அனைத்து பட்டதாரிகளும் நேர்முகத் தேர்வில் பங்கேற்கின்றன. இந்த நேர்முகத் தேர்வில் பங்கேற்கவுள்ள பட்டதாரிகளுக்கு இரண்டு விடயங்கள் தொடர்பாக பலமான சந்தேகம் உள்ளது. அதில் ஒன்று ஏற்கனவே குறிப்பிட்டது போல அரசியல் செல்வாக்கு பிரயோகிக்கப்படும் என்பது. அடுத்தது, பட்டதாரிகளைப் பயிலுனர்களாகப் பயன்படுத்திவிட்டு, திறைசேரியில் நிதி இல்லை எனக் காரணம் காட்டி விட்டு அவர்களை வீட்டுக்கு அனுப்பி விடுவார்கள் என்ற சந்தேகமும் பட்டதாரிகளிடம் உண்டு. தேர்தல் காலங்களில் வாக்குறுதிகள் அள்ளி வழங்கப்படும் பின்னர் அவை காற்றில் பறக்க விடப்படும். வாக்கு வங்கிகளை நிரப்புவதற்கான நடவடிக்கைக்காகவே.

தற்போது நேர்முகத் தேர்வை அரசு நடத்தி நாடகம் போடுகிறது என கிழக்கு மாகாணப் பட்டதாரிகள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, ரிஷாட்பதியுதீன் மற்றும் ஸ்ரீலங்க சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஒரு சிலர் இந்த நேர்முகத் தேர்வில் தெரிவு செய்யப்பட வேண்டியவர்களின் பெயர் பட்டியலை தயாரித்து வைத்துள்ளதாக வடக்கிலுள்ள பட்டதாரிகள் தரப்பில் அதிக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 5 வருடங்களுக்கு மேலாக அரச நியமனமின்றி தாங்காத துயரத்தோடு விரக்தியின் விளிம்பில் உள்ள பட்டதாரிகளுக்கு இந்த முறையும் நியமனம் வழங்கத் தவறின் பெரும் போராட்டங்களை அரசு சந்திக்கவேண்டி ஏற்படும் என பட்டதாரிகள் தெரிவித்து வருகின்றனர். கல்வியறிவுள்ள மனித வளத்தைப் பயன்படுத்தி நாட்டை அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்ல மஹிந்த அரசு விரும்பின் எந்த விதமான பாரபட்சமுமின்றி பட்டதாரிகளுக்கு தகுதிக்கு ஏற்ற நியமனம் வழங்குவது அவசியமானது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்ல நீதிபதி

ஓர் ஊரில் நீதிபதி ஒருவர் இருந்தார். அவர் பெயர் ஹம்மாஸ். அவர் ஆபிரிக்காவைச் சேர்ந்தவர். மிகவும் எளிமையான வாழ்க்கை வாழ்ந்தவர். தான் பார்க்கும் பதவிக்காக அவர் அரசாங்கத்திடம் இருந்து ஊதியமே வாங்கிக் கொள்ளவில்லை.

''எனக்கு ஊதியம் வேண்டாம்'' என்று அவர் கூறிவிட்டார். சரி அப்படியானால் அவர் தன் குடும்பச் செலவுக்கு என்ன செய்தார்?

இரவு நேரங்களில் புத்தகங்கள் எழுதுவார். அதை விற்று, அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு தன் குடும்பத்தை நடத்தினார். வீட்டு வேலைக்கும் அவர் யாரையும் வைத்துக் கொள்ளவில்லை. அவர் வீட்டில் இருப்பவர்களே ஆளுக்கு ஒரு வேலையைச் செய்துவிடுவார்கள்.

ஆற்றுக்குப் போய் தினமும் குடத்தில் தண்ணீர் எடுத்துக்கொண்டு வர வேண்டியது இவருடைய வேலை.

அவர் மக்கள், எந்த நேரத்தில் வந்தாலும் விசாரித்து தீர்ப்பு வழங்குவார். நடுராத்திரியில் வந்து கதவைத் தட்டினாலும் அலுத்துக் கொள்ளமாட்டார். அதனால் மக்களுக்கு அவர் மீது மிகவும் மரியாதை.

அவருக்கு அந்த மாநிலத்தின் முதலமைச்சர் ஒரு பண முடிப்பைப் பரிசாகக் கொடுக்க முன் வந்தார். ஆனால் இவர் அதை வாங்க மறுத்துவிட்டார்.

''சரி...உங்களுக்கு ஒரு உதவியாளரையாவது அரசு சார்பாக ஏற்பாடு செய்கிறேன்'' என்றார் முதலமைச்சர்.

''அதுவும் வேண்டாம்'' என்று நீதிபதி கூறினார்.

''சரி... ஒரு வேலையாளையாவது அனுப்புகிறேன்'' என்றார் முதல்வர்.

நீதிபதி, ''தேவையில்லை'' என்று சொல்லிவிட்டார்.

''நீங்கள் வெளியில் சென்று வருவதற்கு ஒரு வாகனம் ஏற்பாடு செய்யட்டுமா?'' என்று முதல்வர் வினாவினார்.

''அதுவும் வேண்டாம்'' என்றார் நீதிபதி.

''நீதித்துறையில் நீங்கள் பல முக்கியமான பொறுப்புகளை வகிக்கிறீர்கள்... அதனால் அவை இரவு நேரத்தில் நீங்கள் நூல்கள் எழுதுவதற்குத் தடையாக இருக்கின்றன. எனவே அரசாங்க நிதியிலிருந்து ஒரு சிறு தொகையையாவது சம்பளமாக வாங்கிக் கொள்ளுங்கள்'' என்றும் முதல்வர் சொல்லிப் பார்த்தார்.

ஆனால் அதற்கும் நீதிபதி பணியாமல், ''நான் மக்களுக்கு பணியாற்றுபவன். மக்கள் தொண்டுக்கு 'ஊதியமாக நான் எதையும் வாங்கிக்கொள்ள விரும்பவில்லை'' என்று உறுதியாகச் சொல்லிவிட்டார்.

'சரி...இதற்கும் மேலே இவரை வற்புறுத்தினால், இவர் இந்தப் பதவியிலேயிருந்து விலகினாலும் விலகிக்கொள்வார். ஒரு நல்ல நீதிபதியை நாம் இழந்துவிடக்கூடாது' என்று நினைத்து முதலமைச்சர் பேசாமல் இருந்துவிட்டார்.

அந்த ஊரில் ஒருவர் ஆடு, மாடுகள் வைத்திருந்தார். அவைகளை அவர் ஓட்டிக்கொண்டுபோய் புல்வெளியில் மேயவிடுவார். இவர் உட்கார்ந்து அவைகளைக் கவனிப்பதற்கு ஒரு நிழலான இடம் தேவைப்பட்டது.

அந்தப் புல்வெளிக்குப் பக்கத்தில் இருந்த ஒரு நடைபாதை ஓரமாக-தன்னுடைய நண்பன் ஒருவனுடைய வீட்டை ஒட்டி-ஒரு குடிசை போட்டுக் கொள்ளலாம் என்று இவர் ஏற்பாடு செய்தார்.

ஆனால் அதற்கு நண்பன் ஒப்புக்கொள்ளவில்லை. ''இது நடைபாதை ...இதில் குடிசை போடக்கூடாது'' என்று அவன் தடுத்தான்.

அதனால் இரண்டு பேருக்கும் தகராறு வந்துவிட்டது. ''இதற்கும் மேலே நமக்குள் வம்பு வேண்டாம். பேசாமல் நீதிபதியிடம் சென்று முறையிடுவோம்'' என்று இருவரும் முடிவு செய்தார்கள்.

இரண்டு பேரும் நீதிபதியைத் தேடிச் சென்றார்கள். நீதிபதி யார் என்று அவர்களுக்குத் தெரியாது. நீதிமன்றத்தை நோக்கி அவர்கள் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். எதிரில் ஒருவர் தண்ணீர் குடத்தைச் சுமந்தபடி வந்துகொண்டிருந்தார். அவரிடம் இவர்கள் இருவரும், ''இந்த ஊர் நீதிபதியைப் பார்க்க வேண்டும். இப்போது அவர் எங்கே இருப்பார்?'' என்று வினவினார்கள்.

''நான்தான் நீதிபதி... உங்களுக்குள் என்ன பிரச்சினை? என்னிடம் சொல்லுங்கள்'' என்றார் அவர்.

''ஐயா, வணக்கம்! எங்கள் பிரச்சினையைச் சொல்கிறோம். ஆனால், நீங்கள் தண்ணீர்க் குடத்தைச் சுமந்து கொண்டு நிற்கிறீர்கள். அதைக் கொஞ்சம் கீழே இறக்கி வையுங்கள். அதன் பின் நிதானமாக நாங்கள் சொல்வதைக் கேளுங்கள்'' என்று இவர்கள் இருவரும் கூறினார்கள்.

அதற்கு அந்த நீதிபதி சொன்னார்.

''இது மக்கள் நடந்துபோகும் நடைபாதை. அதனால் நான் வைத்திருக்கும் குடத்தை இங்கே இறக்கி வைத்து...இந்த வழியாகப் போகும் பொதுமக்களுக்கு இடைஞ்சல் கொடுக்க விரும்பவில்லை. ஆதலால் இந்தக் குடம் என்னிடம் இருக்கட்டும். நீங்கள் உங்கள் பிரச்சினையைச் சொல்லுங்கள்'' என்றார்.

அவர் சொன்னதைக் கேட்டதும் இவர்கள் இருவரும் ''சரி, ஐயா... நாங்கள் போய் வருகிறோம்'' என்று கூறியபடியே புறப்பட்டார்கள்.

''உங்கள் பிரச்சினை என்ன என்று இன்னும் நீங்கள் என்னிடம் சொல்லவில்லை...அதற்கு நான் தீர்ப்பும் சொல்லவில்லை. அதற்குள் புறப்பட்டு விட்டீர்களே'' என்று நீதிபதி கேட்டார்.

''நீங்கள் தீர்ப்புக் கூறிவிட்டீர்கள். அதனால்தான் நாங்கள் புறப்பட்டோம்'' என்றார்கள் இவர்கள்.



உண்மைதானே!

தன் கையில் இருக்கும் தண்ணீர் குடத்தையே தரையில் வைக்க விரும்பாத அவர், நடைபாதையில் குடிசை போடுவதை எப்படி ''சரி'' என்று ஒப்புக்கொள்வார்?

அந்த ஆள் நீதிபதிக்கு நன்றி சொல்லிவிட்டு...தன் நண்பனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டானாம்.

'நீதியரசர்' என்று நாம் சொல்கிறோம் அல்லவா? அதற்கு நல்ல ஓர் உதாரணம் நீதிபதி ஹம்மாஸ்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**



# சுயதொழில் வருமானத்தை வைப்பிலிட உதவும் சரசாலை வடக்கு நித்தியா ம.ஐ. சங்கம்

சுயதொழில் மூலம் கிடைக்கும் வருமானத்தினை வங்கிகளுக்குச் சென்று வைப்பிலிடுவதற்கு நேரமில்லாத நிலையில் சங்கம் ஒன்றை உருவாக்கி, அதன் மூலம் தமது வருமானங்களை நாளாந்தம், வாராந்தம் வைப்பிலிட நினைத்த பெண்களின் முயற்சியினால் உருவானதே சரசாலை வடக்கு நித்தியா மகளிர் ஐக்கிய நாணய சங்கமாகும்.

சரசாலை வடக்கில் 50 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வரும் ஐக்கிய நாணய சங்கத்தில் பெருமளவு ஆண்களே அங்கத்தவராக இருந்ததாலும், இவர்கள் தமது செயற்பாடுகளை இரவு வேளைகளில் கூடி ஆராய்வதால் அது பெண்களுக்குப் பொருத்தமாக அமையாததால் பெண்களுக்கென சங்கம் அமைக்க வேண்டுமென 29 வருடங்களுக்கு முன்னர் தற்போது வடக்கு மாகாண இளைஞர் சேவைகள் திணைக்களப் பணிப்பாளராக இருக்கும் திருமதி ஸ்ரீகாந்தரூபன் விமலேஸ்வரியின் முயற்சியின் பயனாக கடந்த 1983.02.07 ஆம் திகதி 30 அங்கத்தவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தச் சங்கமானது பரிசூரியச் சேமிப்புத் திட்டத்தை 1998 இல் ஆரம்பித்து செயற்பட்டு வருகிறது. ஐந்து வருட (60 மாதங்கள் ) எல்லையைக் கொண்ட இந்தத் திட்டத்தில் அங்கத்தவர் மாதாந்தம் பத்து ரூபா வீதம், சமாசத்தில் வைப்பில் இட்டு, ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் குலுக்கலின் போது தெரிவு செய்யப்படும் பட்சத்தில் 600 ரூபா பரிசாக வழங்கப்படுகிறது.

அங்குரார்ப்பணக் கூட்டத்தில் சங்கத்தின் தலைவியாக திருமதி செ.சிவபாக்கியமும் செயலாளராக திருமதி நா. அருள்மொழித் தேவியும் பொருளாளராக திருமதி ஸ்ரீ. விமலேஸ்வரியும் நிர்வாக உறுப்பினர்களாக செல்வி க.மலர்விழி, த.அருந்தவராணி, திருமதி ச.மகேஸ்வரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

அன்றைய கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானப் பிரகாரம் பிரதி மாதத்தில் வரும் பௌர்ணமி தினத்தன்று மாலையில் சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தில் சங்கத்தின் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. ஊர் மக்கள் மத்தியில் பௌர்ணமிக் கூட்டம் என்றால் இந்தச் சங்கத்தின் கூட்டமென கூறுமளவுக்கு மாதாந்தம் நடைபெற்று வருகிறது.

ஆரம்ப காலத்தில் பங்குப் பணமாக 50 ரூபாவும், ஆகக் குறைந்த சேமிப்பாக மாதாந்தம் பத்து ரூபாவும், செலுத்த வேண்டுமெனவும், மாதத்தில் சேமமாகக் கிடைக்கும் பணத்தில் பெண்களின் சுயதொழிலை விருத்தி செய்ய 500 ரூபா வரை கடனாக வழங்கவும் முடிவு செய்யப்பட்டது.

பத்து வருடங்களின் பின்னர் (1993) பங்குப் பணம் 100 ரூபாவாக அதிகரித்தது. கடனும் சேமமும் என இயங்கிய சங்கம், சமயப்பணி, சமூகப் பணிகளிலும் ஈடுபட்டது. சுயதொழில் வாழ்வாதார செயற்பாடுகளும் விஸ்தரிக்கப்பட்டன. முழு நிலாக் காலத்தில் பெண்கள் அணி சேர்வதால் சங்கத்திற்கு நித்தியா எனப் பெயர் சூட்டப்பட்டது.

சங்கத்தின் வெள்ளி விழா நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக அழைக்கப்பட்ட ஊர்ப் பிரமுகரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி சங்க வளர்ச்சியை அவதானித்து அதற்கு நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் இரண்டு இலட்சம் ரூபாவினை ஆரம்ப கட்ட கட்டட வேலைக்கென ஒதுக்கீடு செய்திருந்தார். இந்த நிதியியைப் பயன்படுத்த சங்கம் தனது செலவில் காணியொன்றைக் கொள்வனவு செய்து சங்கத்துக்கான நிரந்தரக் கட்டடத்தை அமைத்து இடை நடுவில் நிறுத்தியுள்ளனர். சங்க அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த கடன் தொகை 500 ரூபாவிலிருந்து படிப்படியாக உயர்ந்து கடந்த வருடம் 75 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளது.

இதேவேளை சங்கத்தின் 28 ஆவது ஆண்டு நிறைவு விழாவின் போது '' நிலாமுகம்'' என்னும் மலரையும் வெளியிட்டுள்ளது. 30 அங்கத்தவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட நித்தியா ஐக்கிய நாணய சங்கம் இன்று 147 அங்கத்தவர்களை உள்ளடக்கியுள்ளதுடன் ஆலமரம் போல பல்வேறு செயற்பாடுகளுடன் விருட்சமாகக் காணப்படுகிறது.

இந்தச் சங்கமானது பரிசூரியச் சேமிப்புத் திட்டத்தை 1998 இல் ஆரம்பித்து செயற்பட்டு வருகிறது. ஐந்து வருட (60 மாதங் கள் ) எல்லையைக் கொண்ட இந்தத் திட்டத்தில் அங்கத்தவர் மாதாந்தம் பத்து ரூபா வீதம், சமாசத்தில் வைப்பில் இட்டு, ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் குலுக்கலின் போது தெரிவு செய்யப்படும் பட்சத்தில் 600 ரூபா பரிசாக வழங்கப்படுகிறது. இத் திட்டம் ஐந்து வருட முடிவில் சேமிப்பாளர் ஒவ்வொருவரும் 60 மாத சேமிப்பை ஒழுங்காகச் செலுத்தியிருந்தால் சேமிப்புத் தொகை 600 ரூபாவுடன் வட்டியாக 150 ரூபாவும் சேர்த்து 750 ரூபா வழங்கப்படுகிறது. 2011 இல் சங்கத்தின் பரிதூரியத் திட்டத்தில் 275 பேர் இணைந்துள்ளனர்.

சங்கத்தின் மற்றொரு பரிசூரியத் திட்டமாக சங்கத்தின் நிலையான வைப்பு பரிசூரியத் திட்டம் உள்ளது. இந்தத் திட்டத்தில் ஆயிரம் ரூபா நிலையான வைப்பிலிட்டால் 10வருடங்களின் பின்னர் ஆயிரத்து 500 ரூபா வழங்கப்படுகிறது. குலுக்கல் மூலம் அதிர்ஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு கொடுப்பனவு வழங்கப்படுகிறது.

சங்க நிதியிலிருந்து அங்கத்தவர்களுக்குக் கடன் வழங்கப்பட்டு வருவதுடன் யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் வழங்கப்படும் கடன்களும் அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. அத்துடன் சங்க அங்கத்தவர்களுக்கு சமாசத்தினால் வழங்கப்பட்ட சுனாமிக் கடன் 3 இலட்சம் ரூபா 10 அங்கத்தவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.

சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட பொதுப் பணிகள் சாவகச்சேரி மக்கள் வங்கியின் அனுசரணையுடன் சரசாலை வடக்கு ஸ்ரீ கணேச வித்தியாலயத்துக்கு மின்னிணைப்பு பெற்றுக் கொடுத்தமை.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் சரசாலை வடக்கில் உள்ள நான்கு குடிதண்ணீர்க் கிணறுகள் புனரமைத்து வழங்கப்பட்டமை.

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் மூலம் நித்தியா ஐக்கிய நாணய சங்கம் என்ற முகப்புடன் வருடாந்த நாள் காட்டி கிராமத்தவர்களுக்கு குறைந்த விலையில் வழங்கப்பட்டு வந்தமை. சங்க அங்கத்தவர்களின் கோரிக்கைக்கிணங்க 2012 ஆம் ஆண்டு தொடக்கம் அங்கத்தவர்களுக்கு இலவசமாக சங்க நாள்காட்டி விநியோகிக்கப்படுகின்றமை.

சரசாலை வடக்குப் பிரிவில் முதியோர் சங்கத்தினால் நடத்தப்படும் முதியோர் தின விழாவில் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றனர். விவசாயத் திணைக்களத்தின் அனுசரணையுடன் வருடா வருடம் மரக்கன்றுகளை இலவசமாய்ப் பெற்று, இப் பகுதியில் உள்ள வலயங்கள், பாடசாலை போன்றவற்றில் மரம் நாட்டு விழாவினை சிறப்பாக நடத்தி அவற்றினைப் பராமரித்து வருகின்றது.

**தென்னவன்**

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் துஷ்பிரயோகம் இலங்கையில் குறைவு

**இப்படிக் கூறுகிறார் பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா**

சிறுவர் துஷ்பிரயோகங்களை சட்டத்தினால் மாத்திரம் கட்டுப்படுத்த முடியாது. விழிப்புணர்வு அவசியமாகும்.இதை மக் கள் மத்தியில் அறிவூட்டல் செய்து விழிப்புணர்வை ஏற் படுத்த வேண்டும்.



எருவில்,ஜூன்8

சார்க் நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகம் குறைவாகவே உள்ளது என்று சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகாரப் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

காத்தான்குடி ஹிஸ்புல்லா மண்டபத்தில் நடைபெற்ற சிறுவர்கள் மற்றும் முதியோர்களைக் கௌரவிக்கும் வைபவத் தில் கலந்து கொண்டு உரையாற் றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது நாட்டில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் ஆங்காங்கே இடம்பெறுகின்றன என்பதை நாங்கள் ஊடகங்கள் மூலமாக அறிந்து கொள்கின்றோம்.

போர் இடம்பெற்ற காலத்தில் ஊடகங்களில் போர்ச் செய்திகளுக்கே முன்னுரிமை வழங்கப்பட்டன. ஆனால் இன்று போருக்குப் பின்னரான சூழ்நிலையில் ஊடகங்களில் இவ்வாறான சிறுவர் துஷ்பிரயோக செய்திகளுக்கும் பெண்கள் வன்புணர்வுச் செய்திகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கின்றன.

இவ்வாறான சிறுவர் துஷ்பிரயோகங்களை சட்டத்தினால் மாத்திரம் கட்டுப்படுத்த முடியாது. விழிப்புணர்வு அவசியமாகும். இதை மக்கள் மத்தியில் அறிவூட்டல் செய்து விழிப்புணர்வை ஏற் படுத்த வேண்டும்.

மக்களுக்கு இதன் பாதிப்புகள் குறித்து அறிவூட்டல் செய்து இதிலிருந்து நமது சிறுவர் சமூகத்தைப் பாதுகாக்க வேண்டும்- என்றார்.

(ச-31)

---

பேரவைக்கான புதியவர் நியமனத்தை நீக்கக்கோரி

# கிழக்கு பல்கலை மாணவர்கள் வகுப்புப் புறக்கணிப்பு போராட்டம்

இதுவரை காலமும் எந்த விதமான பிரச்சினைகளோ இன மற்றும் மத பேதங்களோ இன்றி செயற்பட்டுக் கொண்டி ருக்கும் மாணவர்களிடையே பிழையான சிந்தனைகளோ, பிரச்சினை களோ ஏற்பட்டு விடக்கூடாது

மட்டக்களப்பு,ஜூன்8

அருட் தந்தை சிறிதரன் சில்வெஸ்ரரின் மறைவையடுத்து கிழக்குப் பல்கலைக்கழக பேரவையில் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு புதிதாக நியமனம் பெற்றுள்ள உறுப்பினரை நீக்க வேண்டும் என்று மாணவர்கள் வகுப்புப் புறக்கணிப்பில் பகிஷ் கரிப்பில் ஈடு பட்டுள்ளனர்.

இதுதொடர்பில் மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.கிருஸ்ணானந் தெரிவித்ததாவது:-

இந்தவிடயம் குறித்து துணைவேந்தருடனும் கலந்துரையாடினோம். ஆனால் அவரிடமிருந்து சரியான பதில் கிடைக்கவில்லை. அதிலிருந்து இந்த நியமனத்தில் தவறு இருக்கிறது என்பது தெரிகிறது.

மாணவர்களின் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய, பௌத்த ஒன்றியங்களுடனும் கலந்துரையாடினோம். அனைவரும் இந்த புதிய நியமனத்தில் உடன்பா டற்றவர்களாக இருக்கிறார்கள். அந்த வகையில் இந்த நியமனத்தை இரத்துச் செய்து புதிதாக ஒருவரை சமூகத்துக்குச் சேவையாற்றக் கூடிய வகையில் கிறிஸ்தவ மதகுரு சமூகத்திலிருந்து நியமிக்கும் படி கோரியிருக்கிறோம்.

இதுவரை காலமும் எந்தவிதமான பிரச்சினைகளோ இன மற்றும் மத பேதங்களோ இன்றி செயற்பட்டுக் கொண்டிருக்கும் மாணவர்களிடையே பிழையான சிந்தனைகளோ, பிரச்சினைகளோ ஏற்பட்டு விடக்கூடாது என அனைத்து மாணவர்களும் விரும்புகிறார்கள் - என்றார்.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து கிழக்கு பல்கலைக்கழக விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவக மாண வர்களும் வகுப்புப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச)

## ரத்துச் செய்ய கூட்டமைப்பும் வலியுறுத்து

எருவில்,ஜூன்8

கிழக்குப் பல்கலைக்கழக பேரவைக்கு முறையற்ற விதத்தில் வழங்கப்பட்டுள்ள நியமனத்தை உடனடியாக இரத்துச் செய்யுமாறு கல்வியமைச்சரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள மனுவில் தெரிவிக்கப்பட்டதாவது:-

அண்மையில் மரணமடைந்த கிழக்குப் பல்கலைக் கழக பேரவை உறுப்பினர் அருட்தந்தை சிறிதரன் சில்வஸ்டரின் இழப்பைத் தொடர்ந்து, அவரது இடத்துக்கு மட்டக்களப்பு - திருகோணமலை மறை மாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளையினால் அருட்தந்தை கிறைன்டன் அவுஸ்கோனின் பெயர் சிபாரிசு செய்யப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது.

ஆனால் அந்தப் பெயரைக் கவனத்தில் கொள்ளாமல் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் மும்தாஸ் என்பரினால் டாக்டர் ஜாபீரின் பெயர் அனுப்பப்பட்டு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவரால் அவருக்குரிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ஒரு சிலரின் அரசியல் செல்வாக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட்டுவரும் சில பிழையான செயற்பாடுகளை நிறுத்த வேண்டிய பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய எங்களுக்கு உள்ளது.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-31)

---

## பேராதனை அரச விடுதி மீது பல்கலை மாணவரால் தாக்குதல்

### ரூ.10 லட்சம் சொத்து சேதம்

கண்டி,ஜூன்.8

பேராதனையில் உள்ள அரச விடுதி ஒன்றுக்குள் நுழைந்து பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொண்ட தாக்குதலில் 10 லட்சம் ரூபா பெறுமதியான சேதம் ஏற்பட்டுள்ளதாக விடுதியின் நிர்வாகி தெரிவித்தார்.

பேராதனை பல்கலைக் கழக மாணவர்கள் நால்வர் குறித்த விடுதிக்குச் சென்று மது அருந்திவிட்டு இலவசமாக உணவு தருமாறு கோரியுள்ளனர். அதற்கு விடுதி சேவையாளர்கள் மறுப்புத் தெரிவித்ததால் இரு தரப்பினருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது.

இதன் போதே விடுதிக்கு மாணவர்கள் சேதம் ஏற்படுத்தியுள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்த விடுதி சேவையாளர் ஒருவர் தற்போது கண்டி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச் சம்பவம் குறித்து விடுதி நிர்வாகியால் பேராதனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பேராதனை பொலி ஸார் தெரிவித்தனர்.

(ச)

## வீதி விபத்துக்களால் 29 பேர் உயிரிழப்பு

மட்டக்களப்பு,ஜூன்8

கடந்த ஐந்து மாதங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வீதி விபத்துக்களால் 29 பேர் உயிரிழந்துள்ளனர் என்று மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் லால் செனவிரட்ண தெரிவித்தார்.

2009, 2010, 2011 ஆகிய மூன்று வருடங்களில் மட்டக் களப்பு மாவட்டத்தில் வீதி விபத்துக்களினால் 158 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அவர் கூறினார்.

(ச)

## வாகன விபத்தில் ஒருவர் சாவு, மூவர் காயம்

அக்குறணை, துனுவில வீதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 3 பேர் காயமடைந்துள்ளனர்.

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற ஓட்டோ ஒன்று மற்றுமொரு ஓட்டோவுடன் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இந்த விபத்தில் இரண்டு பிள்ளைகளின் தாயொருவர் உயிரிழந்துள்ளதுடன் பாடசாலை மாணவர்கள் மூவர் காயமடைந்துள்ளனர்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனைக்காக தற்போது அக்குறணை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுஇந்த விபத்தில் காயமடைந்த மாணவர்கள் மூவரும் அக்குறணை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(ச)




மட்டக்களப்பு, செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு காணி வழங்குவதற்கான நடமாடும் சேவை கோப்பாவெளி சர்வோதய சமூக ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த சேவையில் நூற்றுக்கணக்கான மக்கள் விவரங்களை வழங்கியுள்ளனர்.



காத்தான்குடி பிரதேசத்தில் 150 வருடங்கள் பழைமை வாய்ந்த காட்டுத் தேங்காய் மரம் நேற்றுமுன்தினம் அடியோடு பாறி சரிந்து வீழ்ந்துள்ளது. காத்தான் குடி முகைதீன் மெத்தைப் [illegible] வாசலுக்கு அண்மையில் [illegible] வீழ்ந்ததாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (21)

## வீதி புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

திருகோணமலை, ஜூன்8

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள வெருகல், வாழைத் தோட்டம், கடற்கரை வீதிக்கு வடிகால்வாய் அமைக்க ரூ 5.48 மில்லியனும், திருகோணமலை, சுமேதங்க புரவிலுள்ள வீதியைப் புனரமைக்க ரூ 9.37 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான உள்ளூர் பிரதேச கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாக இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ச-40)

# கொள்ளையிட வந்தவர் துப்பாக்கிச் சூட்டில் சாவு

ஹெட்டியாவல,ஜூன்8

ஹக்மன, ஹெட்டியாவல பகுதியில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிச்சூட்டில் சுந்தரா (வயது-46) என்ற நபரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் நாட்டில் பதிவாகியுள்ள பிரபல குற்றவாளிகளுள் ஒருவர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. நேற்று அதிகாலை வீடொன்றில் கொள்ளையிடுவதற்குச் சென்ற குறித்த நபர் வீட்டு உரிமையாளரிடம் வசமாக மாட்டிக் கொண்டதோடு அந்த நேரத்தில் ஏற்பட்ட பீதியால் வீட்டு உரிமையாளர் தன்வசம் இருந்த உரிமம் பெற்ற துப்பாக்கியை இவரைச் சுட்டுள்ளார் இதன்போது கொள்ளையிடச் சென்ற நபர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து ஹக்மன பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தருவது வித்தியா இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** நீண்ட நாள்களாக எதிர்பார்த்த காரியம் ஒன்று நடக்கும். உங்களை விட்டு விலகியவர்கள், மீண்டும் நெருங்க விரும்புவார்கள். சின்ன சின்ன பிரச்சினைகளை நாசுக்காகப் பேசி தீர்த்துவிடலாம். தொழில் ரீதியான தொடர்புகளை சற்று கவனத்துடன் கொண்டு செல்லுங்கள்.

**இடபம்:** நினைத்ததில் ஒன்றிரண்டைத் தவிர, ஏனையவற்றைச் செய்து முடிப்பீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை நீடிக்கும். குழந்தைகள் விடயத்தில் சில கண்டிப்பு அவசியம் தேவை, இல்லாவிட்டால் அவை திசை மாறலாம். பண விடயத்தில் கணக்குப் பார்த்துச் செலவழிப்பது நல்லது. சொத்து சம்பந்தப்பட்ட விவகாரம் ஒன்றுக்காக அலைச்சல் அதிகமாக இருக்கும்.

**மிதுனம்:** மனதுக்கு இனிமையான சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்றாக நடக்கும். மகான்களுடைய வாழ்த்துக்கள் சிலருக்கு எதிர்பாராத விதமாக கிட்டும். உடல் ஆரோக்கியம் இப்படியும், அப்படியுமாகத்தான் இருக்கும். தொழிலில் அலைச்சல் அதிகமாக இருக்கும். எதிர்பாராதவிதமாக பழைய நண்பர் ஒருவரின் சந்திப்பு ஏற்படும்.

**கடகம்:** புதிய அனுபவங்கள் கிடைக்கப் பெறுவீர்கள். நிதானமாகவே செயற்படுவீர்கள். யாருடைய வார்த்தையும் பெரியதாக எடுத்துக் கொண்டு செயற்படமாட்டீர்கள். ஆன்மிகத்தில் திடீரென்று அளவு கடந்த ஈடுபாடு ஏற்படும். வியாபாரத்தை விரிவுபடுத்துவதற்காக முயற்சிகளில் இறங்குவீர்கள். மாலையில் திட்டமிடாத பயணம் ஒன்று ஏற்படும்.

**சிங்கம்:** உங்களின் நடவடிக்கைகள் ஒவ்வொன்றும், சற்று குழப்பம் கொண்டதாகவே இருக்கும். பண நிலையில்கூட, சில ஏமாற்றங்களைச் சந்திக்க நேரலாம். தொழில் தொடர்பான விடயங்கள் மன ஆறுதல் அளிக்கும். தெய்வ வழிபாடும் மன நிறைவைத் தரும்.

**கன்னி:** நீங்கள் எதிர்கால நலத்துக்காகப் போட்ட திட்டம் ஒன்று, பின்னடைவைச் சந்திக்க நேரிடலாம். பணவரவுகள் தாமதப்படும். குடும்ப விவகாரங்களில் தெளிவான முடிவுக்கு வருவீர்கள். தொழில் மற்றும் வியாபாரத்தில் சில விடயங்களைச் செய்து கொள்வீர்கள்.

**நாளை**

வைகாசி 27 சனிக்கிழமை 09.06.2012
திதி: பஞ்சமி மு.ப 09.06 வரை
நட்சத்திரம்: திருவோணம் கா.06.55 வரை
சுபநேரம்: 02.52- 04.22 வரை
ராகு காலம்: 08.52- 10.22வரை

**துலாம்:** நினைத்த பணி ஒன்று, செய்து முடித்த பணி ஒன்று என்று இன்று இருக்கும். குடும்பத்தில் தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். பண நிலையில் எதிர்பாராத வரவுகள் மனமகிழ்ச்சி தரும். தொழில் ரீதியான பயணங்கள் ஏற்படும்.

**விருச்சிகம்:** காரணமற்ற அவசரமும், செலவுகளையும் ஏற்படுத்திக்கொள்வீர்கள். எதிர்பார்க்கும் வெளிவட்டார உதவிகள், சற்று தாமதப்பட்டபோதும் கிடைக்கக்கூடும். உறவினர்களின் குறைகளை பெரிதுபடுத்திக்கொள்ளாதீர்கள். நண்பர்களின் பழக்க வழக்கங்கள் சற்று கூடுதலான செலவுகளை ஏற்படுத்தும்.

**தனுசு:** ஏற்றுக் கொண்ட பொறுப்புகளால், சற்று கூடுதலான சிரமங்களை எதிர்கொள்ள நேரிடலாம். சற்று முன்யோசனை எதற்கும் நல்லது. பேச்சுகளால், சில காரியங்களை எளிதாக முடிக்க வாய்ப்பு உண்டு. உறவினர் ஒருவரின் காரியம் பொருட்டு அலைச்சல் அதிகமாக இருக்கும்.

**மகரம்:** அவசரப்பட்ட செயல்களால் அல்லல்பட நேரிடலாம். கவனம். வீட்டிலும், வெளியிலும் வார்த்தைகளின் மென்மை கலந்து இருக்கட்டும். தொழிலில் ஏற்ற இறக்கமான சூழ்நிலை காணப்படும். பயணங்கள் வெற்றி தரும். தெய்வ சிந்தனைகள் மேலோங்கும்.

**கும்பம்:** சில பணிகளை மனதில் கொண்டு விரைவாகச் செயற்படத் திட்டமிடுவீர்கள். ஓரளவுக்கு தங்களின் திட்டம் நிறைவேறும். பணி முடிந்தபோதும் பண வரவு சற்று தாமதப்படும். வாகன வகையில் செலவுகள் இருக்கும். நண்பர் ஒருவரைச் சந்திப்பதற்காக அலைச்சல் இருக்கும்.

**மீனம்:** உங்களின் மனநிலையில் ஏற்படும் மாற்றம், சில பணிகளை விரைவாகச் செய்து முடிக்க முடியும். நண்பர் ஒருவரின் உதவி மிகுந்த பயனுள்ளதாக இருக்கும். எதிர்பார்த்த பணம் வரும். அலுவலகப் பணிகளில், சக ஊழியர்களிடம் குறைகாணும் போக்கைக் குறைத்துக் கொள்ளுங்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | | | 1 | 4 | 9 | | |
| | 8 | 4 | | | 9 | | | 1 |
| | 3 | 1 | | | | | 6 | 2 |
| | | 6 | 4 | 5 | | 1 | | |
| 8 | | | | 9 | | | | 7 |
| | | 3 | | 7 | 6 | 2 | | |
| 4 | 7 | | | | | 5 | 2 | |
| 6 | | | 5 | | | 7 | 1 | |
| | | 5 | 6 | 2 | | | 4 | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 6 | 4 | 2 | 5. | 1 | 1 | 8 | 7 |
| 5 | 8 | 7 | 1 | 9 | 4 | 6 | 2 | 3 |
| 1 | 3 | 2 | 7 | 8 | 6 | 4 | 5 | 9 |
| 6 | 4 | 9 | 5 | 3 | 7 | 8 | 1 | 2 |
| 3 | 1 | 8 | 4 | 2 | 9 | 5 | 7 | 6 |
| 7 | 2 | 5 | 6 | 1 | 8 | 9 | 3 | 4 |
| 4 | 9 | 3 | 8 | 7 | 1 | 2 | 6 | 5 |
| 8 | 5 | 6 | 3 | 4 | 2 | 7 | 9 | 1 |
| 2 | 7 | 1 | 9 | 6 | 5 | 3 | 4 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# நன்றி பாராட்டும் விழா

நீராவியடிக் கேணியின் வடக்கு அணையைப்புதுப்பித்துத் தந்தமைக்கும் கடையிற்சுவாமி கோயில் வீதியைப் புனரமைத்துத் தந்தமைக்குமான நீராவியடிப்பதி வாழ் மக்களின்

## நன்றி பாராட்டுவிழா

இடம் : சைவ பரிபாலனசபை மண்டபம்
காலம் : நாளை (09.06.2012) சனிக்கிழமை பி.ப. 4.00 மணி

தலைவர்
திரு.வை. இரகுநாதமுதலியார்
(நம்பிக்கை பொறுப்பாளர், ஸ்ரீஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம்)

பிரதம விருந்தினர்
கௌரவ முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா
(முதல்வர், யாழ். மாநகரசபை)

## நிகழ்ச்சி நிரல்

* முதன்மை விருந்தினர்களை மாலை அணிவித்து நீராவியடிப் பிள்ளையார் கோயிலில் இருந்து மண்டபத்துக்கு மங்களவாத்தியத்துடன் அழைத்துவரல்
* வரவேற்பு நடனம் : செல்வி சி. வைஷ்ணவி, செல்வி சி. வைதேகி
* மங்கள விளக்கேற்றல்
* இறைவணக்கம்
* வரவேற்புரை : திரு. V.N. பத்மநாதன் (ஆசிரியர்)
* ஆசியுரை : பிரம்மஸ்ரீ பா. நகுலேஸ்வரசர்மா
* தலைமையுரை : திரு. வை. இரகுநாதமுதலியார்
* பாராட்டுரை : திரு. கு. சிவகுமார் ( ஓய்வு பெற்ற உபஅதிபர்)
  திரு. த. சண்முகலிங்கம் ( தொழிலதிபர், தலைவர், சைவ பரிபாலனசபை)
  திருமதி. கமலாம்பிகை குணராசா (ஓய்வு பெற்ற அதிபர்)
  பேராசிரியர் S.T.B இராஜேஸ்வரன் (புவியியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்)
* பிரதம விருந்தினர் ஏற்புரை
* நன்றியுரை : திரு. பு. ஆறுமுகதாசன் (பொது சுகாதாரப் பரிசோதகர்)

பிரதேசப் பொதுமக்கள் அனைவரையும் விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்

விளம்பர அனுசரனை

சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோஸ்
பிரபல கட்டடப் பொருள்கள் விற்பனையாளர்கள்
இல. 55/57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்,
தொ : 021 2222901, பெக்ஸ் : 021 2225003

கல்லூரி வீதி,
நீராவியடி

தலைவர்

(19054)(6-7-8)



# 20 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
08. 11.1931



மறைவு
21. 05.1992

# அமரர் க. லம்போதரன்

(ஓய்வுபெற்ற அரச கணக்காளர்)

திதி: 08. 06. 2012

புல்லாய் பூடாய் மரமாய் தொடர்ந்து
வல்அரசுர் ஆகி கணங்களாகி
செல்லா அ நின்ற தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்
மெய்யா விமலா உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்
வீடு பெற்ற உத்தமர் என்றும் எமது
காவல் தெய்வமாக இருக்க விநாயகரையும்
வீரபத்திரரையும் வேண்டும்.

12/4, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி,
சகோதர சகோதரிகள்.

(18940) (45.6.9)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்சேகா மீதான வழக்கு தொடர்ந்தும் விசாரணை

கொழும்பு,ஜூன்8

இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்றவர்களை கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது மீண்டும் சேவையில் இணைத்து அரசை கவிழ்க்கச் சூழ்ச்சி செய்தார்கள் என்று குற்றம் சுமத்தி சரத் பொன்சேகா மற்றும் அவரது செயலாளர் சேனக டி சில்வா ஆகியோர் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை தொடர்ந்தும் விசாரணை செய்ய கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ள சரத் பொன்சேகா நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தார்.

இந்த வழக்கை விசாரணை செய்ய சாட்சியாளர்களுக்கு அழைப்பாணை விடுக்குமாறு அரச சட்டத்தரணி நேற்று நீதிமன்றைக் கேட்டுக்கொண்டார்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ, வழக்கு விசாரணையை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு ஒத்திவைத்ததுடன் அன்றைய தினம் சாட்சியாளர்களை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுத்துள்ளார். (ச)



ஹம்பாந்தோட்டை துறைமுகம் ஊடான வாகன இறக்குமதி நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியுள்ளன. இந்த நிகழ்வில் பிரதியமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# நெஞ்சைத் துளைக்கும் ரவைகளால் போராட்டங்களைத் தடுக்க முடியாது

## சஞ்சீவ பண்டார தெரிவிப்பு

கொழும்பு,ஜூன்8

எமது போராட்டத்தை தடுத்து நிறுத்த நெஞ்சை துளைக்கும் ரவைகளால் முடியாது. இதனை நாம் வரலாற்றில் நிரூபித்துள்ளோம். எனவே அனைவரும் எங்களுடன் இணையுங்கள். அனைத்து பல்கலைக்கழக மாணவர் சங்கத்தை தடை செய்வதன் மூலம் சுதந்திர கல்விக்காக முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டங்களை தடுக்க முடியாது என்று அதன் ஏற்பாட்டாளர் சஞ்சீவ பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொலிஸ் தாக்குதல், கண்ணீர்புகை, துப்பாக்கி ரவைகள், நீதிமன்றம் மற்றும் சிறை என்பவற்றால் போராட்டத்தை தடை செய்ய முடியாது.

கல்வித் துறையில் இடம்பெறும் மோசடிகளுக்கு நாம் எதிர்ப்பை தெரிவிக்கிறோம். மோசடிகளுக்கு எதிராக போராடவும் தயார்



தனியார் மயப்படுத்தல் இன்று நாட்டின் கொள்கையாக மாறிவிட்டது. 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை நாட்டில் 355 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. இன்னும் பல பாடசாலைகள் மூடப்படவுள்ளன.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என ஒன்றை அமைத்து பணம் சேகரித்து பாடசாலையை நடத்திச் செல்லும் பொறுப்பை பெற்றோர்களிடம் ஒப்படைத்துள்ளனர். இவற்றினால் கல்வித் துறையில் இடம் பெறும் மோசடிகளுக்கு நாம் எதிர்ப்பை தெரிவிக்கிறோம். மோசடிகளுக்கு எதிராக போராடவும் தயார். அனைத்து பல்கலைக்கழக மாணவர் சங்கத்தைத் தடை செய்து எமது போராட்டத்தை முடக்க முடியாது.

வறுமையில் வாடும் பெற்றோர்களின் பிள்ளைகள் படிக்க பாடசாலை வேண்டும். பல்கலைக்கழகம் வேண்டும். அதனை யோசிக்காமல் வெறுமனே பட்டம் குறித்து மாத்திரம் எம்மால் சிந்திக்க முடியாது. - என்றார். (ச)

# பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு நீதிமன்றம் அழைப்பாணை

## ஊழல் குற்றச்சாட்டில் நடவடிக்கை

கொழும்பு,ஜூன்8

ஊழல் குற்றச்சாட்டு தொடர்பாக நீதிமன்றில் முன்னிலையாகுமாறு காலி பிரதி பொலிஸ் மா அதிபர் ஹெக்டர்தர்மசிறிக்கு கொழும்பு கோட்டை பிரதம நீதிவான் ரஷ்மி சிங்கப்புலி நேற்று வியாழக்கிழமை அறிவித்தலை அனுப்பியுள்ளார்.

அவருக்கு எதிரான 15 குற்றச்சாட்டுகளை லஞ்ச மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு கொழும்பு பிரதம நீதிவானிடம் நேற்று வியாழக்கிழமை சமர்ப்பித்துள்ளது.

இந்தநிலையில் பிரதி பொலிஸ் மா அதிபரை ஜூலை 26 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# 24 மணிநேர புறக்கணிப்பு

## மின்சாரசபை தொழிற்சங்கம் தீர்மானம்

கொழும்பு,ஜூன்8

சம்பளக் கொடுப்பனவு உள்ளிட்ட கோரிக்கைகள் பலவற்றை முன்வைத்து 24 மணிநேர பணிப் புறக்கணிப்பை நடத்த இலங்கை மின்சார சபை ஒன்றிணைந்த தொழிற்சங்க சம்மேளனம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் 4 ஆம் திகதி குறித்த பணிப் புறக்கணிப்பை மேற்கொள்ளவுள்ளதாக சம்மேளனத்தின் செயற்குழு உறுப்பினர் ரஞ்சன் ஜெயலால் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இலங்கை மின்சார சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்க சம்மேளனத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார். கடந்த காலங்களில் மேற்கொண்ட தொழிற்சங்க நடவடிக்கைகளை அரசு கண்டுகொள்ளாதிருப்பதால் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானித்ததாக அவர் கூறினார்.

இந்தப் பணிப் புறக்கணிப்பு மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர் அரசுக்கு ஒரு மாத கால அவகாசம் இருப்பதனால் அதற்கு உரிய தீர்வைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார். (ச)

# பணிகளைப் புறக்கணித்து நிற்கும் பல்கலை ஊழியருக்கு சம்பளம் 'கட்'

## உயர்கல்வி அமைச்சு தகவல்

கொழும்பு,ஜூன்8

பணி நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களுக்கு பணி நிறுத்தத்தில் ஈடுபட்ட நாளுக்கான சம்பளம் வழங்கப்படமாட்டாது என்று உயர் கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த தெரிவித்தார்.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் சம்பளப் பிரச்சினையை தீர்க்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்ற போதும் அவர்கள் பணி நிறுத்தத்தில் ஈடுபடுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தீர்க்க வேண்டிய பிரச்சினையை பணி நிறுத்தம் செய்து தீர்க்க முடியாது என்று அவர் தெரிவித்தார்.

சம்பளப் பிரச்சினைக்கு உடன் தீர்வு காண வேண்டும் என வலியுறுத்தி பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் நேற்றுமுன்தினம் தொடக்கம் பணி நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(ச)

# வாகனங்கள் இறக்குமதியால் ரூ.50 ஆயிரம் மேலதிக செலவு

## அனுர திஸாநாயக்க எம்.பி. கூறுகிறார்

கொழும்பு,ஜூன்8

அம்பாந்தோட்டை துறைமுகத்திலிருந்து வாகனங்களை இறக்குமதி செய்வதனால் மேலதிகமாக 50 ஆயிரம் ரூபா செலவாகின்றது என்று ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அம்பாந்தோட்டை துறைமுகம் திறக்கப்பட்டு இரண்டாண்டுகள் பூர்த்தியாகவுள்ளன. என்ன நேர்ந்துள்ளது? கப்பல்கள் வருவதில்லை. சரக்கு ஏற்றும் கப்பல்கள் நங்கூரமிடாத துறைமுகத் திறந்து என்ன பயன்?

கொழும்பு துறைமுகத்துக்கு வரும் வாகன கப்பல்கள் அனைத்தும் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

இந்தத் துறைமுகத்தின் நடவடிக்கைகளினால் வாகனங்களின் விலை 50ஆயிரம் ரூபாவினால் உயர்வடையும்.- என்றார்.

இதேவேளை, கொழும்பு துறைமுகத்திலிருந்து அம்பாந்தோட்டைக்கு கப்பல்கள் அனுப்பி வைக்கப்படுவதாக வெளியாகும் செய்திகளில் உண்மையில்லை என்று பெருந்தெருக்கள் பிரதி அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

குறித்த கப்பல் ஜப்பானிலிருந்து சிங்கப்பூர் வழியாக ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்துள்ளது என்று அவர் கூறினார். (ச)

# வீசிய சுழல் காற்றால் 20 வீடுகளுக்குச் சேதம்

கொழும்பு,ஜூன்8

வீசிய சுழல் காற்றினால் கொழும்பு - வெள்ளவத்தை பிரதேசத்தில் 20 வீடுகளுக்கு பகுதி அளவில் சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சுழல் காற்றினால் வெள்ளவத்தை பொலிஸ் நிலைய குற்ற விசாரணைப் பிரிவின் கூரை கழன்று விழுந்ததனால் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் காயமடைந்துள்ளார் என்று பேரிடர் முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது. காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ச)

# பகிஷ்கரிப்பை கைவிடும்வரை பேச்சில்லை

## உயர்கல்வி அமைச்சர் கூறுகிறார்

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் ஆரம்பித்துள்ள பணி நிறுத்தத்தை கைவிடும் வரை பேச்சு நடத்தப்படமாட்டாது என்று உயர் கல்வி அமைச்சர் எஸ்.பீ.திஸாநாயக்க தெரிவித்துள்ளார். அதனால் உடனடியாக பணி நிறுத்தத்தை கைவிட்டு கடமைக்குத் திரும்புமாறு கல்விசாரா ஊழியர்களிடம் அமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார்.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அனைத்து அரச சேவையாளர்களின் சம்பளப் பிரச்சினை குறித்து தீர்மானம் எடுப்பது தேசிய சம்பளச் சபை எனவும் அந்த நடவடிக்கையில் கல்வி அமைச்சோ கல்வித் திணைக்களமோ தொடர்பு படாது என்று அவர் கூறினார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பறாளாய் அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய கோயில் மகா சங்காபிஷேகம்

நிகழும் நந்தன வருடம் 08.06.2012 இன்று வைகாசி 25 வெள்ளிக்கிழமை காலை 7.30 மணி தொடக்கம் முருகப்பெருமானுக்கு 1009 சங்குகளால் சங்காபிஷேகமும் சண்முகப்பெருமானுக்கு 109 சங்குகளால் சங்காபிஷேகமும் தொடர்ந்து பூஜையும் சண்முக அர்ச்சனையும் நடைபெறும். அடியவர்களுக்கு நண்பகல் 12.30 மணியளவில் அன்னதானமும் வழங்கப்படும்.

மாலை 5.30 மணியளவில் விசேட பூஜையுடன் முருகப்பெருமான் புட்பக விமானத்தில் வீதியுலா வருவார். அதனை தொடர்ந்து மேளக்கச்சேரியும் இடம் பெறும். அடியவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பறாளாய் அருள்மிகு
ஸ்ரீ சிவசுப்பிரமணிய
சங்காபிஷேக சபையினர்.

(c/505)

## சமையலறைக் கட்டுமாணத்திற்கான கூறு விலைகோரல்

எமது சங்கத்தின் பால்பொருள் உற்பத்திப்பகுதியின் பாவனைக்கென சமையலறைப்பகுதிக் கட்டடம் அமைத்தலுக்கான கூலிக்கு கூறுவிலை கோரப்படுகின்றது. எனவே சமையலறைக் கட்டுமானம் தொடர்பான விவரங்களை அலுவலகத்தில் பார்வையிட்டு உரிய படிவத்தைப் பெற்றுக் கூறுவிலையை 18.06.2012 ஆம் திகதிக்கு முன்னர் சங்கத் தலைமையகத்திலுள்ள கூறுவிலைப் பெட்டியில் சேர்ப்பிக்கவும்.

பொதுமுகாமையாளர்
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.

(சி/652) (45,6,9)

## 45ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம்
26.03.1946

மறைவு
26.04.2012

கடந்த 26.04.2012 வியாழக்கிழமை அன்று சிவ பதமடைந்த எமது குடும்ப விளக்கு

### அமரர் சிவகுரு பாலசுப்பிரமணியம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த 45ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (08.06.2012) வெள்ளிக்கிழமை கல்லாற்றில் இடம்பெற்று, வீட்டுக்கிரியைகள் நாளை (09.06.2012) சனிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 18, கரப்பன்காடு,
வவுனியா.

குடும்பத்தினர்.

(19046) (6,9,10)




### காசுக்கான வேலைத்திட்ட பயனாளிகள் சந்திப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்8

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தில் வேலைத் திட்டத்தின் பயனாளிகளை திட்ட அதிகாரிகள் சந்திக்கவுள்ளனர்.

பிரிவு ரீதியாக மக்களை கிராம அலுவலர் ஊடாகப் பொது இடத்தில் சந்திப்பதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் யாழ். மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் கா.சுதர்சன் பிரதேச செயலகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் எதிர்வரும் 11 ஆம் திகதி காலை 9 மணிக்கு எழுதுமட்டுவாழ் தெற்கிலும் பிற்பகல் 2 மணிக்கு நாகர்கோவிலிலும் 12 ஆம் திகதி காலை 9 மணிக்கு வசாவிளான் மேற்கிலும் 11 மணிக்கு புன்னாலைக்கட்டுவனிலும் 2.30 மணிக்கு குப்பிளான் ஆகிய பிரிவுகளிலும் சந்திப்புக்கள் இடம்பெறவுள்ளன. (ம-9)

### தாண்டவ உதயம்

யாழ்ப்பாணம்,ஜூன் 8

கீழைத்தேய ஆடற் கதையான 'தாண்டவ உதயம்' எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு யாழ். திருமறைக்கலா மன்ற கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளதாக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் என்.ஸ்ரீதேவி அறிவித்துள்ளார்.

மானுட ஆளுமை மிகுந்த செய்தியைத் துல்லியப்படுத்தும் அரங்க செயற்பாடான அத் தாண்டவ உதயம் அரங்க நிகழ்வுக்கு ஆர்வலர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ங-16)

### பணிப்பெண் தேவை

யாழ். நகரிலுள்ள வீட்டில் தங்கியிருந்து வேலைசெய்யக் கூடிய பெண் தேவை. (சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்).

தொடர்பு:
077 4771 588

(19057) (45.9.6)

### அடையாள அட்டை தவறிவிட்டது

புஸ்பராணி தியாகராசா என்பவரது தே.அ.அட்டை (இல.536836462V) வற்றாப்பளை அம்மன் கோயில் பகுதியில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் [illegible]
021-222 4846

(19059)

## ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ+து)

பதிவு இல : J/1596 பதிவுத் திகதி : 11.03.1972

ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பின்வரும் பதவிக்காகத் தகைமையுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1. பதவி | : | கணக்காளர் (நிரந்தரம்) |
| 2. சம்பளக்குறி இல | : | 104/10 |
| 3. சம்பள அளவுத்திட்டம் | : | 10700 - 120 × 10 130 × 10 -13200 (66/2006 இன் படி) |

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :**

(அ) கூட்டுறவு பணியாளர் 11வது சம்பளத்திட்ட கணக்கு பதிவியலாளர் அல்லது கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான எழுதுவினைஞர் பதவி ஒன்றில் மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளர் 12வது சம்பளத்திட்ட கணக்கு பதிவியலாளர் அல்லது கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

(ஆ) ஐக்கிய இராச்சிய கணக்கு பதிவியலாளர் நிறுவன இறுதியாண்டு பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றின் கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான மேற்பார்வை மட்ட பதவி ஒன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது ஐக்கிய இராச்சிய கணக்கு பதிவியலாளர் நிறுவன இடைநிலைப் பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றின் கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான மேற்பார்வை மட்ட பதவி ஒன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

(இ) கூட்டுறவு பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த(உயர்தரம்) கணக்கியல் உட்பட 03 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றின் கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான மேற்பார்வை மட்ட பதவி ஒன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்

| | | |
|---|---|---|
| 1. பதவி | : | களஞ்சிய முகாமையாளர் (நிரந்தரம்) |
| 2. சம்பளக்குறி இல | : | 208/14 |
| 3. சம்பள அளவுத்திட்டம் | : | 9700 - 80 × 10 85 × 10 -11350 (66/2006 இன் படி) |

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :**

(அ) கூட்டுறவு பணியாளர் 15வது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளர் 16வது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) கூட்டுறவுப் பணியாளர் சா/தரக் கற்கைநெறி அல்லது க.பொ.த (சாதாரணதரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தி.

| | | |
|---|---|---|
| 1. பதவி | : | விற்பனை உதவியாளர் (நிரந்தரம்) |
| 2. சம்பளக்குறி இல | : | 308/17 |
| 3. சம்பள அளவுத்திட்டம் | : | 8950 - 65 × 10 70 × 10 - 10300 (66/2006 இன் படி) |

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :**

(அ) கூட்டுறவு பணியாளர் கனிஷ்டதரச் சான்றிதழ்

அல்லது

(ஆ) 08ஆம் வகுப்புச் சித்தியுடன் விற்பனை அலுவல்களுடன் தொடர்புடையதாக 03வருடங்களுக்கு குறையாத அனுபவம்

4. வயதெல்லை : 18 - 45 வரை (கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்களுக்கு வயது கருத்தில் கொள்ளப்பட மாட்டாது)

5. ஏனைய விவரங்கள் :

1. விண்ணப்பங்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்டு தலைவர், ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம், ஆஸ்பத்திரி வீதி, ஊர்காவற்றுறை எனும் முகவரிக்கு பதிவுதபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.
2. தற்போது கூட்டுறவுச் சேவையில் இருப்பவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது என்பதுடன், அவர்கள் பதவிகளுக்காக விண்ணப்பிக்கும் போது தமது விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட சங்கத்தினூடாக அனுப்பி வைத்தல் வேண்டும். இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பங்களை அனுப்புதல் விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கும், தெரிவு செய்யப்பட்ட பின்னர் அது வெளிப்படுமிடத்து நியமனத்தை இல்லாதொழிப்பதற்கும் வழிவகுக்கும்.
3. கணக்காளர் பதவிக்கு கணணியில் Microsoft Excel அறிவு உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
4. நியமனத்திற்கென தெரிவு செய்யப்படும் போது சங்கத்தால் கோரப்படும் ரொக்கப்பிணை, ஆதனப்பிணை என்பவற்றை செலுத்தல் வேண்டும்.

05. விண்ணப்ப முடிவு திகதி : 22.06.2012

தலைவர்
ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கம்,
ஊர்காவற்றுறை.

(சி/504)(2-9-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வலுவிழந்தோருக்கு வீடமைப்பு உதவி வீரசிங்கம் மண்டபத்தில் இன்று நிகழ்வு

தென்மராட்சி, ஜூன் 8

யாழ்.மாவட்ட வலுவிழந்தோருக்கு யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற விருந்த வீடமைப்பு உதவியின் அங்குரார்ப்பண நிகழ்வு இன்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சமூக சேவைகள் அமைச்சினால் யாழ்.மாவட்ட வலுவிழந்தோருக்கு வீடமைப்புக்கான நிகழ்ச்சித் திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறுமென்று அறிவிக்கப் பட்டிருந்தது.

இந்த நிகழ்வு தவிர்க்க முடியாத காரணங்களால் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

# அபிநயப் பாடல் போட்டிகள்

தென்மராட்சி, ஜூன்9 8

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான ஆங்கில அபிநயப் பாடல் போட்டிகள் நாளை காலை 8 மணிக்கு சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (ம-9)








காரைநகரில் உள்ள மூன்று முருகன் ஆலயங்களில் கடந்த வாரம் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. காரைநகர் இலகடி அத்திபுரம் முருகன் ஆலய கும்பாபிஷேகத்துக்காக கும்பங்கள் வீதிவலம் வருகின்றன. காரைநகர் மணற்பிட்டி புகலி ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலய கும்பாபிஷேகத்தில் பக்தர்கள் புடைசூழ கும்பங்கள் வீதி வரும் வருகிறது. காரைநகர் மத்தி அரசடிக்காடு கதிர்காமசுவாமி கோவிலில் விமானம், தூபிகளுக்கு குடமுழுக்கு இடம்பெறுகிறது. (ம-250)



கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தின் வருடாந்த தேர்த் திருவிழாவில் பஞ்சமுக விநாயகர் தேரில் எழுந்தருளி வீதி வலம் வருகிறார். (ம-17)



சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய தேர்த்திருவிழா அண்மையில் இடம்பெற்றது. சுவாமி தேரில் எழுந்தருளி வலம் வருகிறார். (ம)




கோண்டாவில் மேற்கு உட்புமடம் பிள்ளையார் ஆலய வருடாந்த தேர்த் திருவிழாவில் அடியவர்கள் புடைசூழ பிள்ளையார் தேரில் வெளி வீதியுலா வருகிறார். (ம-86)



காரைநகர் பாலாவோடை முருகமூர்த்தி முத்துமாரி அம்மன் ஆலய தேர்த்திருவிழாவில் அம்பாள் பக்தர்கள் புடைசூழ தேரில் எழுந்தருளுகிறார். (ம-250)



வரலாற்றுச் சிறப்புமிக்க வடமராட்சி மந்திகை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் அண்மையில் நடைபெற்றது. பக்தர்கள் பல இடங்களிலிருந்தும் அம்மனுக்கு காவடி மற்றும் பாற்குடம் எடுத்து தங்கள் நேர்த்திக்கடனை நிறைவேற்றினர்.



உலகப் பெருமஞ்சம் என வர்ணிக்கப்படும் இணுவில் கந்தசுவாமி ஆலய [illegible] இடம் பெற்றது. இந்த உற்சவத்தில் பெரும் எண்ணிக்கையான அடியவர்கள் கலந்துகொண்டனர். (ம-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயிலில் ஏன் காணிக்கை செலுத்த வேண்டும்?

அருகாமையிலுள்ள கோயிலில் ஒரு காணிக்கை செலுத்தவேண்டும் என்று பாட்டி சொல்லும்போது இறைவனிடமிருந்து ஏதோ பெறுவதற்காக பாட்டி செய்யும் தந்திரம் என்று குழந்தைகள் கேலி செய்வது வழக்கம்.

ஆனால் இது கேலி செய்யத்தக்க வெறும் தந்திரம் அல்ல. நம் முன்னோர்கள் இதையும் ஓர் ஆராதனையாகக் கருதியிருந்தனர். பொதுவாக ஒரு பால்பாயாசம், விளக்கு, பூ அல்லது விளக்குக்கான எண்ணை. முதலியவை காணக்கையாகப் படைப்பது வழக்கம். ஒரு பொருத்தனை நேர்ந்து நிரந்தரம் பிரார்த்தனை செய்து இறைவனில் மையப்படுத்துவதன் விளைவாக பக்தனின் உள்ளத்தில் குடிகொள்ளும் ஜீவசக்தி உணர்வடைந்து நினைத்த வழிபாட்டை இறைவன் ஆசியால் நடத்த வல்லவனாகுகின்றான் என்று நம் முன்னோர்கள் பண்டைக் காலத்திலே புரிந்து கொண்டிருந்தனர்.

பூஜைக்குத் தேவையான பொருள்கள் தேவனுக்கு காணிக்கையாகப் படைப்பதனால் படைப்பவர் தானும் பூஜையின் பாகமாக மாறுகின்றார்.

இந்த விஷயத்தில் மேல் நாட்டினர்களின் ஆராய்ச்சிகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால் நிரந்தரமான திட நம்பிக்கையால் எதையும் சாதிக்கமுடியும். அதற்கான சக்தி மனிதனில் உண்டு என்ற உண்மை அங்கீகரிக்கப்பட்டுள்ளது. வழிபாடுகள் வாயிலாக பக்தர்களுக்கு கிடைக்கப்பெறுவதும் இதுவே. நேர்ச்சைகள் நடத்தாதவர்களும் கோயிலில் பக்தியுடன் காணிக்கைகளைப் படைப்பததைக் காணலாம். இறைவன், அரசன், குரு, குடும்பத் தலைவன் என்பவர்களைக் காணச் செல்லும்போது வெறும் கையுடன் செல்லலாகாது என்ற பாரத நம்பிக்கை இன்றும் உறுதியாகச் செயல்படுகின்றது.

*நன்றி: கோபுர தரிசனம்*

## ஞானக்கதிர்

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மே 5

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இருபத்தி ஐந்து தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விநாயகப் பெருமானுக்குத் தீர்த்தமும் 18 ஆம் திகதி வசந்தோற்சவமும், தொட்டித் திருவிழாவும் 23 ஆம் திகதி சனிக்கிழமை முருகப் பெருமானுக்குத் தீர்த்தமும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 5.45 மணிக்கு புஸ்பரதமும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருமஞ்சமும் இடம்பெறும்.

27 ஆம் திகதி புதன்கிழமை காலை 7.30 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கைலாசவாகனமும் 30 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு குதிரை வாகனமும் யூலை மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக் கிழமை சப்பறமும் 2ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் இடம்பெறும். (7)

* * *

சாவகச்சேரி வடக்கு மண்டுவில் இலஞ்சாரணியம் அம்பாள் ஆலய(சோலை அம்மன்)ஆலயத்தில் வைகாசி விசாகப் பொங்கலும் காவடி விழாவும் எதிர்வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும். (9)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 8

ஆயிரம் பலாப்பழம் வெட்டி கொடி மரத்துக்குப் பூசை செய்யும் விழா நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு இடம்பெறும். அராலி ஆவரம்பிட்டி முத்துமாரியம்மன் ஆலயத்தில் இந்த நிகழ்வு இடம்பெறும் என ஆலயப் பிரதம குரு அறிவித்துள்ளார்.


இதேவேளை கொடிமரப் பூசையைத் தொடர்ந்து அம்பிகை வீதி உலாவும் இடம்பெறும். 8 ஆம் திருவிழாவான இன்று தவில் நாதஸ்வர கச்சேரியும் அன்னதான நிகழ்வும் இடம்பெறும். (ந-50)


* * *

கைதடி மேற்கு உதயநகர் அண்ணமார் ஆலய அலங்கார திருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகிறது. ஜூன் 21 ஆம் திகதி 12 ஆம் திருவிழாவுடன் உற்சவம் நிறைவுபெறும். (ந)

சிவ

# அச்சுவேலி, பத்தமேனி அருள்மிகு மிட்டில
# தேவஸ்தான புனராவர்த்தன, அஷ்டபந்த
# மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபன







### ஆலய பிரதம குருவின் ஆசிச் செய்தி
### நடராஜ அம்பலவாணர் விநாயகர் பாதம் பணிந்து இன்னருள் பெறுவோமாக

யாழ் மாநகரிலே சகல செல்வங்களும் செழித்து விளங்கும் பத்தமேனி மிட்டிலாங்கூடல் நடராஜ அம்பலவாணர் விநாயகருக்கு இன்று கும்பாபிஷேகத் திருநாள். பாலாலயத்தில் எழுந்தருளி ஓராண்டு காலத்திற்குள் புதிதாக அமைக்கப் பெற்ற மகாலக்ஷமி, சுப்பிரமணியர், நடராஜர், நவக்கிரகங்கள், சண்டேஸ்வரர் போன்ற பரிவார மூர்த்திகளுக்கும் மூல மூர்த்தியாகிய விநாயகப் பெருமானுக்கும் நவகுண்ட யாகமும் புதிய எழுந்தருளி பஞ்சமுக விநாயகருக்கு பஞ்ச குண்ட யாகமும் அமைக்கப்பட்டு குடமுழுக்கு விழா நடைபெறுகின்றது. இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும் வாழ்க்கைச் சக்கரத்திலே இன்பம் பெருகவும் துன்பங்களைத் துடைத்தும் துன்பங் களைத் தாங்கும் மனோதிடத்தையும் வழங்குவது இறையருள். இவ்வாறு விக்கினங்கள் எல்லாவற்றையும் போக்கி அருள் வழங்கும் விநாயகப் பெருமானின் கும்பாபிஷேக பெருஞ் சாந்தி விழாக்காணும் பக்தர்களின் வாழ்வில் என்றும் இன்பம் பொங்கட்டும். இல்லங்களில் நன்மைகள் விளையட்டும். செல்வம் செழிக்கட்டும். உவகை மலரட்டும் எனப் பிரார்த்தித்து பத்த மேனிக்கு வாரீர் பல நன்மைகள் நல்கும் விநாயகர் கும்பாபிஷேக விழா காண வாரீர் என அழைக்கின்றேன்

'மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ நா. சுதாகரசர்மா
பத்தமேனி விநாயகர் தேவஸ்தானம்.

### விநாயகரின் பெருங்கருணை கிட்டட்டும்



உலகைப் படைத்து உலகிலுள்ள உயிர்களை உய்விப்பது சிவபெருமானின் மேலான கருணை நோக்காகும். அதற்காக விநாயகனாக, முருகனாக வெவ்வேறு வடிவெடுத்து தொழிற் படுகின்றான். இந்த வகையில் எமது மிட்டிலாங் கூடல் நடராஜ அம்பலவாணர் விநாயகன் சிவப்பரம்பொருளாகவே காணப்படுகின்றான். காலத்துக்குக் காலம் நடைபெற்ற புனருத்தாரணப் பணிகளைக் காட்டிலும் இம்முறை சிவகாம சுந்தரியுடனான நடராஜ அம்பலத்தாடும் பெருமான், மகாலட்சுமி , முருகப்பெருமான், சண்டேஸ்வரப் பெருமான், நவக்கிரக தேவர்கள் ஆகியோரோடு சிவனைப் போன்று ஐந்து முகங்களோடு பஞ்சமுக விநாயகப் பெருமானுக்கும் புதிதாக ஆலயம் அமைத்து புதிய விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்து மகாகும்பாபி ஷேகம் நடைபெறுகின்ற பெருங் கைங்கரியத்தில் என்னைத் தொழிற்படுத்து கின்றான். எனது முன்னோர் வரிசையில் எம் ஆலயத்தைப் பரிபாலித்து வரு கின்ற பெரும் பாக்கியத்தைத் தந்து இப்பணியில் ஈடுபடுத்தி வரும் நடராஜா அம்பலவாண விநாயகப் பெருமானை வணங்குகின்றேன்.

ஆலயத்திருப்பணிகளுக்கு நிதி உதவிகள் செய்தோர் எல்லாவகையிலும் உதவியோருக்கும் நன்றி கூறுவதோடு எல்லோருக்கும் விநாயகப் பெருமானின் பெருங்கருணை கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

மிட்டிலாங் கூடல், கா.குகேஸ்வரன்
பத்தமேனி. பரம்பரை தர்மகர்த்தா



### பிரதிஷ்டா பிரதம குருவின் ஆசிச் செய்தி
### விநாயகர் அருளால் அடியார்க்கு நல்வாழ்வு மலரட்டும்

எல்லாம் வல்ல பத்தமேனி அருள்மிகு மிட்டிலாங்கூடல் நடராஜ அம்பலவாணர் விநாயகர் தேவஸ்தான புனராவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் இன்று (08.06.2012) நடைபெறுகின்றது. கடந்த ஆண்டு (2011) இந்த ஆலய பாலஸ்தாபன நிகழ்வு நடைபெற்று ஓராண்டிற்குள் மீளவும் தனது அமைவிடத்திற்கு எம் பெருமான் சென்றமர்ந்து அடியவர்களுக்கு அருள் பாலிக்கவுள்ளார். பன்னிரு ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறும் இக் கும்பாபிஷேக பெரு விழா இன்று இந்தக் கிராமத்திலே மிகவும் சிறப்பாக நவகுண்டயாகம் அமைக்கப்பெற்று நடைபெறுகின்றது. மானிடவாழ்விலே காணுவதற்கு அரிய விழாவான இந்நிகழ்வினைக் காணும் அடியவர்கள், அன்பர்கள் அனைவரும் எம்பெருமானின் திருவருள்பெற வாழ்த்தி அவன் தாழ் வணங்கி அவனருள் பெறுவோமாக!

''லோகா சமஸ்தா சுகினோ பவந்து''

சிவஸ்ரீ த. விக்னராஜக்குருக்கள் - அச்செழு, நீர்வேலி.

(C/501) (6,9,10)



### நல்லை ஆதீன குருமுதல்வரின் அருளாசிச் செய்தி!

புண்ணிய புனித பூமியான அச்சுவேலி, பத்தமேனி உறையும் அருள்மிகு மிட்டிலாங் கூடல் நடராஜ அம்பலவாணர் விநாயகர் ஆலயத்தில் இன்று மகாகும்பாபிஷேகம் நடைபெறுவதை யிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

வினைகளை வேரோடு களையும் ஸ்ரீ விநாயகப் பெருமானுடைய திருவருள் நலத்தினால் இந்த ஆலயம் புனராவர்த்தனஞ் செய்யப்பட்டு இங்குள்ள அடியார் பெருமக்களின் இடைவிடாத பெருமுயற்சியினால் இன்று மகாகும்பாபிஷேகம் நடைபெறுவது ஒரு புனித கைங்கரியமாகும்.

இந்த அச்சுவேலி வாழ் மக்கள் பூர்வ ஜென்ம புண்ணியஞ் செய்தவர்களாவர். எல்லாம் வல்ல நடராஜ அம்பலவாணர் விநாயகப் பெருமான் அடியார்கள் அனைவருக்கும் திருவருள் புரிந்து எல்லோரும் சுபிட்சமும் மங்கலமும் நிறைந்த பெருவாழ்வு வாழ வகை செய்ய வேண்டுமென்று நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து அருளாசி நல்கி உளமாரப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

இந்த மகாகும்பாபிஷேகம் சிறப்புற எல்லாம்வல்ல நல்லைக் கந்தனின் பத்ம மலர்ப்பாதம் பணிந்து அருளாசிகள் வழங்கி வாழ்த்துவதில் பேருவகையடைகின்றோம்.

### ஆ...

ஈழமணித்திருநாட்டின் வடபால் சிரமெ...
சிறந்து ஓங்கும் அச்சுவேலி கிராமத்தின் ப...
தென்னை மரங்கள் சூழ பல ஆண்டுகளு...
போற்றி ஆதரித்து வந்தார்கள். இந்தியா...
ஆடுவதால் அம்பலவாணர் என்னும் சிறப்...
கொண்டமைந்த விநாயகப் பெருமான்...
நடைபெற்று மகாகும்பாபிசேகங்கள் ந...
நைமித்திய கிரியைகளை ஆற்றும் சிறப்பு...
ஆனிமாத பௌர்ணமியை தீர்த்த நாளாகக்...
வருகிறது. 1998ஆம் ஆண்டு புனருத்தா...
கடந்த 2007ஆம் ஆண்டிலே சித்திரத்தே...
ஆண்டு (2011) பாலஸ்தாபனம் செய்...
கும்பாபிஷேகத்தோடு நிறைவேற்றப்ப...
தெய்வானை, நவக்கிரக தேவர்கள், சிவக...
மூர்த்திகள் புதிதாக பிரதிஷ்டை செய்யப்...
காலம் அற்புதங்களை நிகழ்த்திய பத்த...
விளங்குபவர் நிர்வகித்து வருகின்றார். இ...
சித்திரை வருடப்பிறப்பு, சித்திராபௌர்...
ஆவணிச் சதுர்த்தி, நவராத்திரி, கந்தசஷ்...
பெருங்கதை, திருவெம்பாவை போன்ற ...

### ஆசியுரை



ஓர் ஆலயத்தில் கும்பாபிஷேகம் நிகழ்வதென்பது புண்ணியம் நிறைந்த ஒரு காரியமாகும். பன்னிரண்டு வருடங்களுக்கொருமுறையாவது கும்பாபிஷேகம் நிகழ்த்தப்பட வேண்டும் என்பது விதி. அந்தவகையில் அச்சுவேலி பத்தமேனி கிராமத்தில் கோயில் கொண்டருளும் அருள்மிகு மிட்டிலாங் கூடல் நடராஜ அம்பலவாணர் விநாயகப் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்ட, பஞ்சகுண்ட, பிரதிஷ்ட மஹாகும்பாவிஷேகம் இன்று (08.06.2012) வெள்ளிக் கிழமை மிகச் சிறப்புற நடைபெறுகின்றது. ''உருவேறத் திருவேறும்'' என்பார்கள் உரிய முறைப்படி தகுதி வாய்ந்த சிவாசாரியார்கள் மனம், வாக்கு காயங்களினால் ஒன்றுபட்டு, மந்திரம், பாவனை கிரியை வழிபாடுகளை நிகழ்த்தி விநாயகப் பெருமானின் திருவுருவத்தில் அருள் வளம் சிறக்க மஹா கும்பாபி ஷேகம் செய்கிறார்கள். கும்பாபிஷேகம் நிகழ்வதற்கு துணை நின்ற அன்பர்கள் அனைவருக்கும் எம்பெருமானின் திருவருள் பொலிவதாகுக! விநாயகப் பெருமானின் கிருபையால் யாவரும் மன நிறைவான இன்ப வாழ்வைப் பெறவேண்டுமென எமது நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

''சர்வே ஜனாகா சுகினோ பவந்து
சமஸ்த சன்மங்களானி சந்து''

ஸ்தானிக குருவும் முன்னைநாள் நித்திய பூசகரும்
சி. ஜெயபாலசர்மா



அருள் கடாட்ச...
கூடல் நடராஜ அ...
சிறப்புற நடைபெ...


ஐங்கரன் கூல்பார்
பஸ்நிலையம்,
அச்சுவேலி.

சியான் ரேடர்ஸ்
பிராதன வீதி,
அச்சுவேலி.

செல்வம் எல்க்ரோனிக்
வல்லை வீதி,
அச்சுவேலி.

சூரியா மரு...
பஸ்நிலை...
அச்சுவே...

(SUK) எலக்ரிக்கல்
பஸ் நிலையம்,
அச்சுவேலி.

தங்காஸ் றேடிங்
பஸ்நிலையம்,
அச்சுவேலி.


சசிகுமார் படமாடம்
செல்வராசா மரக்கலை,
பிரதான வீதி,
அச்சுவேலி.

சிவசக்தி ஸ்...
பஸ்நிலை...
அச்சுவே...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரங்கூடல் நடராஜ அம்பலவாணர் விநாயகர்
# ன நவகுண்ட, பஞ்சகுண்ட, பிரதிஷ்டா
# ம் – 2012 சிறப்பு மலர்





## லய வரலாறு

ன விளங்கும் யாழ்ப்பாணத்தின் வடகிழக்கே பயிர்வளம் ந்தமேனி மிட்டிலாங் கூடலில் அரசமரங்கள், ஆலமரங்கள், க்கு முன்னர் விநாயகப் பெருமானை இஷ்ட தெய்வமாக சிதம்பரத்தில் நடனமாடும் நடராஜன் பேரம்பலத்தில் பைப் பெறுகின்றான். அத்தகைய பெயரைத் தன்னகத்தே ஆலயம் காலத்துக்கு காலம் புனருத்தாரண பணிகள் டைபெற்று சதுர்மறை ஓதுகின்ற வேதியர்கள் நித்திய பெற்றது. 1984ஆம் ஆண்டு கொடிமரம் ஸ்தாபிக்கப்பட்டு, கொண்டு 10 நாள்கள் மகோற்சவ பெருவிழா நடைபெற்று ணம் நடைபெற்று மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. ர் ஒன்று இந்த ஆலயத்துக்கு அமைக்கப்பட்டது. கடந்த யப்பட்டு இவ்வாண்டு (2012) புதிய திருப்பணிகள் ட்டுள்ளன. பஞ்சமுகப்பிள்ளையார், முருகன், வள்ளி, ாம சுந்தரி சமேத அம்பலவாணர், சண்டேஸ்வரர் ஆகிய ட்டு மகா கும்பாபிசேகம் நடைபெறுகின்றது. காலத்துக்கு மணி விநாயகர் ஆலயத்தை பரம்பரை தர்மகர்த்தாவாக வ்வாலயத்தில் மகோற்சவம், தைப்பொங்கல், தைப்பூசம், ணமி, வைகாசி விசாகம், ஆனி உத்தரம், ஆடிப்பிறப்பு, டி, கந்த புராண படனம், கார்த்திகை விளக்கீடு, விநாயகர் திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன.

### விழா சிறப்புற வாழ்த்துகின்றேன்

பத்தமேனியில் எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் மிட்டிலாங் கூடல் நடராஜ அம்பலவாணர் விநாயகர் ஆலய குட முழுக்காட்டு விழாவிற் கான வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். 12 வருடங் களுக்கு ஒரு முறை வரும் மகா கும்பாபிஷேக விழாவுண்மையிலேயே பத்தமேனி வாழ் மக்களுக்கு ஓர் அருள்மிகு விழிப் பூட்டும் விழாவாகும். இவ் விழாவிலே பங்கு பற்றுகின்ற அடியவர்கள் புத்துணர்ச்சியும் ஆண்டவனின் ம் பெறுகின்றனர் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. மேற்படி மிட்டிலாங் ம்பலவாணர் ஆலய மகா கும்பாபிஷேக பெருவிழாவும் குட முழுக்காட்டு விழாவும் ற அந்த முழுமுதற் கடவுள் விநாயகர் பாதங்களை இறைஞ்சி வாழ்த்துகின்றேன்.

சி. முருகவேல்
(கிராம அலுவலர்) பத்தமேனி-J/281

### செஞ்சொற் செல்வரின் ஆசிச் செய்தி



அருள் வளம் நிறைந்த திருவூர் அச்சுவேலி இத்திருவூரிலே பத்தமேனி அருள்மிகு மிட்டிலாங் கூடல் நடராஜ அம்பலவாணர் விநாயகரின் சிறப்பு தனித்துவமானது. இத்திருக் கோயில் அடியவர்களின் அயராத முயற்சியால் புனர்நிர்மாணம் செய்ப்பட்டு மகாகும்பாபிஷேகம் நடைபெறுவது அறிந்து மிகவும் ஆனந்தமடைகிறேன். திருக்கோவில்கள் சிறப்புப் பெறுவதன் மூலம் மக்களிடையே ஒழுங்கும் நற்பண்புகளும் உருவாகுவது இயற்கை. கோயில் இல்லா ஊரில் குடியிருக்கலாகாது என்ற கூற்று மிக அற்புதமான பொருள் கொண்டது என்பதை அனைவரும் அறிவர். இன்றைய சமுதாயத்தை நல்வழிப்படுத்துவதற்கு கோயில்கள் முக்கிய பங்கு கொள்ள வேண்டும். இத்திருக் கோயிற் பணிகளில் இளைஞர்கள் ஆர்வம் செலுத்துவது பாராட்டுக்குரியது. மகாகும்பாபிஷேகம் இனிதே நடைபெற்று சகல மக்களும் நிறைவாக வாழ விநாயகப் பெருமானைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

கலாநிதி. ஆறு. திருமுருகன் (தலைவர்)
துர்க்கா தேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை
(தலைவர்) சிவபூமி அறக்கட்டளை

### புதிய எழுச்சி



அச்சுவேலி பத்தமேனி பதியதில் அருளாட்சி செய்யும் எம் பெருமான் நடராஜ அம்பலவாணர் விநாயக கும்பாபிஷேக மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வடைகின்றேன். எமது மூதாதையரால் சமய விழுமியங்கள், ஒழுக்கங்கள், பண்பாடுகள் என்பவற்றைப் பேணுவதற்கு கருவூலமாக திகழ்ந்த இந்தஆலயத்தின் புனரமைப்பு காலத்தின் தேவையாக இருந்து வந்தது. இதையறிந்து அடியார்களின் பெரு விருப்புடன் இந்த ஆலய கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறுகிறது. மனிதனை நெறிப்படுத்தும் நோக்கோடு சைவசமய நெறி முறைகள் பல வகை பரிணாம வளர்சிகளுடன் கூடிய விழுமியங்களைத்தாங்கி வருகின்றன. எல்லாம் வல்ல இறை செயல் என்ற நம் முன்னோர்கள் இறைவன் சித்தத் தையே தமது சித்தமாகக் கொண்டு வாழ்ந்து வந்தார்கள். அந்த வகையில் எம் பெருமானின் விழா சிறப்பாக அமைய எல்லாம் வல்ல நடராஜ அம்பலவாணர் அருள் வேண்டி ஆசிகள் கூறுகின்றேன்.

கு. கதிரமலைநாதன்
கிராம அலுவலர் பத்தமேனி அச்சுவேலி.

### வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளரின் வாழ்த்துச் செய்தி



ஈழவளத் திருநாட்டின் வடபால் அச்சு வேலி பத்தமேனி பதியிலே கோயில் கொண்டு எழுந்தருளி அடியவர்கள் துயர் தீர்த்தருளும் மிட்டிலாங்கூடல் நடராஜ அம்பலவாணர் விநாயகப் பெருமானுக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் மகா கும்பாபிஷேக பெருஞ்சாந்திப் பெருவிழா நடைபெறுவதையிட்டு பெருமகிழ்வு அடைகின்றோம். பண்டைய காலம் தொடக்கம் ஆன்மீக வழிகாட்டலூடாக மக்களை ஒழுக்கம் நிறைந்த மனிதர்களாக வாழவைப்பதிலே ஆலயங்கள் பெரும் பங்காற்றின. அவ்வழியிலே விவசாய மக்கள் செறிந்து வாழும் பத்தமேனியிலுள்ள நடராஜ அம்பலவாணர் விநாயகப் பெருமான் எமது மக்களுக்கு சகல வளங்களையும் பெற்று சுபீட்சமாகவும் சுதந்திரமாகவும் வாழ அருள்பாலிப்பாராக

அ.உதயகுமார் (தவிசாளர்)
வலி.கிழக்கு பிரதேச சபை புத்தூர்.

### பிரதேச செயலரின் ஆசிச் செய்தி



எங்கும் பிரகாசமாக விளங்கி உலகெலாம் உணர்ந்து ஆனந்த சொரூபியாக விளங்குகின்ற நடராஜ அம்பலவாணர் விநாயகருக்கு நடைபெறுகின்ற மகாகும்பாபிஷேக நிகழ்விற்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் பெருமிதம் அடைகின்றேன்.

எமது மனம் வாக்கு காயங்களுக்கு அப்பாற்பட்ட பெருமான் எமக்கு இரங்கி தடத்த நிலைய்ல் எங்களுக்குப் புலனாகி கிட்டும் முறையை உப நிடதங்கள் சிறப்பாகக் கூறுகின்றன. இதைத் துணையாகக் கொண்டு அமைக்கப்பட்டதே பிரதிட்டை என்னும் கும்பாபிஷேக கிரியை யாகும்.

அந்த வகையில் இவ் விழாவை முன்னிட்டு இப் புண்ணிய கைங்கரியத்திற்குத் தொண்டுகளாற்றிய அனைவருக்கும் எனது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்துக்கொள்வதோடு விழா சிறப்புற நடராஜ அம்பலவாணர் விநாயக பெருமானை உளமார வேண்டுகின்றேன்.

ம.பிரதீபன், பிரதேச செயலர், பிரதேச செயலகம்,
வலிகாமம் கிழக்கு - கோப்பாய்.

### எல்லோரும் காணவேண்டியது மகா கும்பாபிஷேகம்



பஞ்சபூதங்களிலும் சிவபெருமான் இருக்கிறார். இவ்வாறு சொரூபநிலையில் இருக்கும் சிவனை நாம் ஊனக் கண்ணால் காண முடியாது. நாமெல் லோரும் ஊனக் கண்ணினால் கண்டு தொழுது வழி பாடாற்றுவதற்காக நடைபெறுகின்ற கிரியையே மகாகும்பாபிஷேகம் ஆகும். விக்கிரகம் என்றால் இறைவன் விரும்பியுறையும் மேலான இடமாகும். சிவாசாரியார்கள் பஞ்சமுகங்களிலும் காணப்படும் தெய்வீக சாந்நித்தியத்தை விக் கிரகத்தில் எழுந்த ருளச் செய்யும் கிரியை மகா கும்பாபிஷேகம் ஆகும். "அர்ச்ச கர்சச்ச பிரயாவேன சிவாபவதி சங்கர" என ஆகமம் கூறும் இத்தகு மகாகும்பாபிஷேகக் கிரியைகளை எல்லோரும் காண வேண்டியது அவ சியமாகும். 12 ஆண்டுகளுக்கு பின்பு நடைபெறுகிறது இக் கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழாவாகும்.

எனவே இத்திருப்பணிகளை நிறைவேற்றியவர்கள், ஆலய உபய காரர்கள், ஆலய தருமகர்த்தா கா.குகேஸ்வரன் ஆகியோருக்கும் விநாய கப் பெருமானுடைய அடியார்களுக்கும் மேலான திருவருள் கிடைக்க வேண்டும் என ஆசி கூறுகின்றேன்.

- சைவசித்தாந்த கலாநிதி சைவப்புலவர்
செ.கந்தசத்தியதாசன். M.A.
ஆசிரிய ஆலோசகர், வலிகாமக் கல்வி வலயம்.

...தகம்
...பம்,
...லி.

விஸ்ணு ஹாட்வெயார்
பருத்தித்துறை றோட் /
பலாலி றோட்,
ஆவரங்கால்,
புன்னாலைக் கட்டுவன்.

கல்ப்பனா ஸ்ரோஸ்
அன் பேக்கரி
பிரதான வீதி,
அச்சுவேலி.

நியூ றைசிகா சலூன்
(சிவா)
பிரதான வீதி,
அச்சுவேலி.

சாளினி
புக்சொப்
பிரதான
வீதி,
அச்சுவேலி.

...ரோஸ்'
...பம்,
...லி.

வாணி ரெக்ஸ்
இல.81-
பெரியகடை,
யாழ்ப்பாணம்.

நியுசன் கொம்பிளெக்ஸ்
மொபைல் அன் ஆட்டோ
பாம்ஸ் அன் பான்சி,
வல்லை வீதி,
அச்சுவேலி.

ஹற்றன்நஷனல்
வங்கி
பஸ்நிலையம்,
அச்சுவேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவில் 3 தமிழர்களுக்கு எதிராக ஆள்கடத்தல் குற்றச்சாட்டு

கனடாவில் மூன்று தமி ழர்களுக்கு எதிராக ஆள் கடத்தல் குற்றச் சாட்டு சுமத் தப்பட்டுள்ளது. குற்றம் சுமத்தப்பட்டவர்களில் இருவர் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட கனேடிய பிரஜைகள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒன்டாரியோவைச் சேர்ந்த நடராஜா மஹேந் திரன் மற்றும் தம்பீர்நாயகம் ராஜரட்னம் ஆகியோருக்கு எதிராக குற்றம் சுமத் தப்பட்டுள்ளது.

கனடாவுக்குள் சட்ட விரோதமான முறையில் நபர்கள் பிரவேசிப் பதற்கு ஒத்துழைப்பு வழங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள் ளது.

குடிவரவு சட்டத்தின் அடிப்படையில் குறித்த தமிழர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது. குறித்த நபர்கள் பிரிட்டிஷ் கொலம்பிய நீதிமன்றில் விசாரணை செய்யப்பட உள்ளனர்.

இலங்கையரான சத்தியபவன் ஆசீவாதம் என்ற நபருக்கு எதிராகவும் இதே குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் ஆயுள் தண்டனை அல்லது ஒரு மில்லியன் டொலர் அபராதம் விதிக்கப்படலாம்.

2009 ஆம் ஆண்டு எம்.வீ. சன் சீ கப்பல் மூலம் புகலிடக் கோரிக்கையாளர்களை அழைத்து வந்தனர் என்று இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த கப்பலில் புகலிடக் கோரிக்கையாளர்களை சட்டவிரோதமான முறையில் அழைத்து வந்த குற்றத்துக்காக மொத்தமாக ஆறு பேருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. (வ)




வண்ணார்பண்ணை காட்டுத்துறை
அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண
விக்னேஸ்வரப்பிள்ளையார் கோயில்
மஹோற்சவம் - 2012

09.06.2012 - சனிக்கிழமை - கொடியேற்றம் - 11.00 மணி
13.06.2012 - புதன்கிழமை - தண்டிகைத்திருவிழா - 6.00 மணி
16.06.2012 - சனிக்கிழமை - சப்பரத்திருவிழா - 6.00 மணி
17.06.2012 - ஞாயிற்றுக்கிழமை - தேர்த்திருவிழா - 10.00 மணி
18.06.2012 - திங்கட்கிழமை - தீர்த்தத்திருவிழா - 10.00 மணி
19.06.2012 - செவ்வாய்க்கிழமை - சண்டேஸ்வரர் திருவிழா 5.00 மணி

அடியார்கள் வருக அருள்பெறுக!

(19048)(6-7-8) கோயில் அறங்காவலர்கள்



## 41 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு 01 ★ 01 ★ 1983



இறப்பு 29 ★ 04 ★ 2012

அமரர் கந்தசாமி றமணன் (சிம்பு)

திதி : 08.06.2012

எமது குடும்பத் தலைவர் கந்தசாமி றமணன் (29.04.2012) அன்று இறைபதம் அடைந்த செய்தி கேட்டு எமது துயரில் பங்குகொள்ள இல்லம் நாடி வந்தவர்கள். மரணச்சடங்கில் கலந்து கொண்டவர்கள், இரங்கல் செய்தி அனுப்பியவர்கள் மற்றும் துயரத்தில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் ஊர்மக்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குப்பிளான். (19064) (15-14) விஜயசாந்தினி (மனைவி)


## நாகதம்பிரான் மான்மியம் வெளியீடு

வடமராட்சி,ஜூன்8

வடமராட்சி நாகர் கோயில் நாகதம்பிரான் மான்மியம் (தல புராணம்) வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய முன்றிலில் பிரதம குரு சிவஸ்ரீ க. சிவ சண்முகக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் மூத்த பௌராணிக வித்தகரும், ஆலயத் தலைவருமான மு.சிதம்பரப்பிள்ளை அருளுரையையும், பருத்தித்துறைப் பிரதேச செயலர் கவிஞர் இ.த. ஜெயசீலன் வெளியீட்டுரையும் வழங்குவார்கள்.

மதிப்புரையை மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் க.ஸ்ரீஸ்கந்தகுமாரும், சிறப்புரையை மருதங்கேணி உதவி அரச அதிபர் ந. திருலிங்கநாதனும், நயப்புரையை சைவப் புலவர் ஆ. தங்கமயிலும் நிகழ்த்துவார்கள்.

கருத்துரையை ஓய்வு நிலை வட மாகாண சபைப் பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமியும் ஏற்புரையை நூலாசிரியர் சி.பசுபதியும் வழங்குவார்கள். (ந-8)


## மரண அறிவித்தல்

திருமதி சரஸ்வதி வேலுப்பிள்ளை



சப்பச்சிமாவடி வீதி, சாவகச்சேரியைப்பிறப்பிடமாகவும், இராமலிங்கம் வீதி, கல்வயல் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும், சப்பச்சி மாவடி வீதி, சாவகச்சேரியை தற்காலிக முகவரியாகவும் கொண்ட சரஸ்வதி வேலுப்பிள்ளை (பண்டிதர்) கடந்த (05.06.2012) செவ்வாய்க்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் (பண்டிதர்) அன்புமனைவியும், காலஞ்சென்ற தம்பு - காசிப்பிள்ளை தம்பதியரின் மூத்தமகளும், இராசையா, சபாரத்தினம், காலஞ்சென்ற கந்தசாமி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான சிவகாமசுந்தரி, சங்கரப்பிள்ளை, அருணாசலம், நடராசா ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான முத்துவேலு, ரத்தினம், லட்சுமி மற்றும் மங்களம் ஆகியோரின் அன்புச்சகோதரியும், Dr.சிவசுப்பிரமணியம் (லண்டன்), காலஞ்சென்ற சிவகாமசுந்தரி மற்றும் சிவயோகம், சிவஞானம், Dr.சிவபாதசுந்தரம் (லண்டன்), Dr.சிவக்கொழுந்து (கனடா), சிவலோகநாயகி, Dr.சிவகுமாரி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், Dr.சிவகாமசுந்தரி, இராசலிங்கம், Dr.அருளானந்தம், Dr.சுசிலா, Dr.மோகன், சித்திராபதி ஆகியோரின் பாசமிகு மாமியும், சரவணபவானந்தன் (கண்ணன்), Dr.திருமுருகானந்தன் (திரு), அரவிந்தன், ஜனார்த்தனன், Dr.அன்னவதனி, சுந்தரவதனி, சுஜவதன், Dr.நரேன், சுரேன், டிலினி, டிலானி, Dr.தனுஷா, நிரோஷா, அயிஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், இசபெல்லா, சஞ்சித், பிரவிந்த், சுயானி, ஐசானி, கவின், ஜெஷான், சாருஜா, லதுஷ், எய்டன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை சனிக்கிழமை (09.06.2012) காலை 7 மணிக்கு அவரது இல்லத்தில் (சப்பச்சி மாவடி வீதி, சாவகச்சேரி) நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சப்பச்சிமாவடி வீதி, சாவகச்சேரி (14731)(14-8) தகவல்: பிள்ளைகள்



## விலைக் கேள்விக்கான கோருதல் வலிகாமம் தெற்கு பிரதேசசபை சுன்னாகம்

என்னால் 2012.06.02 ஆம் திகதி பத்திரிகையில் "விலைக் கேள்விக்கான கோருதல்" என்னும் தலைப்பில் வெளியான விளம்பரத்தில் பின்வரும் திருத்தங்கள் செய்யப்படுகின்றன

பந்தி 6 விலைக் கேள்வி ஆவணம் வழங்கப்படும் கடை சித் திகதி 25.06.2012 பிற்பகல் 15.00 மணி வரை

தி.பிரகாஸ், தவிசாளர்
வலிதெற்கு பிரதேசசபை,சுன்னாகம் (சி/510)(15-14)



## மரண அறிவித்தல்

திருமதி நாகேஸ்வரி அரியரத்தினம்



மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி அரியரத்தினம் நேற்று (07.06.2012) வியாழக் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் அரியரத்தினம் (விவசாய உத்தியோகத்தர்) அவர்களின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான தியாகராஜா-பொன்னம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சுப்பிரமணியம் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி, சண்முகநாதன் மற்றும் பரமேஸ்வரி (கனடா), வெற்றிவேலு (உசன்), காலஞ்சென்ற அரியரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ரோகினி, சிவகாந்தி (உப அஞ்சல்அதிபர் - மட்டுவில் தெற்கு), சிவகுமாரி (உடுவில்), சிவகாமினி (கனடா), சிவறதினி (கனடா) ஆகியோரின் அன்புத்தாயும், காலஞ்சென்ற செல்வநாதன் (முன்னாள் சாவகச்சேரி, இலங்கை வங்கி எழுதுவினைஞர்), தர்மஜெகநாதன் (உடுவில்), சிறிசந்திரகாந்தன் (கனடா), விநாயகமூர்த்தி (கணேஸ் - கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியும், துவாரகன் (பௌதிக விஞ்ஞானம் 3 ஆம் வருடம், யாழ். பல்கலைக்கழகம்), தமீரன் (யாழ்.இந்துக் கல்லூரி), டிலக்ஷனா (சாவகச்சேரி இந்துக்கல்லூரி), கம்சிகா (யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி), வினிதன் (சாவகச்சேரி இந்துக்கல்லூரி), யதுஷ் (கனடா), அபிநயா (கனடா) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ.சிவகாந்தி (உபஅஞ்சலதிபர், மட்டுவில் தெற்கு)

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி (14730)(6-8)



## கண்ணீர் அஞ்சலி



நல்லூர் பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உதவியாளராக கடமையாற்றும்
பொன்னம்பலம் ஜெயரூபன்
அவர்களின் அன்புத் தாய்
பொன்னம்பலம் மனோன்மணி அவர்களின்
மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம், நல்லூர். நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரி சங்கம் (சி/50...)



## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வீதி, 03ஆம் கட்டை, கல்வியங்காடு அருகில் 3 ¾ பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 873 6923, 075 808 5760, 077 668 0350 (19062)



## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1978 இல் பிறந்த பூராடம் - 1, கி.பா 28½ உடைய விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு: 077 1940059
(190631)(14-8)



## கண்ணீர் அஞ்சலி

உடுவில் மத்தியஸ்தர் சபையின் முன்னாள் பிரதம மத்தியஸ்தராக இருந்த



அமரர் அப்புத்துரை தற்பரானந்தன் (J.P)

அவர்களின் இறைபதம் அடைந்த செய்தியறிந்து நாங்கள் அதிர்ச்சியடைகின்றோம். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக் கின்றோம்.

சாந்தி! சாந்தி!

தவிசாளரும் உறுப்பினர்களும், மத்தியஸ்தர்சபை, உடுவில்
(19060)(6-9-8)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# முருகா! இது என்ன சோதனை?

**கோப்பாய் சண்முகம்**
**கதையோடு செய்தி**

தள்ளுவண்டில்காரனின் சுண்டல், வடை என்றால் ஒரு தூக்குத் தூக்கும். நல்லூர் கோயில் வீதிப்பக்கம் போனால் தள்ளுவண்டில் பக்கம் சுண்டி இழுக்கும் என்றால் பாருங்களேன். அந்தளவுக்கு 'சைற் டிஷ்' என்றால் இதைவிட சைற்றிஸ் என்ன இருக்கிறது.

கடந்த வாரம் ஒரு நாள் இரவு 7.30 மணியிருக்கும் அந்தப் பக்கம் போன நான் தள்ளுவண்டில்காரனிடம் சுண்டல் வாங்கிக்கொண்டு நல்லூர் பின்பக்க வீதியின் மண்கும்பியில் இருந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தேன். வீதி திருத்துவதற்காக அந்த வீதி மூடியிருந்ததால் வாகன நடமாட்டம் இல்லாது வெறிச்சோடிப் போய்க் காணப்பட்டது. ஆனாலும் மோட்டார் சைக்கிள் ஓட்டம் குறையாவில்லை. இருந்தாலும் ஒரு அமைதியான சூழல் நிலவியது.

அந்த முருகனிடத்தில் எனது மனதில் இருந்த பாரத்தினை இறக்கிவைத்தது போல் மனசு இலேசாக ஓய்வு கொண்டது. அந்த வீதியால் ஒரு யுவதி சைக்கிளில் போகிறாள். அவளைப் பார்த்து ''உந்தப் பெட்டை கலகலப்பாகத் திரியிறது, இப்ப என்ன மூஞ்சியை இப்படி வைத்துக்கொண்டு போகுது, எங்கையாவது மாட்டி விட்டிருக்கும்'' என்று சொன்ன அந்தப் பெடியனைப் பார்க்கிறேன். அவனைச் சுற்றி ஆறு பெடியள் கலகலப்பாக கதைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் பக்கத்தில் எவர் இருக்கிறார்கள் என்று கூடப் பார்க்காமல் பத்திரிகையில் வெளிவராத செய்திகளை வெளியிட்டுக்கொண்டிருக்கிறார்கள். சில செய்திகளை கேட்கக்கூடியதாக இருக்கிறது. சில செய்திகளை கேட்கமுடியாமல் அவ்வளவு கேவலமாக இருக் கிறது. அந்தளவுக்கு அந்த இளைஞர்களிடையே சம்பாசனை தொடர்கிறது.

சுண்டல் சாப்பிடப்போன எனக்கு பல கிசு கிசு செய்திகளை அறியக்கூடியதாக இருந்தது. அந்த இளைஞர்கள் தங்களுக்குள் கதைக்கும் கதையினை மட்டுமே கேட்டுக்கொண்டிருந்தேன். அந்த இளைஞர்களில் ஒருவன் ''வயது போன வாத்திக்கு இருக்கிற மவுசு எங்களுக்கு இல்லையடா'' என்றான். ''அட போடா! ஏதாவது மிரட்டி பணிய வைத்திருப்பார்'' என்றான் மற்றவன்.

''அந்தப் பெட்டை ஓடிப்போனதில் இருந்து இந்தப் பெட்டை கவலையோட திரியுது.'' என்றான் ஒருவன் . ''இரண்டு பேரும் உயிர் நண்பிகளாம்'' என்றான் மற்றவன். ''நடக்க முதலே தடுத்திருக்கலாம் தானே வாத்தியென்று விட்டுட்டாளோ?'' என்றான் ஒருவன்.

இப்படியாக ஓர் ஆசிரியரைப் பற்றியும், மாணவியைப் பற்றியும் கதை நகர்கிறது. ஏதோ ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. அதைத்தான் அந்த இளைஞர்கள் கிண்டலாகக் கதைக்கிறார்கள் என்று எனக்குள்ளே நினைத்துக்கொண்டு அவர்கள் கதைக்கும் கதையினை மட்டும் கேட்கிறேன் . இதற்கிடையில் அந்த இளைஞர் கூட்டத்தில் நின்ற ஒருவனுக்கு போன் கோல் வருகிறது. கான் போனினை எடுத்துப்பார்த்துவிட்டு அந்தக் கூட்டத்தில் இருந்த மற்றவர்களுக்கு சத்தம் போடாமல் இருக்கும்படி வாயில் விரலினை வைத்து ''உஷ்..... உஷ்...'' என சத்தம் போட்டுக் காட்டினான். எல்லோரும் அமைதியானதும் போனினை எடுத்துக் கதைக்க ஆரம்பித்தான்.

யாரைப்பற்றிக் கதைக்கிறார்கள் என்று ஒன்றுமே புரியாமல் இருக்கிறேன். அவர்களிடம் சென்று கேட்கவும் முடியாது. என்னைத் தெரிந்தாலும் மற்ற விடயம் என்றால் சொல்லவும் மாட்டார்கள். சரி! எவ்வளவு நேரமானாலும் என்னதான் கதைக்கிறார்கள் என்று இருந்து கேட்பம் என்று எனக்குள்ளே முடிவெடுத்துக்கொண்டு அந்த மணல்கும்பியில் இருக்கிறேன். இதற்குள் எனக்கு தெரிந்த ஒரு வாத்தி சுண்டல் வாங்கிக் கொண்டு மணல்கும்பிப் பக்கம் வருகிறார். கையால் சைகை காட்டி அவரை எனது பக்கம் அழைக்கிறேன். நான் இருப்பதைக் கண்டுவிட்டார் எனது பக்கம் வந்து மணல்கும்பியில் அமர்கிறார்.

ஏதோ ஏதோவெல்லாம் கதைத்த அவரிடம், அங்கு நிற்கும் பெடியள் கதைத்த கதையினை போட்டுப் பார்த்தேன். வாத்தியோ ''ஒரு வாத்தி மாணவியை கூட்டிக்கொண்டு ஓடிவிட்டார் அதைத்தான் கதைக்கிறாங்கள் போலும்'' என்று சொன்னார். ''நானோ , யார் வாத்தி'' என்று கேட்க. அவரோ ''57 வயதிருக்கும்...... கல்லூரி ஒன்றில் படிப்பித்தவர். கொழும்பில் மனைவி பிள்ளைகள் இருக்கிறார்கள். ..... கோயில் வீதியில் றூம் எடுத்து இருந்தவர்.'' என்றார். ''என்ன லவ்வோ'' என்று கேட்டேன். வாத்தியோ ''அவரது மாணவிதான். 23 வயது. எனக்கென்றால் தெரியல, லவ்வாக இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். இப்பத்த பெட்டையளையும் நம்ப முடியாது, வாத்திமாரையும் நம்பமுடியாது. வெளிச்சத்துக்கு ஒரு சிலது வெளிவருது. வெளிவராமல் நிறைய நடக்குது'' என்றார். அவரும் ஓர் ஆசிரியர் என்றபடியால் உண்மையைச் சொன்னார்.

போனில் கதைத்துவிட்டு மீண்டும் அந்த இளைஞர் கூட்டம் கலகலப்பைத் தொடங்கியது. ''என்னவாம்'' என்றான் ஒருவன். ''இல்லை எங்க இருக்கிறாய் என்று கேட்கிறாள். அதுதான் அவளுக்கு பொய் சொல்ல இவ்வளவு நேரமாகிவிட்டது'' என்றான் மற்றவன். ''வழிக்கு வருவாளோ'' என்றான் ஒருவன். ''வருகிற மாதிரி இருக்கு'' என்றான் மற்றவன். ''மடக்கு மடக்கு வேளைக்கு மடக்கு'' என்றான் இன்னொருவன். ''றை பண்ணுவம்'' என்றான் மற்றவன். இப்படிக் கதைபோக ''என்ன வாத்தி இவங்கள் அந்த வாத்தியைவிட மோசமாக இருக்கிறாங்கள்'' என்று கேட்க வாத்தியோ ''யார்தான் சளைத்தவர்கள் இல்லை. இப்ப தட்டிக் கேட்பதற்கு எவரும் இல்லை. புலிகள் இருந்தாலாவது நாலு சாத்து சாத்தி ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடுவார்கள். இப்ப அவங்களும் இல்லை. இனிமேல் உலகத்தில் முன்னணியில் நின்ற தமிழ்க் கலாச்சாரம் பின்னணிக்குப் போய்விடப் போகிறது என்கிற போதுதான் கவலையாக இருக்கிறது'' என்றார்.

இதற்கிடையில் அந்தக் கூட்டத்தில் நின்றவர்களில் ஒருவன் கேட்டான் ''கொழும்புக்கு அவளை கொண்டுபோய் இருப்பாரோ'' என்று. அதற்கு மற்றவன் ''கொழும்பில் மனைவி பிள்ளைகள் இருப்பதால் அங்கே கொண்டு போய் இருக்க வாய்ப்பில்லை. வேறு எங்கையாவது கொண்டுபோய் இருப்பார்'' என்றான். இன்னொருவன். ''அந்தக் கல்லூரியில் இந்த வாத்தியாரைப் பற்றி நிறைய முறைப்பாடு. முதலே சொன்னனாங்கள் அங்கே எவரும் எங்கள் பேச்சை காதில் வாங்கிக்கொண்டதாக இல்லை. வாத்தி வீட்டுக்குப் போய் படித்ததால்தான் அவளுக்கு வந்தது கேடு'' என்றான் . ''வாத்தி மாரை எப்படி நம்பிறது'' என்றான் மற்றவன்.

இதைக்கேட்டதும் எனக்குப் பக்கத்தில் இருந்த வாத்தியார் என்னைப் பார்த்து ''இதிலை இருந்தால் பலதும் பத்தும் வெளி வரப்போகுது. இதைக் கேட்க எனக்கு விழுகிற பேச்சு மாதிரி இருக்கு நான் கிளம்பிறண்டா'' என்று சொல்லி எழும்பினான். ''பொறடா இரு என்ன கதைக்கிறாங்கள் என்று பார்ப்போம்'' என்று, எழும்பிய அவனை இழுத்து இருத்தி னேன். ''நான் இந்த வாத்தி வேலையை விட்டு விடணும் போல இருக்குது'' என்றான்.

மீண்டும் அந்த இளைஞர்கள் கதைப்பதை உற்றுநோக்கிக் கேட்டோம். ''அது சரி நீ எப்ப அவளை கூட்டிக்கொண்டு ஓடப்போறாய்'' என்றான் ஒருவன். ''அதுக்கெல்லாம் காலநேரம் இருக்கு'' என்று சொன்னான் மற்றவன். ''காலம் நேரம் பார்த்தாய் என்றால் அதற்கிடையில் யாராவது வாத்தியார் இழுத்துக்கொண்டு ஓடிவிடப்போறார்.'' என்றான் இன்னொருவன்.

இதைக்கேட்ட வாத்தியார் பொறுக்க முடியாமல் எழும்பிவிட்டார். பிறகென்ன நானும் எழும்பி மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு வீடு நோக்கிப் புறப்பட்டோம். அந்த முருகனை ஒருமுறை திரும்பிப்பார்த்தேன் நீயும் அல்லவா... என்று எனக்குள் சொல்லி விட்டு மோட்டார்


# ஆறாம் மாத நினைவஞ்சலி

## அமரர் சுப்பையா சிவசுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி அதிபரும், கூட்டுறவுச் சபையின் செயலாளரும், யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவரும்)

**தோற்றம்**
**13. 01.1943**

**மறைவு**
**02. 12.2011**



கூட்டுறவின் குரலாய்
கூட்டுறவாளருக்கு பக்க பலமாய்
கூட்டுறவு ஊழியர் உரிமைக்கு பேசுபவராய்
கூட்டுறவின் உயர்வுக்கு உழைப்பவராய் – வாழ்ந்தீர்கள்

பல்லாயிரம் பணியாளர்களை பயிற்றுவித்தீர்கள்
பலநூறு தலைவர்களை உருவாக்கினீர்கள்
பலமிழந்த போது கூட்டுறவுச் சபையை பலப்படுத்தினீர்கள்
பதவிகள் பல பெற்றீர்கள்
பணியாளராக மட்டுமா?
பணிப்பாளராக, உபதலைவராக, தலைவராக உயர்ந்தீர்கள்
இன்று எம்துறை உங்களை இழந்து நிற்கிறது
இழப்பெல்லாம் இழப்பல்ல
கூட்டுறவுத்துறைக்கு இதுபெரும் இழப்பாகிவிட்டது.

ஆறுமாதமென்ன?
நூறு ஆண்டுகளுக்கு
நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளோம்!
ஆறாம் மாத நினைவு நாளில் தங்களை
நன்றியுணர்வுடன் நினைவு கொள்கின்றோம்.

அன்னாரின் ஆறாம் மாத நினைவு தின நிகழ்வு நாளை (09.06.2012) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நினைவு தின ஏற்பாட்டுக்குழுத் தலைவர் பெ. கனகசபாபதி அவர்கள் தலைமையில் நடைபெறும்.
இந்த நிகழ்வில் கூட்டுறவாளர்களையும், அன்னாரின் பழைய மாணவர்களையும், கூட்டுறவுப் பணியாளர்களையும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

109, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

[illegible]

(19050) (45.6.9)




# விற்பனை பிரதிநிதி தேவை

உணவு உற்பத்தி நிறுவனத்துக்கு மோட்டார் சைக்கிள் ஓடக்கூடிய சாரதி அனுமதிப்பத்திரம் உடைய விற்பனைப் பிரதிநிதி (Salesman) தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி
விளம்பர இல.4364
மே/பா, உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(#/499)(6,14,10)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு இயங்குதளங்களை ஒருங்கே கொண்ட புதிய ரேப்லப்

அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுப் பயனர்கள் மத்தியில் பலத்த வரவேற்பைப் பெற்ற ஒரு சாதனம் தான் ரேப்லப் கணினிகள் ஆகும்.

இவை பொதுவாக விண்டோஸ், அப்பளின் மக், அன்ரோயிட் இயங்குதளங்களில் செயற்படக் கூடியவையாகக் காணப்பட்ட போதிலும் தனித் தனியாகவே இந்த இயங்குதளங்கள் நிறுவிப் பாவிக்கப்பட்டன.

ஆனால் தற்போது அந்த நிறுவனம் இரட்டை இயங்குதளங்களைக் கொண்டதும் இரண்டு பூட் பகுதிகளைக் கொண்டதுமான புதிய ரேப்லப்களை அறிமுகப்படுத்துகின்றது.

இதில் இயங்குதளங்களாக விண்டோஸ், அன்ரோயிட் ஆகியவை நிறுவப்பட்டிருக்கும் என்பது குறிப்படத்தக்கது.

## கணினியைப் பயன்படுத்திய நேரத்தை அறிந்துகொள்ள

கணினியை எவ்வளவு நேரம் நீங்கள் பயன்படுத்தி இருக்கிறீர்கள் என்று அறிய வேண்டுமா? அதற்கு அக்டிவிட்டி மொனிட்டர் என்ற புரோகிராம் உதவுகிறது.


இந்த புரோகிராம் ஒவ்வொரு விண்டோவும் எவ்வளவு நேரம் இயங்கியுள்ளது என்ற தகவலை நமக்கு தருகிறது.

ஒன்றுக்கு மேற்பட்ட விண்டோ என்றால் பயன்படுத்திய நேரத்தை வரைபடமாகவும் தருகிறது. விண்டோக்களை நாம் இணைத்தும் காணலாம்.

Work, School, Fun எனப் பிரிவுகளாகவும் இணைத்துக் காணலாம். குழந்தைகள் எமது கணினியைப் பயன்படுத்துவதாக இருந்தால், இத்தகைய கண்காணிப்புகள் அவர்கள் கணினியிலும், இணையத்திலும் என்ன செய்கிறார்கள் என்பதைக் காட்டும்.

இந்தப் புரோகிராமை **http://code.google.com/p/wamon/** என்ற முகவரியில் நீங்கள் பெறலாம்.





# பல் நகையகம் மூலம் பாட்டைக் கேட்கலாம்!

நியூயோர்க்கின் வடிவமைப்புக்கான புதிய பாடசாலையின் மாணவர் ஒருவர் ஓர் digital music player உடன் ஒரு துடிப்பு மோட்டரினைப் பொருத்தி அதனை தனது மேற்பற்களின் அச்சுவடிவமாக வாய்க்குள் பதித்தார்.

பாடல் ஆரம்பிக்கும்போது, இந்தத் துடிப்பு பலமானதாக இருக்கும். இதனால் காதுப்பன்னிகள் இல்லாமலேயே அவ்விசையைத் தெளிவாகக் கேட்கக்கூடியதாயிருக்கும்.

இசை அதிகளவாக இருக்குமாயின் அது உங்களது பற்களிலிருந்துதான் வருகின்றதென்பதை மற்றவர்களாலும் கேட்கக்கூடியதாயிருக்கும்.

இந்த நகையானது நெலிபோன்ற பாடகர் குழுக்களால் அணியப்படும் Grillz போன்ற நகையின் தோற்றத்தைப் போன்றதாகும்.

Grillz ஆனது பாடகர்களால் மிகவும் பிரபல்யமாகப் பயன்படுத்தப்பட்டுவருவதெனினும் பல்வைத்தியர்கள் இதுபற்றி எச்சரித்தே வந்துள்ளனர். தங்கம் அல்லது வைரம் போன்ற உலோகங்களைப் பற்களில் அணிவது உங்களது பற்களின் எனாமலினை அரிக்குமென்றும் இதனை அணியக்கூடாதென்றுமே பல்வைத்தியர்கள் கூறுகின்றனர்.

Chacin என்ற மாணவியால் இந்தக் கருவி Play&A&Grill என்று அழைக்கப்படுகின்றது. இது இசைக்கருவிகளின் புதிய கண்டுபிடிப்புகளில் கடந்த வாரம் இவரால் வெளியிடப்பட்டுள்ளது.

எனினும் இது தங்கத்தாலோ பிளாற்றினத்தினாலோ உருவாக்கப்படவில்லையென்றும் இவற்றை அகற்றமுடியுமென்றும் இவர் தெரிவித்தார்.

இதிலிருந்து வரும் இசை மூளைக்கு நேரடியாகச் செல்வதால் காதுப் பன்னிகளைப் பயன்படுத்தத் தேவையில்லை என்றும் கூறினார்.

### வலியின்றி ஊசி போடும்

# நவீன கருவி

மனிதனை வாட்டி வதைக்கும் நோய்களுக்கான நிவாரணிகளில் ஊசி மருந்து ஏற்றுவதும் ஒரு மருத்துவ முறையாகக் கையாளப்பட்டு வரப்படுகின்றது.

எனினும் இந்தச் செயன்முறையின் போது ஊசி பயன்படுத்தப்படுவதனால் வலி ஏற்படுகின்றது.

ஆனால் தற்போது வலியை ஏற்படுத்தாததும், ஊசி பயன்படுத்தப்படாததுமான நவீன மருந்து செலுத்தி ஒன்றைக் கண்டுபிடித்து சாதனை படைத்துள்ளார்கள் MIT ஆய்வாளர்கள்.

Jet&Injected Drugs என அழைக்கப்படும் இந்த மருந்து செலுத்தும் முறைமூலம் தசைப் பகுதியில் தேவைப்படும் ஆழத்திற்கு நோய் நிவாரணியைச் செலுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.



## பைல்களை மறைத்து வைக்க இலகு வழி

இந்தப் புரோகிராம் சரியாகத் தன் பெயருக்கேற்றபடியான வேலைகளைச் செய்கிறது. இந்த புரோகிராம் பைல்களை லொக் செய்வது மட்டுமின்றி, மற்றவர் கண்களிலிருந்து மறைக்கவும் செய்கிறது. இதன் சிறப்பம்சம் என்னவென்றால், எந்த கடவுச்சொல்லும் இன்றி இது செயற்படுத்துகிறது.

அந்தக்கால விண்டோஸ் 95 தொகுப்பில் செயல்படுவது போல இது செயற்படுகிறது. கறுப்பு பின்னணியில் வெள்ளை பொத்தான்களுடனும், பைல்களை ட்ராக் அண்ட் ட்ராப் வழியில் கொண்டு வரும் வசதிகளுடனும் செயற்படுகிறது. இதனைப் பெற **http://www.xoslab.com/** எனும் முகவரியை நாடலாம்.

# Hard Disk இல் ஏற்படும் கோளாறுகளை நீக்க இலவச மென்பொருள்

அதிக நாள்களாகப் பயன்படுத்தப்படும் Hard Disk இல் பலவிதமான கோளாறுகள் ஏற்பட்டு அதனால் பிழையான செய்தி காணப்படலாம். விண்டோஸ் இயங்குதளம் நிறுவப்பட்டுள்ள கணினியில்தான் இதுபோன்ற பிழையான செய்திகள் அதிகமாகக் காணப்படும். பிழையான செய்திகள் எதனால் ஏற்படக்கூடும்?

Hard Disk இல் மென்பொருள்களை நிறுவிப் பயன்படுத்துவோம். தேவை இல்லையெனில் மென்பொருள்களைக் கணினியில் இருந்து நீக்கி விடுவோம். நீக்கப்படும் மென்பொருளானது முழுமையாக நீங்காமல் சில File கள் கணினியிலேயே தங்கிவிடும். அந்த File களால் கணினியில் அடிக்கடி பிழையான செய்தி தோன்றலாம்.

இதுபோன்ற பிழையான செய்திகளை சரிசெய்ய ஒரு மென்பொருள் உதவுகிறது.

பிறகு மென்பொருளைக் கணினியில் நிறுவிக் கொள்ளவும். பின் இந்த அப்ளிகேஷனைத் திறந்து சோதனை செய்ய வேண்டிய டிரைவை தேர்வு செய்து, Read Only பொத்தானை அழுத்தி சோதனை செய்து கொண்டு பிழை செய்தி இருப்பின் Fix பொத்தானை அழுத்தவும்.

பிழை செய்திகளை நீக்கம் செய்ய வேண்டுமெனில் Fix and Recover பொத்தானை அழுத்தி இந்த பிழையான செய்திகளை மீட்டுக்கொள்ள முடியும். பின் கணினியை மறு தொடக்கம் [Restart] செய்துகொள்ள வேண்டும்.

இந்த மென்பொருளானது முற்றிலும் இலவசமாகும். விண்டோஸ் 7 இற்கு இது மிக சிறந்த மென்பொருளாகும். இணைய முகவரி : **http://wieldraaijer.nl**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணமோசடி செய்தவர் பிடிவிறாந்தால் கைதானார்

யாழ்ப்பாணம், ஜூன் 8

பண மோசடி செய்த குற்றத்துக்காக தவணை முறையில் குறித்த பணத்தைச் செலுத்தி வந்த நிலையில் தலைமறைவான நபர் நீதிமன்ற பிடிவிறாந்து மூலமாகக் கைது செய்யப்பட்டார். அவரை எதிர்வரும் 21ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இந்த வழக்கு யாழ். நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

2010 டிசெம்பர் 24ஆம் திகதி கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 4 லட்சம் ரூபா பண மோசடி செய்தார் என்ற அடிப்படையில் வழக்குத் தொடுக்கப்பட்டது. அதில் குற்றத்தை ஒப்புக்கொண்டு தவணை முறையில் பணம் செலுத்தி வந்த நிலையில் அவர் தலைமறைவாகினார்.

அவர் 40 ஆயிரம் ரூபா மற்றும் 2 லட்சத்து 66 ஆயிரத்து 238 ரூபா மோசடி செய்ததாக மொத்தம் மூன்று வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. அதில் ஒரு வழக்கில் அவரது மகன் ஒருவரும் தொடர்பு பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் நீதிமன்றினால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டிருந்தது. அவரைப் பொலிஸார் கைது செய்து நேற்று யாழ். நீதிமன்றில் முற்படுத்தினர். குறித்த நபரை எதிர்வரும் 21ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டது. (ங-4)

மணிவிழாக்காணும் வடமாகாணக் கல்விப்பணிப்பாளர்
திரு.ப.விக்னேஸ்வரன் அவர்களுக்கு வாழ்த்து



தக்கோர்கள் போற்றும் தகுதியெலாம்
பெற்றுள்ள விக்னேஸ்வரனே
விருப்புடனே-எக்கணமும்
கல்விப்பயிர் வளர்க்கும் காவலனே நன்றாற்றும்
செல்வனே வாழி சிறந்து!

வாழ்த்துவோர்
புலவர். ம. பார்வதிநாதசிவம்
குடும்பத்தினர்

(19068) (15-14)

# மண் ஏற்றியோருக்கு பிணை மறுப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 8

அரியாலையில் ரயில் தண்டவாளப் பாதையில் மண் ஏற்றினார்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட மூவருக்கும் யாழ். நீதிமன்றினால் பிணை மறுக்கப்பட்டது.

பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் நீதிவான் நீதிமன்றங்களினால் இவ்வாறான வழக்குகளுக்கு பிணை வழங்க முடியாததனால் யாழ். மேல் நீதிமன்றுக்கு வழக்கைப் பாரப்படுத்த உத்தரவிட்டு எதிர்வரும் 19ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

கடந்த மாதம் அரியாலையில் ரயில் பாதையில் உள்ள மண்ணை வெட்டி ஏற்றிக்கொண்டிருந்த நிலையிலேயே பொலிஸாரால் குறித்த மூவரும் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் ஓய்வுபெற்ற கிராம அலுவலர் ஆவார். (ங-4)

# நடைபாதையில் சாராயம்: மூவர் நேற்று மாட்டினர்

யாழ்ப்பாணம், ஜூன் 8

யாழ். நகரில் பெருந்தொகையான சாராயப் போத்தல்களை வைத்துக்கொண்டு நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்ட மூன்றுபேரை யாழ். பொலிஸார் நேற்றுக் கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து பெருந்தொகையான சாராயப் போத்தல்கள் மீட்கப்பட்டதாகவும் அதுபற்றி விசாரணை செய்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்கள் இன்று யாழ். நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாகவும் சட்டவிரோதமாக சாராயப் போத்தல்களை வைத்திருந்தமை மற்றும் விற்பனை செய்த குற்றச்சாட்டில் வழக்குப் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ங-4)

# ஈழப்பெண் அகதிக்காக ஆஸியில் மெழுகுவர்த்தி ஏந்திப் போராட்டம்

ஆஸ்திரேலியா வில்லா வூட் தடுப்பு முகாமில் கால வரையறையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை பெண் அகதிக்காக மெழுகுவர்த்தி ஏந்திப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

சுமார் 200 பேர் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர். 33 வயதான ரஞ்சினி என்ற பெண் அகதியை ஆஸ்திரேலிய அதிகாரிகள் காலவரையறையின்றி தடுத்து வைக்க உத்தரவிட்டுள்ளனர்.

கர்ப்பிணியான இந்தப் பெண், இரண்டு பிள்ளைகளின் தாய் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மெல்போர்ன் நகரில் வாழ்ந்து வந்த குறித்த பெண் கடந்த மாதம் குடிவரவு திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

எந்தவிதமான முன் அறிவித்தலும் இன்றி குறித்த பெண்ணையும் அவரது மகனையும் வில்லா வூட் தடுப்பு முகாமில் அதிகாரிகள் தடுத்து வைத்தனர்.

ஆஸ்திரேலியாவில் சுமார் 51 அகதிகள் இவ்வாறு கால வரையறையின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஆஸ்திரேலிய பாதுகாப்புப் பிரிவின் மதிப்பீடுகளின் அடிப்படையில் அகதிகள் காலவரையறையின்றி தடுத்து வைக்கப்படுகின்றனர். (வ)

# கணிதபாட பயிற்சிப் பரீட்சை

சாவகச்சேரி சீ.எஸ்.சீ கணினி கல்வி நிறுவனத்தின் அனுசரணையுடன் தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் கணித பாடத்திற்கு தோற்றும் மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை (பகுதி II ஏ) இன்று பாடசாலைகளில் நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (ந-9)

# மரண அறிவித்தல்கள்



## அப்புத்துரை தற்பரானந்தன்

(ஓய்வு பெற்ற கோட்டக்கல்விப்பணிப்பாளரும் சமாதான நீதிவானும்.)

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளரும், வட இலங்கை சங்கீத சபையின் செயலாளரும், சைவ வித்தியாவிருத்திச் சங்க முன்னாள் தலைவரும், கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையின் ஸ்தாபகரின் பேரனும், சமூக சேவையாளருமான அப்புத்துரை தற்பரானந்தன் அவர்கள் கடந்த (05.06.2012) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நகுலாம்பிகாதேவியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அப்புத்துரை- சேதுநாயகி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான சோதிநாகரத்தினம்-மாமாங்கம் தம்பதியரின் மருமகனும், நித்தியாணந்தன் (ஓய்வுபெற்ற நில அளவையாளர்), சர்வானந்தன் (சிமெந்துக் கூட்டுத்தாபனம்), குலகுணேஸ்வரி, குலகுணராணி, குலகுணசக்தி, காலஞ்சென்ற தேவானந்தன் (பொறியியலாளர்) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற சண்கந்தையா (ஓய்வுபெற்ற நூலகர்) மற்றும் செல்வக்குமாரன் (ஓய்வுபெற்ற அதிபர்), காலஞ்சென்ற தில்லைநடராஜா (நில அளவையாளர்) மற்றும் வடிவாம்பிகை, செல்வராணி, ஹேமாங்கினி, சித்திரா ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் (ஓய்வுபெற்ற பதிவாளர்) சகலனும் நிகேதினி (ஆசிரியை) சிவமயூரன் (கொமர்சல் வங்கி), சிவகரன், சிவஜீவன், சிந்துஜா, அர்ச்சுதன், ஆகியோரின் பெரியப்பாவும் கேதாரணி (U.S.A), பவதாரணி (U.K), குமரன் (Canada), குமுதினி (ஆசிரியை) ஜபாலின் (Canada), துவாரகன், கஜாணன், மைதினி, மாதினி, சாம்பவி, சர்வகா, விஸ்வநாதன், பிரணவன், ஜெயசீலன், சிவரூபன், ஆகியோரின் மாமனும் அட்சயா, அகரன், யோகிதா, சிவன்ஜா, ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.06.2012) சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பமாகி அதனைத்தொடர்ந்து கந்தரோடை சங்கம் புலவு மயானத்தில் அந்தியேட்டிக்கிரியைகள் நடைபெற்று தகனம் செய்யப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"ஆனந்தகம்"
Dr.சுப்பிரமணியம் வீதி,
கந்தரோடை, சுன்னாகம். (சி/515) (15-14)

தகவல்:
தற்பரானந்தன் நகுலாம்பிகாதேவி
(மனைவி)



## திருமதி சிவயோகம் செல்வராஜா (புதக்கா)

(ஓய்வு பெற்ற ஆசிரியை இராமகிருஷ்ணன் வித்தியாலயம் கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலை)

கந்தர்மடம் யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், சம்பியன் வீதி, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவயோகம் செல்வராஜா நேற்று (07.06.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான சுப்பிரமணியம்- அழகம்மா தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான இராசையா- செல்லம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற செல்வராஜாவின் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சம்பியன் வீதி,
கொக்குவில் (சி/514) (15-14)
பேராசிரியர் மா.சின்னத்தம்பி
(மருமகன்- யாழ்.பல்கலைக்கழகம்)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஞானம்மா இராஜசிங்கம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை, சண்டிலிப்பாய் வடக்கு தமிழ் கலவன் பாடசாலை)



ஆலங்குழாய் சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானம்மா இராஜசிங்கம் நேற்று (07.06.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம்-இராசம்மா தம்பதியரின் ஏகபுத்திரியும், காலஞ்சென்றவர்களான முத்துமாணிக்கம்-சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், முத்துமாணிக்கம் இராஜசிங்கத்தின் (இளைப்பாறிய கணக்காய்வு அத்தியட்சகர், Supdt of Audit) பாசமிகு மனைவியும், கௌரி (கனடா), கலாரஞ்ஜனி (பிரான்ஸ்), லதாரஞ்ஜனி (ஆசிரியை, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), டனராஜ் (Dr. யாழ். போதனா வைத்தியசாலை), ஹேமன்ரன் (ஆசிரியர், வவுனியா வெளிக்குளம் கனிஷ்ட உயர் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயும், கோபிகிருஸ்ணா, கிருஸ்ணமூர்த்தி (தனியார் போக்குவரத்து சாரதி-788 இளவாலை), தயா, கௌரி ஆகியோரின் பாசமிகு மாமியும், துசிதா, கிருசாந், நிரோஷன், நிலக்ஷினி, நிஷிஷன், நிஷாஷினி, யுலக்ஷினி, கோகுலக்ஷன், டனுலக்ஷன், டினோஜன், சுதர்ஜன், ஹரிஷன், கிரிஷா, ரோஷன், தன்யா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆலங்குழாய்,
சண்டிலிப்பாய். (19075)
இராஜசிங்கம் (கணவர்),
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## திருமதி செல்லம்மா கனகரத்தினம் (ஆத்தை)



பெரியமதவடி சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் செல்லம்மா நேற்றுமுன்தினம் (06.06.2012) புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தியநாதர்-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான காசிநாதர்-பொன்னுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கனகரத்தினத்தின் அன்பு மனைவியும், இரவீந்திரன் (ஆஸ்ரேலியா), வசந்தி (கொழும்பு), சுமதி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், வானதி, மோகனதாஸ், திருஞானசம்பந்தமூர்த்தி ஆகியோரின் மாமியும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், நடராசா, குலமணி, கனகரத்தினம், சிவசுப்பிரமணியம் மற்றும் அன்னம்மா (கனடா), நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அபிநயா, மிதுலா, ஹம்சிகா, யனுஜா, கேசிகா, சுலோசன், அனுசன், கிருத்திகா, ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (10.06.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெரியமதவடி, (19069) (15-14)
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.
தகவல்:
பிள்ளைகள் (இரவீந்திரன்- மகன்)

## திருமதி சுபத்திரை கலியாணசுந்தரம்

புதுக்குடியிருப்பு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுபத்திரை கலியாணசுந்தரம் நேற்று முன்தினம் (06.06.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 4ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பில் உள்ள மகளின் இல்லத்தில் நாளை (09.06.2012) சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் புதுக்குடியிருப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு (19067)(14-8) குடும்பத்தினர்

காணி விற்பனைக்கு

கே.கே.எஸ். வீதியில் தெல்லிப்பழை
துர்க்கை அம்மன்
ஆலயத்துக்கு முன்பக்கம்
9 ½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 6146 451

(19040)(45.6.9)

## அன்னா சனசமூக நிலைய அதிஸ்டலாப முடிவுகள்

எமது முன்பள்ளி மாணவர்களின் வளர்ச்சி நிதிக்காக எம்மால் நடத்தப்பட்ட அதிஸ்டலாபச்சீட்டு நேற்றுமுன்தினம் (06.06.2012) புதன்கிழமை அதிஸ்டம் பார்க்கப்பட்டது.

1ஆம் பரிசு - இல - 2712
2ஆம் பரிசு - இல - 3158
3ஆம் பரிசு - இல - 301

ஆறுதல் பரிசுகள்

1455, 2016, 294,1613, 2069, 1920, 2054, 2264, 61, 1507

தொடர்புகளுக்கு
சிவா-0778689568
அன்னா
சனசமூகநிலையம்
உடுவில் கிழக்கு, இணுவில்

(19074) (15-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடகளத்தில் சாதனை



யாழ்ப்பாணம், ஜூன் 8

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான 2012 ஆம் ஆண்டுக்கான தடகளப் போட்டிகள் கடந்த சனி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில் யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றன. இதில் ஆண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டம்,பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டம், 400 மீற்றர் தடைதாண்டல் ஓட்டப் போட்டி என்பவற்றில் புதியசாதனைகள் நிலைநாட்டப்பட்டன.

1984 ஆம் ஆண்டு பிரதேச செயலகங்களுக்கிடையில் இடம்பெற்ற தடகளப் போட்டியில் ஆண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்ட நிகழ்வில் வேலணைப் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த சண்முகப்பிள்ளை என்பவர் 35:16:00 நிமிடங்களில் ஓடிமுடித்ததே சாதனையாக இதுவரை இருந்தது. 28 வருடங்களாக முறியடிக்கப்படாமல் இருந்த இந்தச் சாதனையைத் தகர்த்து, இந்த வருடம் நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.ஞானேஸ்வரன் 35:12:02 நிமிடங்களில் ஓடி முடித்து புதிய சாதனை படைத்துள்ளார்.

பெண்களுக்கான 400 மீற்றர் தடை தாண்டல், 800 மீற்றர் ஓட்டப் போட்டி என்பவற்றில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த அனற் புதிய சாதனைகளைப் புரிந்துள்ளார்.

800 மீற்றர் ஓட்டப் போட்டியில் 2008 ஆம் ஆண்டு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ந.மேசி. 2 நிமிடம் 43.16 செக்கன்களில் ஓடி முடித்த சாதனையை, சண்டிலிப்பாய் பிரதேசத்தைச் சேர்ந்த அனற் 2 நிமிடம் 38.38 செக்கன்களில் ஓடி முடித்து முறியடித்து புதிய சாதனையை நிலைநாட்டினார். அத்துடன் பெண்களுக்கான 400 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் 2002 ஆம் ஆண்டு தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த வி.சேந்தினி 1 நிமிடம் 16.12 செக்கன்களில் ஓடி முடித்ததே சாதனையாக இருந்தது. அதனையும் அனற் 1 நிமிடம் 12.09 செக்கன்களில் ஓடிமுடித்து புதிய சாதனையைப் படைத்துள்ளார். (ங-23)



## மைலோக் கிண்ண வலைப்பந்து அராலி சரஸ்வதி மூன்றாமிடம்



வலி வடக்கு, ஜூன் 8

மைலோக் கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட பாடசாலைகளில் 14 வயதுப்பிரிவுகளுக்கிடையே நடைபெற்ற வலைப்பந்தாட்ட போட்டியில் அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.

மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் இடம் பெற்ற மூன்றாமிடத்துக்கான போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியும் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயமும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் சமநிலையில் காணப்பட்டாலும் கூட முதற் பாதியாட்டத்தில், அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் தனது ஆட்டத்திறனை வெளிப்படுத்தி மைதானத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. இதனால் 7:1 என்ற புள்ளிகள் என்று அந்த அணி முன்னிலையில் இருந்த நிலையில் முதற் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதியாட்டத்திலும்

இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்றன. இதனால் இரு அணிகளும் தலா 4 புள்ளிகளைப் பெற்ற நிலையில் இரண்டாம் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் அராலி சரஸ்வதி வித்தியாலய அணி 11:5 புள்ளிகள் என்ற அடிப்படையில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியை வெற்றிகொண்டு மூன்றாம் இடத்தைத் தட்டிக்கொண்டது. (ங-86)

## மாகாண உதைபந்தாட்டம் நகரசபை மைதானத்தில்

வடமாகாண திணைக் களத்தினால் பாடசாலை அணிகளுக்கிடையிலான 19 வயது ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி எதிர்வரும் 11ஆம்,12ஆம், 13 ஆம் திகதிகளில் வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் மோதவுள்ள அணிகளின் விவரம்-

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி எதிர் கிளிநொச்சி இந்துக் கல்லூரி, வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம் எதிர் முல்லைத்தீவு பாரதி வித்தியாலயம், வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயம் எதிர் கிளிநொச்சி முழங்காவில் மகாவித்தியாலயம், மன்னார் சென் ஜோசேப்வாஸ் மகா வித்தியாலயம் எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி, கிளிநொச்சி உருத்திரபுரம் மகா வித்தியாலயம் எதிர் வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலயம், மன்னார் சென். லூசியஸ் கல்லூரி எதிர் முல்லைத்தீவு செம்மலை மகா வித்தியாலயம், முல்லைத்தீவு கற்சிலை மடு வித்தியாலயம் எதிர் ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரி. இரண்டாம் சுற்றிலிருந்து 2011 ஆண்டு சம்பியனாக தெரிவு செய்யப்பட்ட மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரி மோதவுள்ளது.

2008 ,2009 ,2011 ஆகிய ஆண்டுகளில் மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரி சம்பியன் பட்டத்தை வென்றமை குறிப்பிடத்தக்கது. (ங-86 )

## கிண்ணியா மத்திய கல்லூரி திருமலை மாவட்ட சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 8

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும், இலங்கை பாடசாலை உதைபந்தாட்டச் சங்கமும் இணைந்து நடத்திய திருகோணமலை மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் அண்மையில் இடம்பெற்றது.

இதில் கிண்ணியா மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கிண்ணியா அல் அஸ்ரா கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் கிண்ணியா மத்திய கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது. (ங-23)



## சமபோஷ வெற்றிக்கிண்ண உதைபந்து திருமலையில்

யாழ்ப்பாணம் ,ஜூன் 8

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும் இலங்கை பாடசாலை உதைபந்தாட்டச் சங்கமும் இணைந்து நடத்தும் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவில் அடங்கிய பாடசாலைகளுக்கிடையிலான 13 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான "சமபோஷா" வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர் வரும் 18 ஆம், 19 ஆம் திகதிகளில் திருகோணமலை மக்கெய்சர் விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இதேவேளை கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான 13 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான போட்டி 20 ஆம்,21 ஆம்,22 ஆம் திகதிகளிலும் தம்பலகாம பிரதேச செயலகம் மற்றும் முள்ளிப்பத்தானை பிரதேச செயலகப் பிரிவுகளுக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான 13 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான போட்டி 23 ஆம், 24 ஆம் 25ஆம் திகதிகளிலும் இடம்பெறவுள்ளது.

மேற்படி போட்டிகளில் முதலாமிடத்தைப் பெறும் அணிகள் எதிர்வரும் யூலை மாதம் 6 ஆம் ,7 ஆம் ,8 ஆம் திகதிகளில் திருகோணமலையில் நடைபெறவுள்ள அகில இலங்கை ரீதியிலான உதைபந்தாட்டப் போட்டியில் பங்கு கொள்ளவுள்ளன. (ங-23)

# ஹட்ரிக் மகிழ்வில் இறம்பைக்குளம் மகளிர் ம.வி.

வலி. வடக்கு, ஜூன் 8

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் தொடர்ந்து மூன்றாவது வருடமாக உடற் பயிற்சிப் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் ஹட்ரிக் சாதனையைப் பதிவு செய்துள்ளது.

வட மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் மாவட்ட மட்டத்தில் வெற்றி பெற்ற பாடசாலை அணிகளுக்கு இடையேயான பெண்களுக்கான உடற் பயிற்சிப் போட்டி வவுனியா சரஸ்வதி வித்தியாலய மைதானத்தில் நேற்று முன்தினம் புதன் கிழமை பகல் இடம்பெற்றது.

இறம்பைக்குளம் மகளிர் ம.வி., வட மாகாண கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட முதலாவது போட்டியில் மாகாணச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டதுடன், கடந்த இரண்டு வருடங்களாகத் தொடர்ந்து மாகாணச் சம்பியன் பட்டத்தைத் தனதாக்கியிருந்தது. தொடர்ந்து மூன்றாவது முறையாக இந்த வருடமும் சம்பியன் கிண்ணத்தைப் பெற்று இறம்பைக்குளம் மகளிர் ம.வி. ஹட்ரிக் சாதனையைப் பதிவு செய்துள்ளது.

2009ஆம்ஆண்டுமாகாண சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட மானிப்பாய் மகளிர் கல்லூரி இந்த வருடம் இரண்டாம் இடத்தை பெற்றதன் மூலம் கடந்த ஐந்தாண்டுகள் இடம்பெற்ற போட்டிகளில் நான்கு வருடங்கள் இரணடாம் இடத்தைப் பெற்றுள்ளது.

மாகாண உடற்பயிற்சிப் போட்டிகளில் இந்த வருடமே முதல் தடவையாக வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மூன்றாமிடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ங-86)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை வந்தும் தப்பவில்லை இலங்கை



மழையின் கடைக்கண் பார்வை இலங்கையின் தோல்வியைத் தடுக்க முயற்சித்த போதும் அது முடியாமல் போக முதலாவது ஒருநாள் போட்டி பாகிஸ்தானிடம் 6 இலக்குகள் வித்தியாசத்தில் வீழ்ந்தது இலங்கை.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு பாகிஸ்தான் அணி விளையாடி வருகின்றது. முன்னதாக இடம் பெற்ற 'ரி-20' ஆட்டங்கள் கொண்ட தொடரில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றியைப் பெற்று சமநிலையில் நிறைவடைந்த நிலையில் 5 ஒரு நாள் ஆட்டங்களைக் கொண்ட தொடர் நேற்று ஆரம்பமானது.

பல்லேகல மைதானத்தில் பகலிரவு ஆட்டமாக இடம் பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மஹேல ஜெயவர்த்தன துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

மஹேல, டில்ஷான் ஜோடி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய போதும் சிறப்பான ஆரம்பத்தை ஏற்படுத்த தவறியது. மெதுவாக ஆடிய இந்த ஜோடி 4 பந்து பரிமாற்றங்களில் 8 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்திருந்த நிலையில் டில்ஷான் (5 ஓட்டங்கள்) அதிரடியாக ஆட முற்பட்டு ஆட்டமிழந்தார். தொடர்ந்து அடுத்த பந்து பரிமாற்றத்தில் மஹேலவின் (3 ஓட்டங்கள்) ஆட்டமிழப்பு வாய்ப்பு தப்பிய போதும் அதனை சரிவரப் பயன்படுத்தவில்லை.

ஆட்டத்தின் ஆறாவது பந்து பரிமாற்றத்தில் குல்லின் வேகத்தில் வெளியேறினார். தொடர்ந்து அசத்திய குல், சந்திமாலையும் (0) வெளியேற்ற 8.4 பந்து பரிமாற்றங்களில் 23 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்திருந்தது.

சங்ககார, தரங்க மெதுவாக இணைப்பாட்டத்தை ஏற்படுத்த முயன்றனர். இருப்பினும் சமி தனது வேகத்தை காட்ட சங்கா 9 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். அடுத்து நுழைந்த மத்தியூஸ் ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழக்க இலங்கை அணி 41 ஓட்டங்களுக்கு அரைவாசி இலக்குகளை இழந்தது. அதன் பின்னர் திரிமன்னே, தரங்க இணைந்து துடுப்பெடுத்தாடினர். அணியின் ஓட்ட எண்ணிக்கை மெதுவாகவே அதிகரித்ததால் அதிரடியாக ஆட முற்பட்ட தரங்க 10 ஓட்டங்களுடன் ஹபீஸின் பந்தில் போல்டானார். அணி தொடர்ச்சியாக இலக்குகளை இழந்தது. பின்வரிசையில் நம்பப்பட்ட துடுப்பாட்ட வீரான பெரேரா 17 ஓட்டங்களுடன் ஏமாற்றினார்.

இலங்கை அணி 27.3 பந்து பரிமாற்றங்களில் 81 ஓட்டங்களுக்கு 7 இலக்குகளை இழந்திருந்தது. இதன் பின்னர் 29 ஆவது பந்து பரிமாற்றத்தில் திரிமன்னேயின் பிடியெடுப்பை இலக்கு காப்பாளர் அஹமட் தவறவிட்டார். குலசேகரா, திரிமன்னே இணைந்து மெதுவாக இலங்கையின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தனர். 37 பந்து பரிமாற்றங்களின் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 107 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் மழை குறுக்கீடு செய்தது.

ஒன்றரை மணிநேரமாக மழை பெய்தமையால் இரு அணிகளுக்கும் டக்வேர்த் லூயிஸ் முறைப்படி 42 பந்து பரிமாற்றங்களாக குறைக்கப்பட்டது. அதன் பின்னர் மீண்டும் ஆட்டம் ஆரம்பமானதும் குலசேகரா, திரிமன்னே ஜோடி தங்களது இணைப்பை தொடர்ந்தது. பாகிஸ்தான் அணி களத்தடுப்பில் சொதப்பி பிடியெடுப்பு வாய்ப்புக்களை தவறவிட்டது.

இறுதியில் 8 ஆவது இலக்குக்காக 84 பந்துகளில் 50 ஓட்டங்கள் இணைப்பாக பகிரப்பட்டது. இது இலங்கை அணி பாகிஸ்தான் அணிக்கு எதிராக 8 ஆவது இலக்குக்காக பெறப்பட்ட மிகச் சிறந்த இணைப்பாட்டமாகும். ஆட்டத்தின் இறுதிப் பந்து பரிமாற்றத்தில் குலசேகர 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து இறுதிப் பந்தில் திரிமன்னே பவுண்டரி விளாச இலங்கை அணி 42 பந்து பரிமாற்றங்களின் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. திரிமன்னே ஆட்டமிழக்காது 42 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.



பந்து வீச்சில் சமி 19 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், குல் 24 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், ஹபீஸ் 20 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு இலகுவான இலக்கை விரட்டத் தொடங்கிய பாகிஸ்தான் அணிக்கு மலிங்க அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தார். அணி 11 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அஷார் அலி 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த யூனிஸ்கான் குலசேகராவின் பந்தில் 5 ஓட்டங்களோடு ' போல்ட்' ஆனார். அதன்பின் இணைந்த ஹ்பீஸ்-மிஸ்பா ஜோடி நிதானமாக ஓட்டங்களைக் குவித்தது. எனினும் 37 ஓட்டங்களுடன் ஹபீஸ் ஹேரத்தின் சுழலில் சிக்கினார். பின்னர் உமர் அக்மல் களமிறங்க மைதானத்தில் பந்துகள் பறக்கத் தொடங்கின. மிஸ்பாவும் உமரும் அணியை வெற்றிப் பாதைக்கு கொண்டு சென்றனர். எனினும் வெற்றியை நெருங்கும் சமயத்தில் பாகிஸ்தான் அணித் தலைவர் மிஸ்பா 'ரன் அவுட்' ஆனார். களத்தில் அக்மல் 36 ஓட்டங்களுடனும், அப்ரிடி 2 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். 34.1 பந்துப் பரிமாற்ற நிறைவில் பாகிஸ்தான் அணி 4 இலக்குளை இழந்து 135 ஓட்டங்களைப்பெற்று 'டக்வேர்த் லூயிஸ்' முறையில் வெற்றியீட்டியது. இலங்கையின் 3 இலக்குகளைத் தகர்த்த உமர்குல் ஆட்டநாயகனானார். (ந-5)

# ஸ்பெயின் முதலிடம்



சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் சர்வதேச தரப்படுத்தல் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. புதிய தரப்படுத்தலின் அடிப்படையில் முதல்நிலை அணியாக ஸ்பெயின் அணி தொடர்ந்தும் நீடிக்கிறது. அந்த அணி இரண்டாவது இடத்தைப் பெற்ற அணியை விட 164 புள்ளிகள் அதிகம் பெற்று முதலாவது இடத்தில் காணப்படுகிறது.

இரண்டாவது இடத்தில் இதுவரை காணப்பட்ட ஜேர்மனி அணி ஓர் இடத்திற்கு பின்தள்ளப்பட்டு 3 ஆவது இடத்தில் காணப்படுகிறது. 3 ஆவது இடத்தில் காணப்பட்ட உருகுவே அணி ஓர் இடம் முன்னேறி இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளது. 4 ஆவது இடத்தில் நெதர்லாந்து அணி தொடர்ந்தும் காணப்பட 6 ஆவது இடத்தில் காணப்பட்ட பிரேசில் அணி 5 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

7 ஆவது இடத்தில் காணப்பட்ட இங்கிலாந்து அணி 6 ஆவது இடத்திற்கும், 9 ஆவது இடத்தில் காணப்பட்ட ஆர்ஜென்ரினா அணி 7 ஆவது இடத்திற்கும் முன்னேறியுள்ளன. 8 ஆவது இடத்தில் குரோற்றியா அணி தொடர்ந்தும் காணப்படுகின்ற அதேவேளை, 9 ஆவது இடத்தில் டென்மார்க் அணி காணப்படுகிறது. டென்மார்க் அணி ஓர் இடம் முன்னேறிக் காணப்படுகிறது.

மிகப்பெரிய வீழ்ச்சியாக இதுவரை 5 ஆவது இடத்தில் காணப்பட்ட போர்த்துக்கல் அணி 5 இடங்கள் பின்தள்ளப்பட்டு 10 ஆவது இடத்தில் காணப்படுகிறது.

ஆசிய அணிகளில் ஜப்பான் அணி தற்போது முன்னிலையில் காணப்படுகிறது. அவ்வணி 7 இடங்கள் முன்னேறி தற்போது 23 ஆவது இடத்தில் காணப்படுவதோடு, ஆஸ்திரேலிய அணி 24 ஆவது இடத்தில் காணப்படுகிறது.

**இதுவரை 5 ஆவது இடத்தில் காணப்பட்ட போர்த்துக்கல் அணி 5 இடங்கள் பின்தள்ளப்பட்டு 10 ஆவது இடத்தில் காணப்படுகிறது.**

தெற்காசிய நாடுகளில் நேபாளம் 149 ஆவது இடத்திலும், பங்களாதேஷ் அணி 152 ஆவது இடத்திலும், இந்தியா 164 ஆவது இடத்திலும், பாகிஸ்தான் 181 ஆவது இடத்திலும், இலங்கை 184 ஆவது இடத்திலும் காணப்படுகின்றன. (5)

# 'யூரோ' கிண்ணத் திருவிழா இன்று கோலாகல ஆரம்பம்

உலக கிண்ணத் தொடருக்கு அடுத்து மிகப் பெரும் உதைபந்து திருவிழாவான யுரோ கிண்ணத் தொடர் இன்று ஆரம்பமாகிறது. இதில் சாதிக்க, நடப்பு சம்பியன் ஸ்பெயின் உட்பட ஜெர்மனி, இங்கிலாந்து போன்ற ஐரோப்பாவின் முன்னணி அணிகள் தயாராக உள்ளன.

யூரோ கிண்ணத் தொடரில் ஐரோப்பிய நாடுகள் மட்டுமே கலந்துகொள்ள முடியும். இதனால் தென் அமெரிக்க அணிகளான 5 முறை உலக சம்பியன் பட்டம் வென்ற பிரேசில், ஆர்ஜெண்டினா, உருகுவே, பராகுவே, சிலி போன்ற அணிகளின் அசத்தல் ஆட்டத்தை ரசிகர்கள் காண முடியாது.

இந்த முறை 14 ஆவது யூரோ கிண்ண உதைபந்து தொடரை (ஜூன் 8- ஜூலை 2) போலந்து, உக்ரைன் நாடுகள் இணைந்து நடத்துகின்றன. இதில் பங்கேற்கும் 16 அணிகள் நான்கு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. நடப்பு சம்பியன் ஸ்பெயின் அல்லது ஜெர்மனி அணி சம்பியன் பட்டம் வெல்லலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தொடர்ந்து முக்கிய தொடர்களின் இறுதியில் ஸ்பெயினிடம் தோற்று வரும் ஜெர்மனி எழுச்சி கண்டால், புதிய சம்பியனாக உலா வரலாம். பிரான்ஸ், இங்கிலாந்து, இத்தாலி, போர்த்துகல், நெதர்லாந்து உள்ளிட்ட அணிகளும் சவாலுக்குத் தயாராகவே உள்ளன.

இன்று வார்சாவில் நடக்கும் முதல் ஆட்டத்தில் 'ஏ' பிரிவில் இடம் பெற்றுள்ள போலந்து, கிரீஸ் அணிகள் மோதுகின்றன. சொந்த மண்ணில் களமிறங்கும் போலந்து, தொடரை வெற்றியுடன் தொடக்க வேண்டும் என்பதே உள்ளூர் ரசிகர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. கடந்த 1974, 1982 உலகக் கிண்ணத் தொடரில் மூன்றாவது இடம்பெற்ற பெருமைமிக்க போலந்து அணி, சமீப காலமாகச் சொதப்புகிறது. தற்போது ஐரோப்பாவின் மிகவும் பலவீனமான அணியாக அது கருதப்படுகிறது.இந்த முறை தொடரை நடத்தும் நாடு என்ற அடிப்படையில் தான் யூரோ கிண்ணத்தில் பங்கேற்கும் வாய்ப்பையே அது பெற்றது.

**யாருக்கு வாய்ப்பு**

யூரோ கிண்ணத்தை எந்த அணி வெல்லும் என்பது குறித்து போர்த்துக்கல் அணி தலைவர் கிறிஸ்டியானோ ரொனால்டோ கூறுகையில், "ஒரு பெட்டி நிறைய பணம் கொடுத்து, பந்தயம் கட்டச் சொன்னால் போர்த்துக்கல் அல்லது ஸ்பெயின் அணியைத் தான் தேர்வு செய்வேன். நான் சும்மா சொல்லவில்லை. எங்கள் அணி மீது அந்தளவுக்கு நம்பிக்கை உள்ளது. இது நடக்கவில்லை என்றால், ஸ்பெயின் அணிக்குதான் வாய்ப்புள்ளது. புயோல், டேவிட் வில்லா இல்லையென்றா லும், மற்ற வீரர்கள் துடிப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துகின்றனர். இதனால், இந்த அணி எப்படியும் இறுதிக்கு வந்துவிடும்" என்றார். (5)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை ரசிகர்களுக்கு நன்றி

இலங்கைக் கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளர் பதவியிலிருந்து சில மாதங்களுக்கு முன்னர் நீக்கப்பட்ட ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஜெப் மார்ஷ், இலங்கையின் கிரிக்கெட் ரசிகர்களுக்கு தனது நன்றியைத் தெரிவித்துள்ளார். தனக்கான ஆதரவை வழங்கியமைக்காகவே அவர் இந்த நன்றியைத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கிரிக்கெட் அணிக்கான பயிற்றுவிப்பாளராக கடந்த செப்ரெம்பர் மாதம் 2 வருடகால ஒப்பந்தத்தில் நியமிக்கப்பட்ட ஜெப் மார்ஷ், வெறும் மூன்றே மாதங்களின் பின்னர் அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அவர் நீக்கப்பட்ட போது அவர் நீக்கப்படுவதற்கான காரணங்களை வெளிப்படுத்தாத இலங்கைக் கிரிக்கெட் சபை, புதிய பயிற்றுவிப்பாளராக கிரஹம் போர்டை உடனடியாக நியமித்திருந்தது.

சில மாதங்களில் தன்னை ஒப்பந்தத்துக்கு மாறாக பதவியிலிருந்து நீக்கியமைக்கு எதிராக ஜெப் மார்ஷ் இலங்கைக் கிரிக்கெட் சபைக்கெதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்திருந்தார். அது தொடர்பாகக் கேட்கப்பட்ட போதே அவர் இலங்கை ரசிகர்களுக்கு தனது நன்றியைத் தெரிவித்தார்.

தற்போது இந்த விடயம் தனது வழக்கறிஞர்கள் கையில் காணப்படுவதால் அது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்க முடியாது எனத் தெரிவித்த ஜெப் மார்ஷ், தனக்கு வழங்கிய ஆதரவுக்காக இலங்கையிலுள்ள அனைவருக்கும் தனது நன்றியைத் தெரிவிப்பதாகவும் தெரிவித்தார்.

வெறும் 3 மாதங்களில் ஜெப் மார்ஷ் பதவி நீக்கப்பட்டமைக்கு



ஊடகங்களும், இலங்கை ரசிகர்களில் குறிப்பிட்ட பகுதியினரும் எதிர்ப்பை வெளியிட்டிருந்ததோடு, ஜெப் மார்ஷிற்குத் தங்களது ஆதரவை வழங்கியிருந்தனர்.

இலங்கையின் உலகக்கிண்ணம் வென்ற தலைவரான அர்ஜூன ரணதுங்க இந்தப் பதவி விலக்கலை இழிவானது என்று அழைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

## மினரியோவில் இணைந்தார் ரொனால்டினோ

பிரபல நட்சத்திர உதைபந்தாட்ட வீரர் ரொனால்டினோ, அத்லெடிகோ மினரியோ கால்பந்து அணியில் இணைந்தார்.

பார்சிலோனா மற்றும் ஏ.சி.மிலான் முன்னாள் நட்சத்திரம் ரொனால்டினோ ரியோடி ஜெனிரோவை சேர்ந்த பிளமிங்கோ அணிக்காக விளையாடி வந்தார்.

அந்த அணி ரொனால்டினோவுக்கு பேசியபடி சம்பளம் கொடுக்கவில்லை. இதையடுத்து பிளமிங்கோ மீது 16 மில்லியன் யூரோ நஷ்டஈடு கேட்டு வழக்கு தொடர்ந்து அதில் வெற்றியும் பெற்றார்.

வழக்கில் ரொனால்டினோவுக்கு சாதகமாக தீர்ப்பு வந்ததையடுத்து பிளமிங்கோ அணியிலிருந்து விலகுவதாக கடந்த சில தினங்களுக்கு முன்பு அறிவித்தார்.

இந்த நிலையில் ரொனால்டினோ மற்றொரு பிரேசில் கழக அணியான அத்லெடிகோ மினரியோ அணியில் நேற்றுமுன்தினம் இணைந்தார்.

SEIZING OPPORTUNITY
TRANSITION
E-TRANSITION provides futuristic designs with advance technology in the Business industry. We do Webdesign & development , software development, graphic design, digital 3d intro and many other services. in addition we are offering ICT & Degree classes.
A great chance to Join our successful team
Receptionist (Female)
Effective verbal & writing skills in english
Wordprocessing & Spreadsheet skills
Age limit 18-25
Ability to hadle publicrelationships
Marketing Executive (Female)
Effective verbal & writing skills in english
Ability to handle public relationship
Motorbike with license
Age limit 18-26
Please send us your CV on or before 11.06.2012
Email: etransition.net@gmail.com
(Postal: E transition, 166/3, Navalar road, Jaffna TP: 021-2219230)
(சி/511)

பணிப்பெண் தேவை
யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட வீடு ஒன்றுக்கு பணிப்பெண் தேவை
(19066) (15-14) T.P-0775438610

உடனடியாகத் தேவை
பிரபல கணினி நிறுவனத்திற்கு அலுவலக உதவியாளர் தேவை
தொலைபேசி:0718474239
74.சபாபதி லேன்.யாழ்ப்பாணம்.
தகைமை: OL, Ms-Office
(19060)

யாழ்ப்பாணத்தில் புதிய பிரிவுகள் ஆரம்பம்!!!
Diploma in Mobile Phone Repairing
(Software & Hardware Repairing)
(பல புதிய விடயங்களுடன்)
(With Practical Electronic)
சகலவகையான கைத்தொலைபேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார்கற்கை நெறி !!!
வகுப்பு ஆரம்பம் - வரும் ஞாயிறு காலை 11 மணி
உங்கள் பதிவுகளை உடன் மேற்க்கொள்ளவும் !!
விபரங்களுக்கு : UNI - ICT CAMPUS
No - 83, Palaly Road, Kantharmadam, Jaffna.
T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862
(சி/512)

GET QUALIFIED IN MARKETING WHILE YOU ARE WORKING



SLIM
•PCM
•PG Diploma in Marketing
வேலைக்கு செல்பவர்களின் வசதிக் கேற்ப
இத் தனித்துவம் மிக்க சந்தைப்படுத்தல் கற்கை நெறி உங்கள் துறைசார் திறன், தகுதி, தராதரத்தை உயர்த்திக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி தருகின்றது
பிரிவு 1
திங்கள், புதன், வெள்ளி — மாலை 6.30 முதல் 8.30 மணிவரை
பிரிவு 11
ஞாயிறு : காலை 9.00 மணி முதல் 3.00 மணிவரை
மேலதிக விபரங்களுக்கு : 021 4900 900
புதிய பிரிவு ஆரம்பம் 10.06.2012 காலை 10.00மணி
IIS CITY CAMPUS
#200,Sivan Pannal Road,Jaffna.
Tel:021 222 8060 Fax:021 222 6933
Email:info@iis.edu.lk Web: www.iis.edu.lk
(சி/502)

Diploma 2-6 Months
MS Office, DTP, Web Design, Hardware, Networking, Accounting, Autocad-2D & 3D, Multimedia
Course fee free (DTP, Web Design)
மேலதிக விபரங்களுக்கு தயக்கம் இன்றி MCAI CAMPUSடன் நேரில்
Qualified Lectures panel, 12 Years Experience
கல்வியங்காட்டில்
MCAI CAMPUS
Supported by Jaffna Computer Society
SMS Your name & Course to 775520940 & Get Schol.
243,Adiyapatham Road
Bus Route 750 / 751

Earn a UK Degree @ IIS CITY CAMPUS




COMPUTING
CIVIL ENGINEERING
QUANTITY SURVEYING
BUSINESS MANAGEMENT
புதிய பிரிவு ஆரம்பம் : 10.06.2012 காலை 10.00 மணி
வார, வாரஇறுதி நாள் பிரிவுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
IIS CITY CAMPUS
200, Sivan Pannal Road, Jaffna
Tel: 222 8060 Fax: 222 6933 Web: www.iis.edu.lk

ரூபா 19999.00 செலுத்தி கணனியொன்றினை வீட்டிற்கு எடுத்துச் செல்லுங்கள்.....
MARSHA SYSTEMS (PVT) LTD www.marshasystems.lk
SOLUTION TO THE PEOPLE



CLASSIC
Intel Pentium
Intel 3.0 Ghz (1 year)
Asrock G41 (3year)
2 GB DDR III (3year)
Hard Disk 80 GB (1year)
20" LCD compaq (3year)
UPS DCP (2year)
ATX Casing (1year)
DVD Writer (1year)
KEY Board
Mouse
ரூ.40000/-
ரூ.5000
Camera Phone இலவசம்
Conditions Apply
(சி/463)

வீடுகள் மற்றும் கட்டடவேலைகள் செய்து கொடுக்கப்படும்
புதிய வீடுகள் மற்றும் கட்டடவேலைகளும், திருத்தவேலைகளும் மிகவும் சிறந்த முறையில் அனைத்து வேலைகளும் குறுகிய காலப்பகுதியில்செய்துகொடுக்கப்படும்
தொடர்பு:- 0755007897
Email:-piratheesk@yahoo.com
(19031) (15-6)

## சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) கிளைக்குழு தெரிவுக்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது

மேற்படி சங்கத்தின் கிளை இலக்கம் ஒன்று தொடக்கம் இருபத்திமூன்று (1-23) வரையான கிளைகளுக்கான கிளைக்குழுத்தெரிவுக்கான கிளைப் பொதுச் சபைக்கூட்டம் (2012.06.10) ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்தது. எனினும் இக்கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தினால் தற்காலிகமாக பிற்போடப்பட்டுள்ளது. மேற்படி கிளைக்குழுத்தெரிவுக்கான கிளைப்பொதுச்சபைக் கூட்ட அறிவித்தல் சபை அங்கத்தவர்களுக்குப் பின்னர் அறிவிக்கப்படும் என்பதை அறியத்தருகிறோம்.


செயலாளர்.

(சி/9317)(15-6)

ஆங்கிலம் என்றால் SAAMSON
உலகிலுள்ள எல்லாக் குழந்தைகளுமே 2-4 வயதுக்குள் தம் தாய் மொழியைப் பேசப் பழகுகின்றன. தமிழ்க் குழந்தைகள் தமிழையும், ஆங்கிலக் குழந்தைகள் ஆங்கிலத்தையும் இவ்வாறே பேசப் பழகின. 2 வருடங்களில் ஒரு குழந்தை செய்யும் காரியத்தை ஏன் இன்றுவரை உங்களால் செய்ய முடியாமல் இருக்கிறது?
தவறான வழியில் புத்தகம், DVD, இலக்கணம், கணினி, வழியூடாக ஆங்கிலத்தைப் பழக முயன்றமையாலேயே இன்றுவரை உங்களுக்குக் கடினமாக இருக்கின்றது.
நீங்கள் சிறுகுழந்தையில் எவ்வாறு தமிழை மற்றவர்கள் பேச அவதானித்துப் பேசினீர்களோ அதே வழியிலேயே நாம் ஆங்கிலத்தைப் பழக்கப்படுத்துகின்றோம். 20 பேர் கொண்ட இம் 3 மாதப் பயிற்சிப் பட்டறையில் நீங்களும் பயிற்சி பெற விரும்பினால் 10.06.2012 இற்கு முன் எமது அலுவலகத்தில் பதிவு செய்துகொள்ளுங்கள்.
சனி, ஞாயிறு பிரிவுகள். பிரிவு -(I) 9-11, பிரிவு -(II) 11-01, பிரிவு -(III) 02-04,
அவதானிக்குக- ஒரு பிரிவில் 20 பேருக்கு மேல் கண்டிப்பாக அனுமதியில்லை.
(3 மாதப் பயிற்சிக் கட்டணம் ரூபா 3000)
SAAMSON ENGLISH 279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்.நகர். Tel- 0776214567

## மரண அறிவித்தல்

### முத்துக்குமார் தியாகராசா (காந்தி)



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் இல.134, பாண்டியன்குளம் நட்டாங்கண்டலை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமார் தியாகராசா (காந்தி) நேற்றுமுன்தினம் (06.06.2012) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (07.06.2012) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பாலியாறு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 134, பாண்டியன்குளம், நட்டாங்கண்டல்.*

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.06.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.